Registered as a News Paper

# மன்னா

பொழிவு - 12
குவிப்பு - 07
பக்கங்கள்- 20
விலை ரூபா 40.00
யூலை - 2009
(ISSN 1800-2641)

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/131/News/2009

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

## திருப்பயணத்தின் நினைவாக மரக்கன்றை நடும் திருத்தந்தை



திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் அண்மையில் மேற்கொண்ட புனித நாட்டுக்கான திருப்பயணத்தின்போது இஸ்ராயேல் நாட்டில் தனது பயணத்தின் நினைவாக மரக்கன்றை நடுகின்றார். அருகில் இஸ்ரேலிய ஜனாதிபதி சைமன் பெரஸ் காணப்படுகின்றார்.

## நோபேட் அடிகள் இறைபதம் அடைந்தார்!



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ம. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் (வயது 57) கடந்த யூன் மாதம் 20ம் திகதி மாரடைப்பால் மன்னாரில் காலமானார். 23ம் திகதி மன்னார் பேராலயத்தில் நடைபெற்ற இறுதி யாத்திரையின்போது பெருந்தொகையான குருக்கள், துறவியர், இறைமக்கள் அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி விடை கொடுத்தனர். (விரிவான விபரங்களை 7ம் பக்கத்தில் பார்க்கவும்.)

## ஆடுகளை தேடிச் செல்லும் நல்லாயன்

# இடம்பெயர்ந்த மக்களை சந்திக்கும் மன்னார் ஆயர்

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் வவுனியா மற்றும் செட்டிகுளம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களை சந்தித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து அவர்களின் குறைநிறைகளை விசாரித்து அம்மக்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முயற்சித்து வருகின்றார்.

இதைவிட மன்னார் மறைமாவட்ட குருக்களும் இன்னும் யாழ் மறைமாவட்ட குருக்களும் ஞாயிறு மற்றும் ஏனைய தினங்களில் இந் நலன்புரி நிலையங்களுக்கு சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்து வருகின்றனர். ஆயர் மற்றும் குருக்களது வருகையினால் தாம் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைவதாக இம்மக்கள் கூறுகின்றனர்.

இலகுவாக மக்களை சந்திக்க முடியாதபடி பலவிதமான கட்டுப் பாடுகளை அரசாங்கம் விதித்துள்ள நிலையில் பலவித சிரமங்கள் மத்தியிலேயே இந்நலன்புரி நிலையங் களுக்குள் குருக்கள் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





வவுனியா கல்வியியற் கல்லூரி முகாமில் இருக்கும் மக்களை அங்குள்ள சிற்றாலயத்தில் ஆயர் சந்திக்கின்றார்.

### ஒஸ்வோல்ட் ஆண்டகையின் பணிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து

# கொழும்பின் புதிய பேராயராக மல்கம் ரஞ்சித் ஆண்டகை நியமனம்

கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் புதிய பேராயராக அதிமேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் திருத் தந்தையினால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் கொழும்புப் பேராயராக பணியாற்றிய மேதகு ஒஸ்வோல்ட் ஆண்டகையின் பணிக்காலம் முடிவடைந்ததை அடுத்து அவர் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை புதிய நியமனத்தை மேற்கொண்டதாக வத்திக்கான் தெரிவிக்கின்றது.

**புதிய பணிப்பொறுப்பை ஏற்கும் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு மன்னாவின் செபங்களும் நல்வாழ்த்துக்களும்!**



## மன்னா பத்திரிகை விநியோகஸ்தர்களே!

உங்கள் அன்புக்குரிய அபிமான கத்தோலிக்க பத்திரிகையான மன்னா உங்கள் கைக்கு கிடைத்ததும் காலம் தாழ்த்தாமல் வழமையாக பத்திரிகையைப் பெறும் வாசகர்கள், மற்றும் குடும்பங்களுக்கு மன்னாவை விரைவாக வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். (மன்னா நிர்வாகம்)

## கத்தோலிக்க பத்திரிகை பற்றி திருத்தந்தை



"ஒவ்வொரு கத்தோலிக்க வீட்டிலும் ஒரு கத்தோலிக்க செய்திப் பத்திரிகை இருக்க வேண்டும்"

"கத்தோலிக்க பத்திரிகைப் பணி என்பது ஒரு முக்கியமான நற்செய்திப் பணியாகும்."

**திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்**

# மன்னா
## மனப்பொழிவு

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது அனைவரதும் கடமையாகும்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படை வசதிகள் தொடர்பான அக்கறை தொடர்ந்தும் பல கோணங்களில் இருந்து அதிகரித்துவருகின்றது.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் மிகவும் நெருக்கமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன.

சுமார் மூன்று இலட்சம் மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் முற்று முழுதாகப் பூர்த்திசெய்வது கடினமான காரியமாக இருந்தாலும் இவர்களின் தேவைகள் அடிப்படையானவை, அவசரமானவை. இதனை அலட்சியம் செய்வதோ அல்லது காலம் தாழ்த்துவதோ தொற்று நோய்கள் பரவவும், துர்நாற்றம் வீசவும், மக்கள் பாரிய ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கு முகங் - கொடுக்கவும் வழிவகுப்பதாகவே இருக்கும். மலசலக்கூடம், குழாய் நீர் வசதிகள் போதுமானதாக இல்லை எனவும் இளம் யுவதிகள், தாய்மார்கள் தங்கள் தேவைக்கு மிகுந்த நெருக்கடிகளை எதிர் நோக்கியிருப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன் 'ஈ'க்களின் தொல்லையை பெருமளவு எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலசலகூடம் போன்ற தேவைகளை பூர்த்தி செய்வது யார்? அரசாங்கமா? தொண்டர் நிறுவனங்களா? என்ற பிரச்சினையில் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் காலங்கடத்தவோ பிற்போடவோ முடியாது என்பதை மனதில் கொள்வது அவசியம்.

எத்தரப்பினராக இருந்தாலும் முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களின் குடிநீர், மலசலகூட வசதிகள் உட்பட மக்களின் அடிப்படைத் தேவைகளை துரிதமாகச் செய்துகொடுப்பது மிகவும் மனிதாபிமானக் கடப்பாடாகும்.

வன்னியின் கடுமையான போர் நடவடிக்கையின் போது பாரிய இழப்புக்களைச் சந்தித்த இந்த மக்கள் உயிர் தப்பினால் போதும் என்ற கையறு நிலையிலேயே பலவித நெருக்கடிகள், உயிராபத்துக்களைக் கடந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தஞ்சம் அடைந்தனர். துப்பாக்கிகளின் சத்தங்கள் முடிவுக்கு வந்தனவே தவிர இம்மக்களின் அவலங்களும், பெருமூச்சுக்களும், கண்ணீர்களும் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

### சொந்த மண்ணில் கால்பதிக்கக் காத்திருக்கும் மக்கள்

பல்வேறு விதமான ஏக்கங்கள் மத்தியில் வாழும் இம்மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் கால் பதித்து மீளக்குடியேறும் நாட்களுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

180 நாட்களுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்படுவார்கள் என்று அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் இடம்பெயர்ந்த மக்களை துரிதமாக குடியமர்த்துவதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் 180 நாள் கால வாக்குறுதி சாத்தியமாகுமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஏற்கனவே வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலய விஸ்தரிப்பு காரணமாக இடம்பெயர்ந்த வடபகுதி தமிழ் மக்கள் கடந்த இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக அகதிகளாகவே வாழ்ந்துகொண்டி - ருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அரசாங்கமானது இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த துரித நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அது அந்த மக்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்குமே பொருளாதார நெருக்கடிகளும், அரசியல் நெருக்கடிகளும் தீர வழிபிறக்கும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அருட்பணியாளர் நேசன்,
பதிப்பாசிரியர், மன்னா பத்திரிகை



# வாசகர் எண்ணங்கள்

### எப்படி நீ தோன்றினாய்? எப்படி நீ வளர்ந்தாய்?

எனது சோலையில் ஒரு மலராக மலர்ந்த மன்னாவே,
எப்படி நீ தோன்றினாய் எப்படி நீ வளர்ந்தாய் என்பது
தெரியாத வண்ணம் நீ வளர்ந்துவிட்டாய், வாழ்த்துகிறேன்!
இன்றுவரை எனக்குள் உறங்கிக் கிடக்கும்
வார்த்தைகளைத் தட்டி எழுப்புகிறாய்.
வாழ்க நீ, வளர்க உன்பணி, வருக நீ என் வாசல் தேடி!

- வி. யூட்சாந்தினி, துள்ளுகுடியிருப்பு, கீளியன்குடியிருப்புப்பங்கு

### மாநிலம் சுற்றிவரும் மகாராஜனே




மன்னாவே, என் மன்னவனே,
மாநிலம் சுற்றி வரும் மகாராஜனே!
மக்கள் மனதைத் தொட்டுவந்த மன்மதனே
இன்னும் உன் பணி சிறக்க
உன்னை வாழ்த்துகிறேன்.
வாழ்க நீ, வளர்க உன்பணி!

வி. ஜிவிதா, துள்ளுகுடியிருப்பு, கீளியன்குடியிருப்பு பங்கு

### சரியானதைப் புரியவைக்கும் மன்னா!

மன்னா, நீ ஆற்றிவரும் மகத்தான பணியை நினைத்து யாம் பெருமைப்படுகின்றோம், ஆறுதல் அடைகின்றோம், நன்றி நவில்கின்றோம். விசேடமாக அருட்தந்தை அல்விறட் அலெக்சாந்தர் வழங்கிய "ஒரு திறந்த மடல்" என்ற கட்டுரை எம்மை மெய்மறக்கச் செய்தது. சிங்கள மக்கள் தமிழ் மக்களின் உடல், உள, மனக் காயங்களைப் புரிந்துகொள்ளும் வகையில் மிகத்தெளிவான உண்மைகளை வெளிப்படுத்திய அருட்தந்தைக்கு தமிழினத்தின் பேரால் நன்றியைத் தெரிவித்துகொள்கின்றேன்.

அத்தோடு 'கருத்துக் களம்' என்ற பகுதியில் கட்டுரையை வழங்கிய வாகரை வாணன் அவர்கள் தீர்க்கதரிசனப் பார்வையாக இலங்கைத் திருச்சபையையும், வடக்குக் கிழக்கு ஆயர் குழாமையும் சிந்திக்க வைத்த அரிய கருத்தை வரவேற்று நிற்கின்றோம். அத்தோடு பழைய காலத்தை மறந்த சிலாப , நீர்கொழும்பு எம் உறவுகள் தமிழை மறந்து, புறக்கணித்து சிங்கள மயமாய் மாறியதை நினைவூட்டி உறவைப் புதுப்பிக்க, சிந்திக்க வைத்த வாகரை வாணன் அவர்களை மனமாற வாழ்த்தி தமிழினம் சார்பாக நன்றியை மன்னா மூலம் தெரிவிக்கின்றோம்.

- எஸ். அல்விறெட் சில்வா, தலைமன்னார்.

## உண்மையின் எண்ணங்கள்

# சமாதானத்தை நிலைநாட்ட நாம் எடுத்த முயற்சிகள்

அமெரிக்காவிலிருந்து எஸ்.ஞானக்கோன் மார்க்

"இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டும்தான் இருக்கிறது. நாங்கள் பயங்கரவாத இயக்கமான விடுதலை புலிகளுடன்தான் போராடுகின்றோம்" என்று இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடம் கூறிவந்திருக்கின்றது. நீண்ட காலத்திற்கு முன் - அதாவது 1958ல் ஆரம்பிக்கப்பட்ட இனப்பூசல் 2009ல் இறுதிக்கட்டத்தை அடைந்திருக்கிறது.

அக்காலத்தில் ஆட்சிபுரிந்த தலைவர்களான திருமதி. சிறிமா பண்டாரநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, திரு. ஆர். பிறேமதாசா, திரு. ரணில் விக்கிரமசிங்க, திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்கா போன்ற அனைவரும் இதைத்தான் உலகிற்கு கூறிவந்தார்கள். இதை எதிர்த்து அக்காலத்தில் இருந்த தமிழர்களின் தலைவர் தந்தை செல்வநாயகம் உட்பட பல தமிழ் பெரியவர்களும் இலங்கையில் இனப்பிரச்சினைதான் இருக்கின்றது என்று எடுத்துரைத்தார்கள்.

1958ல் உருவான இந்த இனமோதல் படிப்படியாக உச்சக்கட்டத்தை அடைந்தது. 1983, 1985, 1990, 1995, 2009 ஆகிய இக்காலப்பகுதியில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பல படுகொலைகள் நடந்தன. இதில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதில் அருட்தந்தை மேரி பஸ்ரியன், அருட்தந்தை ஜிம்பிறவுன், அருட்தந்தை பாக்கியரஞ்சித், அருட்தந்தை கருணாரெட்னம் போன்ற வடக்கைச் சேர்ந்த குருக்களும் இன்னும் கிழக்கிலங்கையைச் சேர்ந்த சில குருக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதையும் சர்வதேச சமூகம் கண்டும் காணாமல் இருந்தது.

2002இல் சமாதான ஒப்பந்த காலத்தில் மன்னார் வாழ்வுதய இயக்குனராக இருந்த அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகள் தலைமையில் 500 பேருடன் சைக்கிள் பாதயாத்திரை மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி செல்ல ஆயத்தம் செய்யப்பட்டது. இதற்கு மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இருந்தும் பல இளைஞர்கள் முன்வந்தார்கள். இது சிறப்பான முறையில் மன்னாரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மன்னார், வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம், புத்தளம், நீர்கொழும்பு வழியாக கொழும்பு சென்றடைந்தது. இதற்குச் சிங்கள மக்கள் பெரும் ஆதரவு வழங்கினார்கள். மதவாச்சியில் வைத்து மதவாச்சி மக்களால் வானவெடிகள் கொழுத்தி சைக்கிள்களில் வந்த மக்களுக்கு மாலை அணிவித்து மிகவும் சிறப்பாக சமாதானத்தின் பேரில் வரவேற்கப்பட்டார்கள். இதில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள். இவை அனைத்தும் சமாதானத்திற்காகவே நடைபெற்றது.

இதன் பிறகு இதே ஆண்டில் இலங்கையின் அரசியாம் மருதமடு அன்னையின் திருச்சுரூபப் பவனி இலங்கை முழுவதும் இடம்பெற்றது. இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதம் இன்றி அனைத்து இடங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிங்கள, தமிழ் மக்கள் வீதியோரங்களில் நின்று கைகூப்பி மடு அன்னையைக் கண்ணீரால் வரவேற்றார்கள். இதுவும் இலங்கை நாட்டின் சமாதானத்திற் -காக நடைபெற்றது.



இதைத் தொடர்ந்து இலங்கையில் சமாதானத் திட்டம் வரும் என்று பலராலும் எதிர்பார்க்கப் - பட்டது. மடு அன்னையின் தென்பகுதி பயணத்தின் பிறகு சிங்கள மக்களின் மத்தியில் நல்ல அபிப்பிராயம் இருந்தது. தமிழர்களுக்கு நல்ல தீர்வுத் திட்டம் கொடுக்கவேண்டும் என்று சிங்கள கத்தோலிக்க குருக்கள் தங்கள் ஞாயிறு மறையுரையிலும் கூறிவந்தார்கள்.

இதன் பிறகு 2002ல் வங்காலையின் முன்னாள் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணியாளர் விக்ரர் அவிதப்பர் தலைமையில் மன்னார் மாவட்ட ரீதியில் வங்காலைப் பங்கில் இருந்து சமாதானத்திற்கான தவக்கால பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. இதில் 2500ற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் கலந்துகொண்டார்கள். இது வங்காலை, நானாட்டான், முருங்கன், இசைமாலைத்தாழ்வு, மடுறோட், பறையனாலங்குளம், வவுனியா சென்று ஈற்றில் கோமரசன்குளத்தில் உள்ள கல்வாரித் திருத்தலத்தை அடைந்தது. இதுவும் சிங்கள மக்களால் வரவேற்கப்பட்டது. இதுவும் சமாதானத்திற்காக நடைபெற்றது.

இப்படியாக பொது மக்களாலும், சமயத்தலைவர்களாலும் சமாதானத்திற்கான முயற்சிகள் பல்வேறு தளங்களில் தொடர்ந்து நடைபெற்றன. இறுதியாக வன்னியில் நடைபெற்ற இறுதி இராணுவ நடவடிக்கையின்போது போர் நிறுத்தத்தையும், சமாதானத்தையும் வலியுறுத்தி உலகின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த 20ற்கும் அதிகமான இளைஞர்கள் பெரியவர்கள் என தீக்குளித்து இறந்துள்ளார்கள். சமாதானத்திற்கான இந்த எல்லாவிதமான தியாகங்களையும் உலக நாடுகள் கண்டும் காணாததுபோல் இருக்கின்றன.

கடந்த மூன்று மாத காலத்திற்குள் பல ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் பல ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கை, கால்கள், கண்களை இழந்து ஊனமுற்று உள்ளார்கள். இவற்றையெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரம் கூறியுள்ளது.

மக்களால் எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் அனைத்தும் செயலிழந்துவிட்டன. இறைவன் எம்மைக் கைவிட்டுவிட்டாரா என்ற அவலகுரல் வடக்கு, கிழக்குப் பகுதியில் இருந்து குறிப்பாக இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்கள் மத்தியில் இருந்து ஒலித்துக்கொண்டு இருக்கிறது. இறைவன் ஒருபொழுதும் எம்மைக் கைவிடமாட்டார். நல்லதோர் எதிர்காலம் நம் அனைவருக்கும் உண்டு என்று நம்புவோம். சமாதானத்திற்காக உழைப்போம்.

## சிரிப்பு (பூ)க்கள்

**மகன்:** பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான்தானே அப்பா?
**அப்பா:** ஓம். அதை நீ ஏன் கேக்கிறாய்?
**மகன்:** இல்லை அப்பா, நான் உங்கட 500 ரூபாயை எடுத்து 5 மாதம் ஆயிற்று!

♣ ♣ ♣ ♣ ♣ ♣

**டோசி :** தீயணைப்புப் படைவீரரைக் கட்டினது தப்பாப் போச்சு!
**கில்டா:** ஏன்டி?
**டோசி:** அடுப்பு எரிஞ்சாக்கூட வந்து அணைச்சிடுறாரு!

*ம. ஸ்ரீபனா, சாம்பன்கட்டைக்காடு, நானாட்டான்.*

**ராமு:-** தாஜ்மஹால் நமக்குக் கூறும் செய்தி என்னடா?
**சோமு:-** "செத்தாலும் செலவு வைப்பாள் காதலி" என்று கூறுகிறது.

**அம்மா:** வாடா கண்ணு, உனக்கு நிலாவைக் காட்டி சோறு ஊட்டுகிறேன்!
**குழந்தை:** பொய் சொல்லாதம்மா இன்றைக்கு அமாவாசை.

♣ ♣ ♣ ♣ ♣ ♣

**நோயாளி :** டாக்டர், எனக்கு மீசையே வளர மாட்டேங்கிது. ஏதாவது மருந்து இருக்கா?
**டாக்டர்:** லவ் பண்ணு. மீசை என்ன தாடியே வளரும்!

*J. டெவின்ஸ்ரன், புனிதவளனார் மா.இல்லம், மன்னார்*

**ஆசிரியர் :** பரீட்சை மண்டபத்தில் இருந்துகொண்டு என்னடா பக்கத்தில் பேச்சு?
**மாணவன்:** சந்தேகம் கேட்டேன் சேர்.
**ஆசிரியர்:** என்னடா சந்தேகம்? என்னிடம் கேள்.
**மாணவன்:** இன்றைக்கு என்ன பாடம் சார் பரீட்சை? தமிழா? கணக்கா?

*எஸ். எமர்சன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.*

# குருக்கள் அதிகமாகவும் நன்றாகவும் செபிப்பதன் மூலம் கிறிஸ்துவோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருக்கமுடியும்!

## 19 புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தி திருத்தந்தை மறையுரை

குருக்கள் அதிகமாகவும் நன்றாகவும் செபிப்பதன் மூலம் அவர்கள் கிறிஸ்துவோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருக்கமுடியும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறியுள்ளார். வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் உரோம் மறைமாவட்டத்திற்கென 19 புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தி மறையுறையாற்றிய திருத்தந்தை, கிறிஸ்துவின் பெயரில் மீட்பை அறிவித்து வரலாற்றின் போக்கை மாற்றிய திருத்தூதர்கள் போன்று புதிய குருக்களும் தங்களை முழுவதும் கடவுளுக்கு அர்ப்பணித்து வாழுமாறு வலியுறுத்தினார்.

இறைவனாம் தந்தையின் பெயரை அறிவதிலும் அவரின் முகத்தைக் காண்பதிலும் இயேசு அனுபவித்த அதே மகிழ்ச்சியைச் சீடரும், சிறப்பாக திருத்தூதரும் அனுபவிக்கின்றனர் என்ற அவர், கடவுள் காண முடியாதவராய் இருந்தாலும் புனித யோவான் தமது முதல் திருமடலில் சொல்லியிருப்பது போல, "நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகின்றோம், கடவுளின் மக்களாகவே இருக்கின்றோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்துகொள்ளவில்லை" என்று ஒருபுறம் சொல்கின்றோம் என்றார்.

உண்மைதான் யோவான் குறிப்பிட்டுள்ள உலகம் கிறிஸ்தவர்களைப் புரியாததால் நற்செய்தியின் திருப்பணியாளர்களையும் புரிந்து கொள்ளவில்லை என்ற திருத்தந்தை அதற்குக் காரணம் உலகம் கடவுளை அறியவில்லை அவரை அறிய விரும்பவும் இல்லை என்றார்.

இருந்தபோதிலும் உலகம் திருச்சபையின் அங்கத்தினர்களையும் ஏன் திருநிலைப்படுத்தப் - பட்ட அதன் திருப்பணியாளர்களையும் கறை படுத்தி அதனைக் கண்ணியில் சிக்க வைக்கிறது என்றும் திருத்தந்தை எச்சரித்தார்.

இந்த உலகின் மனநிலையும் சிந்திக்கும் போக்கும் திருச்சபையைக் கறைபடுத்த முடியும், ஏன் கறைபடுத்துகின்றது. எனவே நாம் தொடர்ந்து விழிப்பாய் இருக்கவும் நம்மைப் புதுப்பித்துக் - கொள்ளவும் வேண்டியிருக்கிறது என்றார் அவர்.

நாம் உலகில் இருக்கின்றோம். உலகின் போக்குப்படி செல்லும் ஆபத்தையும் எதிர் - நோக்குகின்றோம். சிலசமயங்களில் அவ்வாறு இருக்கின்றோம் என்று புதிய குருக்களிடம் கூறிய திருத்தந்தை புனிதமடையவும் கடவுளிடம் முழுவதும் சரணடையவும் செபமே சிறந்த வழி, எல்லாவற்றிற்கும் மேலாக அன்றாடத் திருப்பலி இந்நிலையை அடைய வழியாக இருக்கின்றது. என்று உரைத்தார்.

திருநற்கருணைக் கொண்டாட்டம் மிகப்பெரிய மற்றும் மிக உன்னதச் செபச் செயலாகும், இதிலிருந்து திருப்புகழ்மாலை, திருநற்கருணை ஆராதனை, லெக்சியோ டிவினா என்ற இறைவாசிப்பு, செபமாலைத் தியானம் ஆகிய பிற செப வடிவங்கள் தங்களது உயிர்ச்சாற்றைப் பெறுகின்றன என்றும் அவர் கூறினார்.

அதிகமாகவும் நன்றாகவும் செபிக்கும் குரு தன்னிலிருந்த அதிகம் விடுபட்டு நல்ல ஆயனாகவும் தன் சகோதரனுக்கு ஊழியனாகவும் இருக்கின்ற இயேசுவோடு அதிகம் ஒன்றித்திருக்க முடியும் என்று திருப்பலி மறையுரையில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக

## இத்தாலிய ஆயர் மன்றம் ஒரு மில்லியன் யூரோ உதவி

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட - வர்களுக்காக ஒரு மில்லியன் யூரோவை இத்தாலிய ஆயர் மன்றம் அன்பளிப்பு செய்தமைக்காக தனது நன்றியை அதிவண. மல்கம் ரஞ்சித்துக்கு ஐ.தே.கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

"தங்களின் தலையீட்டின் மூலம் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு மில்லியன் யூரோ ஒதுக்கப்பட்டுள்ளதாக வண. நெவில் ஜோ பெரேரா தெரிவித்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் காட்டுகின்ற அன்புக்கும் அக்கறைக்கும் இலங்கையின் மக்கள் பிரதிநிதியென்ற ரீதியில் உங்களுக்கு எனது நன்றிகள் என ஜெயலத் ஜயவர்தனா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மலையக மக்களுக்கான தனது பணியை முடித்து மறைமாவட்டம் திரும்பியுள்ள மாக்கஸ் அடிகளார்



இரத்தினபுரி மறைமாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்கள் சிறப்பான பணியைச் செய்தபின்னர் அருட்பணியாளர் எஸ். மாக்கஸ் அடிகளார் தனது மறைமாவட்டமான மன்னாருக்குத் திரும்பி - யுள்ளார். மூன்று வருடப் பணிக்காலத்தில் இவர் குறிப்பாக மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலேயே தனது பணியை மேற்கொண்டு அந்த மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

இரத்தினபுரி ஆயர் மற்றும் குருக்கள் இவருடைய அன்புப் பணியை பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இயல்பாகவே ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து பணிசெய்யும் மாக்கஸ் அடிகளார் மலையக மக்கள்மேல் உண்மையான கரிசனை கொண்டு அவர்களின் ஆன்மீக மற்றும் வாழ்வியல் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

## உரோமைக் கருத்தமர்வில் ஆயர் வின்சன்ற்



சான்ற் இஜிடியோ சமூகத்தவரால் (Sant' Egidio Community) ஆயர்களுக்காக உரோமாபுரியில் ஒழுங்குசெய்யப்பட்ட விசேட கருத்தரங்கில் பொதுநிலையினர் தேசிய ஆணைக்குழுவின் தலைவரான ஆயர் மேதகு வின்சன்ற் பெர்னாண்டோ (SSS) கலந்துகொண்டார்.

"இறைவனின் உண்மையான நண்பர்கள் மனுக்குலத்தின் உண்மையான நண்பர்கள்" என்பது திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் உள்ளுணர்வான வார்த்தைகள். அதாவது சான்ற் இஜிடியோ குழுமம் ஆரம்பிக்கப்பட்ட 41வது ஆண்டு நிறைவு 2009ம் ஆண்டு பெப்ரவரியில் உரோமாபுரியில் கொண்டாடப்பட்டது. இப்பொழுது நாளைய திருச்சபைக் கிறிஸ்தவர்களுக்கும் மேய்ப்பர்களுக்குமான 11வது சர்வதேச அமர்வு இடம்பெற்றது. அப்பொழுது திருத்தந்தை இந்த வார்த்தைகளைக் கூறினார். இதில் உலகின் நான்கு திசைகளிலுமிருந்து 78 கத்தோலிக்க ஆயர்கள் பங்குகொண்டனர்.

## பத்திரிகைச் செய்திக்கு யாழ் ஆயர் மறுப்பு

அண்மையில் ஒரு பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாக தனது மறுப்பு அறிக்கையை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் த மெசஞ்சர் **(The Messenger)** என்ற இலங்கையின் ஆங்கிலக் கத்தோலிக்க பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார். அந்த மறுப்பறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

"முல்லைத்தீவின் கிழக்குக்கரையோரமாக அமைந்துள்ள வலைஞர்மடம் என்னும் கிராமத்தில் எல்.ரீ.ரீ.யினர் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தித் தமது இயக்கத்தில் சேர்ப்பதற்கு கத்தோலிக்க குரு ஒருவர் உடந்தையாயிருந்தார் என்று அண்மையில் வெளியான ஒரு பத்திரிகையின் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டாயப்படுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றிந்தபோதும் எந்த ஒரு குருவும் இத்தகைய செயலில் ஈடுபடவில்லை. அவ்வேளை அந்தக்குருவானவர் தனது கடமையின் நிமித்தம் வேறிடத்திற்குச் சென்றிருந்தார். பிள்ளைகளும் அவர்களது பெற்றறோரும் அடைக்கலம் தேடிச்சென்ற ஆலயத்திற்குள் எல். ரீ. ரீ. யினர் புகுந்து பிள்ளைகளினதும் பெற்றோரினதும் விருப்பத்திற்கு மாறாகப் பிள்ளைகளைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் தவறான பத்திரிகைச் செய்தியைத் தொடர்ந்து இதை மையப்படுத்தி ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் அமைந்திருந்தையிட்டு நாம் அதிகம் கவலையடைகின்றோம். எந்த ஒரு கத்தோலிக்க குருவும் எல். ரீ. ரீ. யினரின் இந்த பலவந்த ஆட்சேர்ப்பை ஊக்குவிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகின்றோம். - **மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், யாழ்ப்பாண ஆயர்.**

## வவுனியா அன்னை தெரேசா சகோதரிகள் இல்லம் இடம்பெயர்ந்த மக்களால் நிறைந்துள்ளது!

வவுனியா அன்னை தெரேசா இல்லம் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் நிறைந்துள்ளது. வன்னி மற்றும் வவுனியா வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து வந்த 232 மக்களை அன்னை திரேசா சபைக் கன்னியர்கள் 9 பேர் இரவு பகலாகக் கண்காணித்துப் பராமரித்து வருகின்றார்கள்.

இங்கு கொண்டுவரப்பட்டுள்ள மக்களைப் பராமரிப்பதற்காக வருகை தந்துள்ள சபையின் பிராந்திய முதல்வர் அருட்சகோதரி அல்போன்ஸ் லிகோரி தகவல் தருகையில், வன்னி, வவுனியா, செட்டிகுளம் வைத்தியசாலைகளிலிருந்து வந்தவர்கள் இவர்கள். இவர்களது குடும்ப அங்கத்தவர்கள் யாரையும் கண்டறிய முடியாத நிலையில் 232 பேர் இங்கு கொண்டுவரப் பட்டுள்ளனர். வவுனியா வைத்தியசாலையில் இறக்கும் தருவாயிலிருந்தவர்களை அனுமதியுடன் நாம் இங்கு கொண்டுவந்தோம். அதிகமானோர் காயப்பட்டவர்கள். வவுனியா வைத்தியசாலைக்கு நாளாந்தம் நோயாளர் வந்துகொண்டிருந்ததால் ஒருசில நோயாளர்களுக்கு ஆரம்ப சிகிச்சை அளித்த பின்னர் அவர்களை எம்மிடம் அனுப்பிவைத்தார்கள். நாம் அனைவரையும் அன்புடன் ஏற்றுக்கொண்டோம்.

யாராவது வவுனியாவிலுள்ள அன்னை தெரேசா இல்லத்திற்கு உதவி செய்ய விரும்பினால் முகத்துவாரம் கொழும்பு 15 இல் அமைந்துள்ள "சாந்தி நிவாசா" இல்லத்தில் கையளிக்கவும் என்று அருட்சகோதரி லிகோரி கூறினார்.


வன்னியில் பணிசெய்த யாழ் மறைமாவட்டக்குரு

## பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரைக் காணவில்லை

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பிரான்சிஸ் ஜோசவ் (வயது 70) அடிகளாரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குளமங்கால் மல்லாகத்தைச் சேர்ந்த இவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். யாழ். மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் தலைவராகவும், யாழ் மறை மாவட்டத்தின் கத்தோலிக்க பத்திரிகையாகிய பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் சில ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்கள் முழுவதுமாக இடம்பெயர்ந்தபோது இவரும் வன்னிக்கு வந்து வன்னியில் தனது பணியைத் தொடர்ந்தார். கிளிநொச்சி மாவட்டம் அப்பாள் குளம் பகுதியில் பணியாற்றிய இவர், இறுதிக்கட்ட போர் நடைபெற்ற புதுமாத்தளன் பகுதியில் இருந்தபோது அவர் தொடர்பான தகவல்கள் தெரியவில்லை. வன்னியில் இறுதியாக இருந்த அனைத்துக் குருக்களும் வெளியேறிய நிலையில் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளின் நிலை எதுவும் தெரியவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கருச்சிதைவுக்கு எதிரான சுவரொட்டி நடவடிக்கை




கருச்சிதைவு குற்றச் செயல்களைக் குறைக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ள கத்தோலிக்க வைத்தியர் சங்கம் மனதை உருக்கக்கூடியதும் மனுச்செய்வதுமான ஒரு சுவரொட்டியை அச்சிட்டுள்ளது.

பிறக்காத ஒரு குழந்தை தனது அன்னையால் கொலைசெய்யப்பட்டதாகக் கூறி 17 வருடங்களின்பின் எழுதிய ஒரு மடல்தான் இதன் உள்ளடக்கம். ஒரு குழந்தையின் கண்களி - லிருந்து நீர் சொரிந்த வண்ணமாய் உள்ளதான ஒரு படமும் இதில் உண்டு. இதனை வெளியிடுவதற்கான அனுமதியை இலங்கை ஆயர் மன்றம் வழங்கியுள்ளது. இந்தச் சுவரொட்டிகளைத் தமது வைத்திய நிலையங் -களிலும், சத்திர சிகிச்சைக்கூடங்களிலும், ஆலயங்களிலும், ஒட்டும்படி சங்கம் வைத்தியர் -களையும் குருக்களையும் கேட்டு நிற்கிறது. இது மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளது.

## நீர்கொழும்பில் யேசுநாதரின் திருச்சுரூபம் திருட்டு

நீர்கொழும்பு ரயில் நிலையப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இயேசுநாதரின் திருச்சுரூபம் விசமிகளால் திருடிச்செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.


இது தொடர்பாக நீர்கொழும்பு ரயில் நிலையப் பொறுப்பதிகாரி பீட்டர் போல் கூறுகையில், நீர்கொழும்பு நகரில் சகல இன, மத மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இதனை சீர்குலைக்கும் நோக்கிலேயே இனந்தெரியாத குழுவினர் அல்லது நபரினால் இந்த செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுரூபம் வைக்கப் - பட்டிருந்த கண்ணாடிப் பேழை உடைத்து கீழே வீழ்த்தப்பட்டுள்ள விதம், அந்த கண்ணாடிப் பேழை வைக்கப்பட்டிருந்த கொங்ரீட் தூண் சேதமாக்கப்பட்டுள்ள முறை ஆகியவற்றைப் பார்த்தால் இச்சுரூபத்தை திருடுவது சம்பவத்தின் நோக்கமல்ல மாறாக மக்களிடத்தில் பிரச்சினை ஏற்படுத்துவதுதான் என்பது நன்கு விளங்குகிறது. இந்த இடத்தில் நீர்கொழும்பு பொலிசார் காலை முதல் இரவு 9.30 மணிவரை கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இச்சம்பவம் நள்ளிரவு வேளையில் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## மீண்டும் வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் முசலிப் பிரதேச மக்கள் தம் தாயக மண்ணில் வாழ்வை தொடங்கியுள்ளனர்

### அரிப்பு பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளார்

சொந்த இடத்திற்கு திரும்பி வந்துள்ளோம் என்ற மகிழ்ச்சியும், வீடு வாசல் சொத்துக்கள் போன்றவற்றின் அழிவுகள் குறித்த கவலையும் கலந்த உணர்வில் முசலிப் பிரதேச மக்கள் உள்ளனர். மீண்டும் வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் இம்மக்கள் தம் தாயக மண்ணில் வாழ்வைத் தொடங்கியுள்ளனர் என சிலாவத்துறை - முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். ஜெயபாலன் அடிகளார் தெரிவித்தார். மீளக்குடியேறிய தனது பங்கு மக்கள் தொடர்பாக மன்னாவுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறியதாவது ;



2007ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் தமது இல்லிடங்களைவிட்டு வெளியேற்றப்பட்ட இந்த மக்கள் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல்வேறு கிராமங்களிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்து வந்தனர்.

முதல் கட்ட மீள்குடியேற்றம் கடந்த ஏப்ரல் 30ந் திகதி நடைபெற்றது. சவேரியார் புரம், முசலி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 117 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். இரண்டாம் கட்ட மீள்குடியேற்றம் கடந்த மே மாதம் 9ந் திகதி நடைபெற்றது. அரிப்பு, எஸ். பி. பொற்கேணி, மருதமடு, கூழாங்குளம், பண்டாரவெளி, மேத்தன்வெளி, புதுவெளி போன்ற கிராமங்களைச் சேர்ந்த 600ற்கும் அதிகமான குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

வீடுகளில் இருந்த பல பொருட்கள் காணாமல் போயுள்ளன. மற்றும் சவேரியார் புரம், பொற்கேணி போன்ற ஆலயங்களில் இருந்த பொருட்களும் காணாமல்போய் உள்ளன.

கடந்த யூன் 22ந் திகதி தொடக்கம் இருபத்தி நான்கு மணித்தியாலங்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக படிப்படியாக புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. பய உணர்வோடு மீளவந்த மக்கள் இப்போது பய உணர்வற்று, பதட்டம் இல்லாமல் சுமுகமாகத் தமது வாழ்வை ஆரம்பித்துள்ளனர். தொழில் முயற்சிகள், பாடசாலைகள் வழமைபோன்று இயங்க ஆரம்பித்துள்ளன என்று ஜெயபாலன் அடிகளார் தெரிவித்தார்.

முள்ளிக்குளம் மற்றும் கொக்குப்படையான் கிராம மக்கள் பற்றிக் கேட்டபோது, இந்த இரண்டு கிராமங்களிலும் நிலக்கண்ணிவெடி அகற்றப்படாத நிலை இருப்பதாகவும், மக்கள் உடனடியாக இந்த இடங்களுக்குச் செல்வது சாத்தியமற்றது என அரசு கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளார் தன் பங்கு மக்களோடு இடம்பெயர்ந்து வந்து நானாட்டான் பங்குமனையில் தங்கியிருந்து தன் மக்களுக்கான ஆன்மீக மற்றும் இதர பணிகளை முன்னெடுத்து வந்தார். தற்போது சிலாவத்துறை பங்குமனையில் இருந்துகொண்டு தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

மீண்டும் தம் சொந்த இடத்தில் புதிய வாழ்வை ஆரம்பித்துள்ள பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளாருக்கும் சிலாவத்துறை - அரிப்புத்துறை பங்குமக்கள் அனைவருக்கும் இறையாசீர் வேண்டி மன்னா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

## பேசாலைப் பங்கில் செபமாலைப் பேரணி

பேசாலைப் பங்கில் கடந்த 31-05-2009 அன்று மாபெரும் செபமாலைப் பேரணி நடைபெற்றது.

அன்னையை அலங்கரித்த தேர் லூர்து கெபியில் இருந்து திரேசா வீதியூடாக அன்ரனிஸ் வீதியால் வலம் வந்து யூட்வீதியில் உள்ள கலாச்சார மண்டப அரங்கில் முதலாம் தரிப்பிடமாக நிறுத்தப்பட்டது. அங்கு மரியா பக்தி பற்றி பங்குத்தந்தை அருட்ணி. இ. அகஸ்ரின் அடிகளாரினால் ஆழமான மறை உரை வழங்கப்பட்டது. அதன்பின் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளாரால் மரியன்னையின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது.

பின்னர் புகையிரத வீதியூடாக வேளாங்கண்ணித் திருச்சுரூபம் அமைந்துள்ள அரங்கிற்கு தேர் எடுத்துவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடு தொடங்கியது. அதில் மறையுரை நிகழ்த்திய குருமுதல்வர் நற்கருணை எமது வாழ்வில் ஆன்மீக உணவாக அமையவேண்டும் என வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் 3000இற்கும் மேற்பட்ட மக்கள் பக்தியாகக் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அன்னை வேளாங்கண்ணி வீதி என்ற புதிய வீதியின் பெயர்ப் பலகை குருமுதல்வர் அவர்களினால் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது. அடுத்து அன்னை திரேசா வீதியை உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் திறந்துவைத்தார்.

- ஜே. அன்ரன் பிரான்சிஸ், பேசாலை 08.


## கீரி கர்த்தர் ஆலயத் திருவிழா



மன்னார் கீரி எனப்படும் புதிதாக மக்கள் குடியமர்ந்த கிராமத்திலுள்ள கர்த்தர் ஆலய திருவிழா கடந்த மே மாதம் 22ம் திகதி சேவியர் குருஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இத்திருவிழாவிற்கான ஆயத்தங்களை எழுத்தூர் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரன் மரியதாஸ் லியோன் அவர்கள் மேற்கொண்டு இருந்தார். ஆயத்தநாள் வழிபாடுகளை அருட்பணியாளர்கள் வசந்தகுமார், ரூபன், றொக்சன், ஆகியோர் நடாத்தினார்கள்.

## ஆயரின் வரவால் அகமகிழ்ந்த மக்கள்





கடந்த மே மாதம் 03ம் நாள் நலன்புரி நிலையத்தில் முடங்கிக்கிடந்த எமது உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொணர்ந்த நாள். இறை பராமரிப்பின் மிகுதியை எமக்கு உணர்த்திய நாள். சோர்ந்துபோன எமது மனங்களிலே நம்பிக்கை ஊட்டிய நாள்.

ஆம், பூந்தோட்டக் கல்வியியற் கல்லூரி நலன்புரி நிலையத்திலே சுமைகளால் சோர்ந்து, உறவுகளை இழந்து, உடைமைகளை இழந்து சொந்தங்களைப் பிரிந்து, அங்கங்களை இழந்து, கண்ணீர் நிறைந்த காவியங்களைத் தாங்கியவர்களாய் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்த எம்மை எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் சந்தித்த நாள்.

அவரது வருகை சோகத்தின் விளிம்பில் துவண்டு கிடந்த எமது மனங்களில் மகிழ்வைத் தந்தது. அன்றைய ஞாயிறு திருப்பலியை ஆயர் அவர்களும், அவருடன் வந்த குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் - கொடுத்தனர்.

எமது சோதனைகளையும், வேதனைகளையும், கவலைகளையும் கண்ணீர்களையும் தமதாக்கி அவற்றை இறைபாதத்தில் காணிக்கையாக்கி ஆயர் அவர்கள் இறைதந்தையிடம் எமக்காகப் பரிந்துபேசி மன்றாடினார்.

திருப்பலியை நிறைவேற்றியபின் ஆயர் உரையாற்றினார். அதில் எமக்கு ஆறுதல் தருகின்ற, நம்பிக்கை ஊட்டுகின்ற பல கருத்துக்கள் நிறைந்திருந்தன. பின்னர் எமது தேவைகளை எடுத்துச் சொல்லுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

துன்பத்தால் துவண்டிருந்த மக்கள் தமது ஏக்கங்களையும் தேவைகளையும் ஆயர் முன்னிலையில் எடுத்தியம்பினர். அத்தனை ஏக்கங்களையும் தேவைகளையும் பொறுமை - யோடும், பரிவோடும் கேட்ட ஆயர், “என்னால் இயன்றவரை முயற்சி செய்து உங்களுக்காக கடவுளிடமும் மனிதரிடமும் பரிந்துபேசி உங்கள் எதிர்ப்பார்ப்புக்கள், தேவைகளை நிறைவுசெய்ய முயற்சிப்பேன்” எனக் கூறினார்.

- திருமதி வசந்தி சுவாந்தக் குருஸ்

## வங்காலையில் மடுமாதாவின் திருச்சுரூப ஸ்தாபகம்




வங்காலைப் பங்கில் இரத்தினபுரி வட்டாரத்தில் மே மாதம் 31ந் திகதி காலை 9.00 மணியளவில் மடுமாதாவின் திருச்சுரூபம் உதவிப் பங்குத் தந்தை அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அவர்களால் ஸ்தாபகம் செய்துவைக்கப்பட்டது.

மடுமாதாவின் சுருவக்கூடு மற்றும் கட்டட நிர்மாண வேலைகள் அப்பகுதிவாழ் மக்களின் பங்களிப்புடனும் சில பேருபகாரிகளின் நன்கொடைகளுடனும் மேற்கொள்ளப்பட்டது.

வங்காலை உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அவர்கள் வழிபாட்டினை ஆரம்பித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து வங்காலை புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரர் எஸ். விஜயதாசன் அவர்கள், ஆசியுரையினை வழங்கினார். இந்நிகழ்வில் பங்கு மக்களுடன் அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர். ஈற்றில் ஆலய மேய்ப்புப் பணிச்சபையின் உபசெயலர் திரு, எஸ். சூசைநாயகம் றெவ்வல் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது. தகவல் : பெப்பி

## நலம்பெறச் செபிப்போம்!



பம்பைமடுப் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். அன்ரன் அடிகளார் கடந்த யூன் மாதம் 23ம் திகதி நடைபெற்ற வாகன விபத்தில் முழங்கால் பிசகு காரணமாக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். இவர் நிறைவான சுகம்பெற்று விரைவில் தமது வழமையான பணிகளுக்குத் திரும்பச் செபிப்போம்!

## அஞ்சலிக்கின்றோம்!



- வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஒல்பன் இராஜசிங்கம் (அமதி) அடிகளாரின் மூத்த சகோதரர் அண்மையில் கனடாவில் காலமானார். அடிகளாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். சகோதரரின் ஆன்மா இறைவனில் அமைதியடைவதாக!

- யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் செபநேசரெட்னம் அவர்களின் அன்புச் சகோதரி கடந்த யூன் மாதம் 25ம் திகதி மன்னாரில் காலமானார். செபநேசரெட்னம் அடிகளாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். சகோதரியின் ஆன்மா இறைவனில் அமைதியடைவதாக!

### விவிலிய மறைபரப்பு ஆணைக்குழுவினால் ஏற்படுத்தப்பட்டுவரும்

## ‘நம்பிக்கை வாழ்வு மாதிரி கிராமங்கள்’

மன்னார் மறைமாவட்ட விவிலிய மற்றும் மறைபரப்பு ஆணைக்குழுவானது நற்செய்தி அறிவிப்பு ஆண்டின் முக்கியத்துவத்தை செயற்படுத்தும் முகமாக மன்னார் மறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குகளிலி - மிருந்தும் ஒரு கிராமத்தைத் தெரிவுசெய்து, அதனை “விசுவாச மாதிரிக் கிராமமாக” (MODEL FAITH VILLAGES) உருவாக்கும் நோக்கத்துடன் தொடர்ச்சியான புதுப்பித்தல் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனை இயக்குனர் அருட்பணி. ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி) அவர்களும் அவருடன் இணைந்த பணியாளர் குழுவும் செயற்பட்டு வருகின்றனர்.

பின்வரும் பங்குகளிலுள்ள கிராமங்களில் இப்புதுப்பித்தல் முயற்சிகள் பங்குத்தந்தையரின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன. தலைமன்னார் பங்கில் பியர், அளவக்கைப் பங்கில் மடுக்கரை, தோட்டவெளிப் பங்கில் கொன்னையன் குடியிருப்பு, எழுத்தூர் பங்கில் பட்டித்தோட்டம், பம்பைமடுப் பங்கில் தாஸ்கோட்டம், கற்கிடந்த குளம் பங்கில் தம்பனைக் குளம், கீளியன்குடியிருப்புப் பங்கில் பாவிலுப்பட்டான் குடியிருப்பு, வஞ்சியன் குளப்பங்கில் மாதிரி கிராமம், பேசாலைப்பங்கில் காட்டாஸ்பத்திரி ஆகிய கிராமங்களில் இந்தப் புதுப்பித்தல் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

முதலில் பணியாளரின் உதவியுடன் வீடுகளைத் தரிசித்து, படிவம் மூலம் விபரம் திரட்டி, பின்பு குழுக்களாகப் பிரித்து செபப்பயிற்சி, இறைவார்த்தைத் தியானம் போன்றவற்றை வழங்குவதோடு குடும்பங்களுக் -கிடையே ஒப்புரவு முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இப்புதுப்பித்தல் முயற்சிகள் மூலம் மக்களை ஒரு ஆழமான விசுவாச வாழ்விற்கு இட்டுச் செல்வதே எமது நோக்கமாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தினந்தோறும் தனது அழைப்பை உணர்ந்து இறைவனோடும் அயலவரோடும் ஆழமான உறவில் வாழ வழிசமைத்துக் கொடுக்க வேண்மென்பதே எமது இலக்காகும் என ஸ்ரனி அன்ரனி அடிகளார் குறிப்பிட்டார்.

## வாழ்வு தரும் வார்த்தை

# என் துன்ப நாளில் நான் ஆண்டவரை நாடுகின்றேன்

**"என் துன்ப நாளில் நான் ஆண்டவரை நாடுகின்றேன்!"**

பற்பல பிரச்சனைகளோடு வரும் மக்களை நாம் பார்க்கிறோம். பல ஊர்களுக்குச் செல்லும் போதும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தும் போதும் பலதரப்பட்ட மக்களையும் சந்திக்கிறோம். தங்கள் குறைகளைச் சொல்லும்போது கேட்கிறோம்.

'கெட்ட ஆவி' பிடித்திருக்கிறது என்றும் 'பேய்' பிடித்திருக்கிறது என்றும் பலர் வருகின்றனர்.

தற்கொலை செய்துகொண்ட ஒருவருடைய ஆவி இன்னொருவரை பிடித்திருக்கிறது என்று சொல்லி பலர் வருகின்றனர்.

மந்திரவாதிகள் ஏவி விட்டார்கள் என்று சொல்லியும் வீடுகளில் தொல்லையாய் இருக்கிறது என்றும், தொழில் முடங்கிப்போய் விட்டது என்றும், திருமணம் தடைப்பட்டுவிட்டது என்றும் சொல்லி பலர் ஜெபிக்க வருகின்றார்கள்.

"செல்வமும் செல்வாக்கும் இருக்கும்போது பலருக்கு நான் உதவி செய்தேன். இப்போது நான் ஏழையாய்ப் போனேன். என்னிடத்தில் உதவிபெற்றவர்கள் எல்லாம் நல்ல நிலையில் இருக்கிறார்கள். எனக்கு உதவி செய்ய இப்போது யாருமில்லை. எல்லோருக்கும் நான் பாரமாய்ப் போனேன். என்னிடம் முகம் கொடுத்துக்கூட யாரும் பேசுவதில்லை" என்று சொல்லி வேதனைப்படுகிறவர்கள் பலர் உண்டு.

பலராலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாக நினைத்து உள்ளத்திலே வெம்பிப்போனவர்கள் பலர். வெம்பி விழுந்த மாங்காய் என்று சொல்லுவார்களே! இதுபோலவே ஒருசிலர் உள்ளத்திலே வெம்பிப்போய் ஆறுதல் இன்றி தனிமையில் வாடுகின்றனர்.

ஒருசில வயதான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தவர்கள். உயர்ந்த அந்தஸ்தில் வந்த பிள்ளைகளோ முதிர்ந்த வயதில் வாழும் பெற்றோர்களை கவனிக்காத ஒரு நிலை. ஆறுதல் தேடி பிள்ளைகளிடமோ, சொந்தக்காரர்களிடமோ அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் யாருடனுமோ பேச முடியாது ஒரு தனிமை நிலை.

**"எனக்கென்று யாரும் இல்லை"** என்ற மனநிலையோடு வாழும் எத்தனை நோயாளிகள்! எத்தனை பணக்காரர்கள்!

**உடல் வியாதியினால் துன்பப்படுபவரை விடவும் மன உளைச்சலினால் வேதனைப் -படுகிறவர்கள் அதிகமே!**

இது தவிர பாவத்தின் சுமையால் பல்லாயிரம் பேர் தகாத நட்பு, தகாத செயல்கள், உறவுகள் என்று சொல்லி மனதிலே குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மனச்சாட்சி மரத்துப்போய் இருந்தாலும்கூட சில சந்தர்ப்பங்களில் 'நான் பாவம் செய்து விட்டேன்' என்று சொல்லி வேதனைப் படுகிறவர்களும் உண்டு.

"யாரிடத்தில் சொல்லி விடுதலை பெறலாம்? யாரிடத்தில் மனதைத் திறந்து பேசலாம்?" அதிலும் ஒரு சிலர், நான் ஒரு பாவி, எனக்கு மன்னிப்பே இல்லை" என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டு அவநம்பிக்கைப் -படுகிறவர்களும் உண்டு. அவநம்பிக்கையின் காரணமாக கோவிலுக்குப் போகாமலும் குடிப் பழக்கம் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாவதும் உண்டு.

இத்தகைய நிலையில் இருக்கின்றவர்கள் இந்தச் சங்கீதத்தின் வசனத்தைப் படித்து தியானித்து ஆறுதல் பெறுவார்களாக!

**"இறைவனை நோக்கி என் குரல் எழும்பிற்று! அவரை நோக்கிக் கூப்பிடுகிறேன்! எனக்கு செவிசாய்க்கும் வண்ணம் கடவுளைக்கூவி அழைக்கிறேன். என் துன்ப நாளில் நான் ஆண்டவரை நாடுகின்றேன்!" (சங்கீதம் 76:1).**

உடல் சார்ந்த துன்பங்கள், குடும்பப் பாரங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் இன்னும் எத்தனை எத்தனையோ பிரச்சினைகளால் வாடும்போது தூக்கம் இல்லாமல் இராப்பகலாய் சிலர் குழம்பிக் கொண்டே இருப்பார்கள். யாரிடத்திலும் சொல்லி ஆலோசனை பெறவும் விரும்ப மாட்டார்கள். பிரச்சினைகளை நினைத்து நினைத்து வேதனைபட்டுக்கொண்டே இருப்பார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு இந்தத் திருப்பாடல் ஓர் அழைப்பை விடுக்கின்றது. "என் துன்பநாளில் நான் ஆண்டவரை நாடுகிறேன்!"

**ஆண்டவரை நாடுவதற்கும் அவரை நோக்கிக் கரம் விரிப்பதற்கும் சலிப்படையக் கூடாது. சலிப்பின்றி ஆண்டவரையே நோக்கி ஜெபிக்கின்றபொழுது நம் இதயத்திலே ஒரு ஆறுதல் பிறக்கும்.**

வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் திண்றிக்கொண்டிருக்கும் ஒருவர் சலிப்பின்றி ஆண்டவரிடம் கரம் விரித்தால், ஆண்டவரையே நினைத்து பெருமூச்சுவிட்டால், அவருடைய விண்ணப்பத்திற்கு ஆண்டவர் தீர்க்கமாய் பதில் சொல்வார்.

கடந்தகால வாழ்க்கையின் துன்பத்தையே நினைத்து வேதனைப்படுகிற ஒருவர் துன்புறுத்தியவரை மன்னித்து, அனுபவிக்கின்ற துன்பத்தை ஆண்டவர் பாதத்தில் வைத்து, ஆண்டவரையே எண்ணிக் கரம் உயர்த்திச் ஜெபித்தால் அவருக்கும் ஆண்டவர் ஆறுதல் தருவார். நெஞ்சிலிருக்கும் கலக்கத்தை அவர் எடுத்துவிடுவார். நமது சிந்தனைக்கும் எட்டாதவிதத்தில் அவருடைய கருணையை அனுபவிப்போம். கடவுளுடைய வழி புனிதமானது என்பதை உணர்வோம்.

### இயேசுவின் காலத்தில்!

இன்று போலவே அன்றும் இயேசுவின் காலத்தில் மக்கள் அவதிப்பட்டார்கள். பல்வேறு துன்பத்தினால் வேதனைப்பட்டவர்கள் இயேசுவைத் தேடிவந்தார்கள். இயேசு பற்பல நகரங்கள், ஊர்களில் எல்லாம் சுற்றிவந்து அவர்களுடைய ஜெபக்கூடங்களில் போதித்தார். விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தார். வந்த மக்களின் நோய் பிணியெல்லாம் குணமாக்கினார் (மத்தேயு 9:35).

மக்கள் கூட்டம் கூட்டமாக அவரிடத்தில் வந்தார்கள். அந்த மக்களோ நல்லதொரு வழிகாட்டியில்லாமல் தவித்துக்கிடந்தார்கள். ஆயன் இல்லா ஆடுகளைப்போல் தவித்தார்கள். அவர்கள்மீது ஆண்டவர் அக்கறைகொண்டார். அவர்கள்மீது மனமிரங்கினார் (மத்தேயு 9:36).

அநாதைகள், விதவைகள், நோயாளிகள், தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், பேய் பிடித்தவர்கள், பித்துப்பிடித்தவர்கள் என்று சொல்லி பலவிதமான மக்கள் ஆண்டவர் காலத்திலே வாழ்ந்தார்கள். அவர்களை வழிநடத்த நல்ல வழிகாட்டிகளும், உண்மையுள்ள போதகர்களும் இல்லாத நேரம்! மக்கள் தவித்தார்கள், "யாரிடத்தில் போய் எங்கள் குறைகளைச் சொல்வோம்? எங்கேபோய் எங்கள் சுமைகளை இறக்குவோம்?" என்று பிரம்மித்துக் கொண்டிருந்தார்கள்.

இயேசுவோ நகரங்கள், கிராமங்கள் எல்லாம் சுற்றி அலைந்தார். மக்களைச் சந்தித்தார். அவர்களோடு பேசினார். அவர்கள் உள்ளங்களைத் தொட்டார். உடல் வியாதி -களிலிருந்தும் விடுதலை கொடுத்தார்.

**"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன்! உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவுக்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது. என் சுமை எளிது" (மத்.11:28-30)**

நம் ஆண்டவர் இயேசு பலவிதமான மக்களையும் சந்தித்துக்கொண்டிருந்தார். கிராமம் கிராமமாக சென்றுகொண்டிருந்தார். செல்வந்தர்களையும் சந்தித்தார். ஏழைகளோடும் உறவாடினார். துன்பப்படுகிறவர்கள் நொறுக்கப் -பட்டவர்கள், ஒவ்வொருவரோடும் ஆண்டவர் பேசினார்.

இப்படிப் பலரையும் ஆண்டவர் சந்திக்கும்போது அவர்களோடு பேசும்போது சிந்திக்கிறவர் ஒரு கேள்வி எழுப்புவார். "இயேசு ஆண்டவர் இந்தப் பூமிக்கு எதற்காக வந்தார்?" இசையாஸ் இறைவாக்கினர் சொல்லும் பதில்: "மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார். நம் நோய்களைச் சுமந்துகொண்டார்... நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார். அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம்" (இசையாஸ் 53:4-5).

அருட்தந்தை
வி. இக்னேசியஸ், சே.ச.



உண்மைதான்! இயேசு மனிதனின் சுமைகளை எல்லாம் தன் சுமையாக ஏற்றுக்கொண்டார். ஆண்டவர் இரு கரம் விரித்து அழைக்கிறார். இந்தப் பூமியில் சோர்ந்து போனவர்கள் எல்லோரையும் அழைக்கிறார். இந்தப் பூமியில் சோர்ந்துபோனவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தைரியத்துடன் ஆண்டவரிடம் வரலாம்.

**"சலிப்பின்றி ஆண்டவரை நோக்கி என் கைகளை விரித்தேன்"** என்று சங்கீதம் சொல்வதுபோல் நாமும் சலிப்பின்றி இயேசுவைத் தேடுவோம். அவருடைய ஆறுதலைப் பெறும் வரையிலும் அவரை நோக்கிக் கரங்களை விரிப்போம்.

அநேக சந்தர்ப்பங்களில் சோர்ந்துபோன மக்களைப் பார்க்கிறோம். சில நாட்கள், சில வாரங்கள் ஜெபிப்பார்கள். ஆனால் சோர்ந்து போவார்கள். ஒரு சிலருக்கு ஒரு இரவு கழிந்து போவதே பாரமாயிருக்கும். காலையில் எழுப்பினால் மாலை எப்போது வரும் என்று ஏக்கத்தோடு காத்திருப்பார்கள்.

ஆண்டவர் நம் சுமைகளைச் சுமக்கிறார். "சில நேரங்களில் ஆண்டவரையே நினைத்து நினைத்து பெருமூச்சு விடுகிறேன். அவரை எண்ணும் -போதெல்லாம் ஆறுதல்பெற விரும்பாமல் அவரையே நினைத்துக்கொண்டிருக்க விரும்புகிறேன். அதுவே ஆறுதலாக உள்ளது."

அநேக சந்தர்ப்பங்களில் ஜெபிக்கப் போவதற்கு முன்பாக சிலர் ஓடிவந்து என்னிடம் கண்ணீர் வடிப்பார்கள். "எனக்காகச் ஜெபியுங்கள்" என்று ஒரு பெண்மணி இப்படிக் கண்ணீரோடு வந்தார். "என் சொந்தக்காரர்களை நினைத்து நினைத்து வேதனைப்படுகிறேன்" என்றார். இந்த வார்த்தைகளை உங்களில் பலர் சொல்லுவீர்கள். "இந்தப் பூமியில் வாழ்வதே எனக்கு பாரமாயிருக்கிறது." என்பார்கள். இப்படி இரவு பகலாய் பாரச்சுமையோடு உருண்டு கொண்டிருக்கிற உங்களை ஆண்டவர் அழைக்கிறார். பாரமாய் இருக்கிறதே என்று வேதனைப்படுகிறவர்களை, சுமைகளைச் சுமந்து சுமந்து சலித்துப்போனவர்களை, இந்த உலகிலே வாழவே விருப்பமில்லை என்று இருக்கின்ற உங்களை இயேசு அழைக்கிறார்.

### செம்மறி புருவையாம் இயேசு!

ஒரு நாள் இயேசு யோர்தான் நதிக்கரையிலே நடந்துக்கொண்டிருக்கிறபோது, ஸ்நாபக அருளப்பர் அவரைக் கண்டு, அவரைச் சுட்டிக்காட்டி யூதர்களுக்குச் சொன்னது, "இதோ கடவுளுடைய செம்மறி! இவரே உலகின் பாவங்களைப் போக்குகிறவர்" (யோவான் 1:29).

பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்கள் மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டியை வெட்டி பலி கொடுத்தார்கள். அதன் இரத்தத்தில் ஒரு பாதியை பீடத்தில் வைத்துவிட்டு, ஒரு பாதியை மக்கள் கூட்டத்தின்மீது தெளித்தார்கள். அந்த ஆட்டுக்குட்டியை கடவுளின் செம்மறி என்று சொன்னார்கள்.

அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் அவர்களை மீட்டது. தேவ பிரஜைகளை பரிசுத்தப்படுத்தியது. அந்த ஆட்டுக்குட்டியே மக்களின் பாவச் சுமைகளை எல்லாம் சுமந்துகொண்டது என்பதற்கு அடையாளமாக ஆட்டுக்குட்டியின் மேல் கரம் விரித்தார்கள். அப்படி விரித்ததனால் அவர்களின் பாவச்சுமைகளை எல்லாம் அந்த ஆட்டுக்குட்டியின்மீது சுமத்தினார்கள். அவர்களின் சுமைகளை எல்லாம் அந்த ஆட்டுக்குட்டி சுமந்தது.

**'கடவுளின் செம்மறி'** என்று சொன்னாலே யூதர்களுக்கு அந்த வார்த்தையின் அர்த்தம் புரிந்தது. 'கடவுளின் செம்மறி' மக்களின் பாவங்களையும், பாரங்களையும் சுமந்தது.

இப்போது இயேசுவே இந்தச் சுமைகளைச் சுமக்கும் செம்மறிப்புருவை என்பதை ஸ்நாபக அருளப்பர் மக்களுக்கு சுட்டிக்காட்டினார். எனவே நம் உள்ளத்தை பாதிக்கும் பாவச் சுமைகளானாலும் சரி, நம் உடலைப் பாதிக்கும் பிணிகளானாலும் சரி எல்லாவற்றையுமே இயேசு ஆண்டவர் தன் தோள்மேல் சுமந்துகொள்கிறார்.

நம் சுமைகளை ஆண்டவர்மீது சுமத்தும் பொழுது, ஆண்டவர்தானே நம்முடைய சுமையைச் சுமந்துகொண்டு நம்மை எளிமையிலும் இனிமையிலும் நடக்க அழைக்கிறார். இயேசு நமது சுமையைச் சுமந்து கொள்வார் என்பது மட்டுமல்ல, அவர் தாங்கிச் செல்லும் சுமையை நமக்கு தருவார். அப்படி அவருடைய இதயத்தின் சுமைகளை நாமும் கண்டு உணர வேண்டும்.

"Discover the Heart of Jesus!" இயேசுவின் இதயத்தைக் கண்டுபிடியுங்கள். புனித மார்க்ரட் மேரி அலக் கூக் என்ற அருட்சகோதரிக்கு இயேசு தன் இதய இரகசியங்களை வெளிப்படுத்தினார்.

இயேசுவின் இதயத்தின் அன்பையும் இரகசியத்தையும் ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் இதயத்துள்ளே நுழைந்து பார்க்க வேண்டும். அதற்கு இயேசு உங்களை அழைக்கிறார். ஆண்டவர் நம்மை அவர் இதயத்தினுள் நுழைந்து பார்க்க அழைக்கிறார். அவர் அண்மையில் அமரவும், அவர் இதயச் சுமைகளை சுமக்கவும் அழைக்கிறார்.

சிந்தித்துப் பாருங்கள்! உலகத்திலே மக்கள் ஒரு திசையிலிருந்து மறு திசைக்கு ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள். செல்வம் திரட்டுவதற்காகவும், செல்வாக்கும் புகழும் பெறுவதற்காகவும் மக்கள் இந்த உலகத்தில் எங்கெல்லாமோ அலைகிறார்கள்! ஓடுகிறார்கள்! அதனால் கிடைத்தது என்ன? களைத்துப் போகின்றார்கள், சலித்துப் போகின்றார்கள். இப்படிப்பட்டோர் நம் ஆண்டவரின் வழிமுறைகளைக் கண்டுணர வேண்டியது அவசியம். இதற்காகவே அவர் நம்மை அழைக்கிறார். ஆண்டவருடைய சுமை, சுமை -யாகவே இருக்காது. ஆண்டவரின் இதயத்தில் நுழைந்தால், அங்குள்ள அதிசயங்களையும் அதன் உண்மைகளையும், அங்கிருந்து பாயும் கிருபைகளையும் அவர்தானே நமக்கு வெளிப்படுத்துவார்.

அவருடைய இரகசியங்களை அறிந்துகொள்ள விருப்பமா? யாருக்கு இயேசு தன் இரகசியங்களை வெளிப்படுத்துகின்றார். மத்தேயு நற்செய்தியில் 16:13-20, 17:1-8 வரை உள்ள செய்தியைப் படித்துப்பாருங்கள். இயேசு தனது அன்புச் சீடர்களை தனிமையில் அழைத்துச் சென்றார். இதுவரைக்கும் இயேசுவை ஒரு தச்சன்தான் என்று அறிந்திருந்தவர்களுக்கு தம்மையே வெளிப்படுத்தினார். ஆகவே இயேசு தமக்கு விருப்பமானவர்களுக்கு, பிரியமானவர் -களுக்கு மட்டுமே தம் இதய இரகசியங்களை வெளிப்படுத்துவார். இயேசுவுக்கு பிரியமாயிருக்க நாமும் முயற்சி செய்வோம்.

இயேசுவின் இதயத்துக்கு பிரியமாய் வாழ இரண்டு காரியங்களை ஞாபகத்திலே வையுங்கள்! ஒன்று அன்பு மற்றது தாழ்ச்சி (Love and Humility). அன்பு இதயத்திலே இருக்கும்பொழுது அங்கே கசப்பு, பகை, வர்மம், வைராக்கியம் இவற்றிற்கு இடம் இருக்காது. தாழ்ச்சி இருக்கும் இடத்தில் கர்வம், சுயநலம், தற்பெருமை போன்றவற்றிற்கு இடம் இருக்காது.

அன்பும் தாழ்ச்சியும் நம் இதயத்தை நிரப்ப, இயேசுவின் இதயத்தில் நுழைந்து அவருடைய இதய இரகசியங்களை நாம் தெரிந்துகொள்ள, அவரோடு நாம் நடக்க, அவருடைய நுகத்தை நாம் சுமக்க, அவர் இதயத்தின் இனிமையைச் சுவைக்க அவரே அருள்வாராக ●



# சிறுவர் பொழில்



# கவிதைப் பூக்கள்

## ஏக்கம்

ஏ. கொன்சி, இறம்பைக்குளம், வவுனியா

றிங்... றிங்... மணிச்சத்தம் கேட்டு கண் விழித்த மேரி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தைக் காட்டியது. அவசர அவசரமாக எழுந்து படுக்கையைச் சரிசெய்துவிட்டுத் தன் காலைக் கடமைகளைச் செய்தாள். பின்னர் அன்று வெள்ளிக் கிழமையாதலால் நற்கருணைச் சந்திப்புக்கு ஆலயம் செல்வதற்காக மாலை கட்ட ஆயத்தமானாள். அப்படியே பாட்டுக் கேட்பதற்காக வானொலியைத் திருப்பினாள். வானொலியில் நேயர் விருப்பம் நிகழ்ச்சியில், “அவரவர் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் மாற்றங்கள்” என்ற பாடல் ஒலித்துக் - கொண்டிருந்தது. கை மாலை கட்ட மேரியின் சிந்தனை அவளது கடந்த காலத்தை நோக்கிச் சென்றது.

கடலலை தாலாட்ட எங்கு திரும்பினாலும் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமம் அவளது கிராமம். இக்கிராமத்திலே உயர்ந்திருக்கும் அழகிய வீடு, கண்ணுக்கு எட்டிய தூரம்வரை தெரியும் பச்சைப்பசேல் என்ற நீண்ட வயல்கள் இவற்றுக்கெல்லாம் சொந்தக்காரர்தான் மேரியின் அப்பா. அம்மா, மேரி, தம்பிமார், தங்கைமார் என்ற கலகலப்பான குடும்பம் அவர்களது குடும்பம்.

குடும்பத்தின் தலைப்பிள்ளை மேரிதான். ஆனாலும் ரொம்பச் செல்லமாக வளர்ந்து வந்தாள். எதைக்கேட்டாலும் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர், மேரிக்காக உயிரையே கொடுக்கும் மாமன்மார், பாசமே உருவான பெரியப்பா, சித்திமார் என உறவுகளின் பிணைப்பில் கவலை, கஸ்ரம், கண்ணீர், துன்பம், தனிமை என்று எதுவும் தெரியாது மென்மையாக வளர்ந்து வந்தாள் மேரி.

பசுஞ்சோலையாக இருந்த மேரியின் வாழ்வில் உயர்கல்வி என்ற ஒரு கட்டம் வரும்போதுதான் அவள் தன் வாழ்நாளில் முதன்முதல் பிரிவைச் சந்திக்கின்றாள். உறவுகளைவிட்டு தொலைதூரம் செல்கிறோமே என்ற துயர் அவளை வாட்டினாலும் புதிய இடத்திற்குச் செல்லும் ஆவ்வல் அவள் மனதை அவதிப்படுத்தியது.


பஸ் வண்டியில் யன்னலோரம் அமர்ந்தவாறே தன் கிராமத்தின் இயற்கை அழகை இரசித்துக்கொண்டிருந்தாள். பாவம் மீண்டும் ஒருமுறை இந்த இடத்தைத் தான் பார்க்கமாட்டேன் என்று அவள் கனவில்கூட எண்ணவில்லை. ஒருவறாக விடுதிக்கு வந்த மேரி புதுமுகங்களின் வரவேற்பில் நெகிழ்ந்து அப்பாவை விட்டுப் பிரியும் கவலையே தெரியாது அவரைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்துவிட்டு ஒரு நொடியில் துள்ளிக் குதித்து விடுதிக்குள் சென்று மறைந்து விடுகின்றாள்.

நாட்கள் நகருகின்றன. தென்றல் வீசிய அவள் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்தது. விடுமுறைக்கு மேரியைப் பார்க்க வந்த குடும்பம் நாட்டுச் சூழ்நிலை காரணமாக இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றது. ஒருவாறாக இன்னோரிடத்தில் ஒரு வாடகை வீட்டில் அவளது குடும்பம் வசித்து வந்தது. மேரியின் சகோதரர்களும் அங்கேயே ஒரு பாடசாலையில் இணைந்து படித்தனர்.

திடீரென ஒருநாள் செவிப்பறைகள் கிழிய, இதய நரம்புகள் செயல் இழக்கும் அளவுக்கு அந்த ஒலி எதிரொலித்தது.

இடியோசை இயமனாய் வெடித்தோய்ந்தது. கிளைமோர் தாக்குதலில் பாடசாலை பஸ் வண்டி அகப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், ஓட்டுனர், நடத்துனர், ஏனைய பயணிகள் என அனைவரும் துடிக்கத்துடிக்க இரத்த வெள்ளத்தில் சங்கமமாகினர். எங்கும் அவலத்தின் அழுகுரல்கள்! திரும்பிய திசையெங்கும் சோக கீதங்கள்! தம் பிஞ்சுகளைத் தேடி பதறியோடும் பெற்றோர்கள், தன் கணவனை காணச்செல்லும் மனைவி என ஒரே ரணகளம். ஆனால் இவர்களுக்கெல்லாம் கயவனின் பரிசு உயிரற்ற உடல்களும் ஊனமுற்ற உடல்களும்தான். வானமே இடிந்து விழும் அளவுக்கு கூக்குரல்கள்! பத்திரிகையிலும் வானொலியிலும் இணையத்தளங்களிலும் பரபரப்புச் செய்திகள். ஆயிரத்தில் ஒருத்தியாய் மேரியும் குந்தியிருந்து “ஐயோ பாவம்” என்றாள். ஆனால் அந்தக் கொடூரக் கொலைக்குள் தன் உடன் பிறப்புக்கள் இருவரும் அடங்குகின்றனர் என்பதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

மறுநாளே அந்தச் சோகச் செய்தி அவள் காதை எட்டுகின்றது. அம்பு தைத்த மான் போல பதறினாள்.



துடிதுடித்தாள். அந்தோ பரிதாபம்! அவர்களின் இறுதி நிகழ்வில்கூட கலந்துகொள்ள முடியாத நிலை. இந்தக் கொடுந்துயர் ஆறுமுன் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் பெற்றோரின் இடப்பெயர்வு செய்தி கிடைக்கின்றது. மேரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

மேரியின் வாழ்வில் தனிமை,கவலை, கஸ்ரம் என நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகமாகிக்கொண்டு செல்கின்றன. தனிமையையே உணராத மேரி இன்று தனிமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றாள். பிரிவு என்பதையே அறியாதவள் இன்று பாசத்திற்கு ஏங்காத நிமிடங்களே இல்லை. “அன்னை மடியில் ஒருமுறையேனும் படுத்துறங்கி அந்த அம்மா -வின் வருடலில் கண்ணயர வேண்டும். அப்பாவின் தோளில் ஒரு நிமிடமாவது தலைசாய்த்து இந்த உலகத்தையே மறக்கவேண்டும். அக்கா என்று ஒருமுறையாவது சகோதரர் சொல்லக்கேட்டு உள்ளம் பூரிக்க வேண்டும்.” இப்படி அவள் மனதில் நிறைய ஆசைகள்!

இந்தச் சின்ன சின்ன ஆசைகளெல்லாம் என்றோ ஒருநாள் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் துன்பங்களை வாழ்வின் படிக்கட்டுக்களாக நினைத்து அவற்றைத் தாண்டி வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறாள். என்னதான் சந்தோஷமாக இருந்தாலும் அவள் மனது தன் உறவுகளுக்காக ஏங்கும் நிலை யாருக்குப் புரியப்போகின்றது? ஒவ்வொரு நிமிடமும் “என் குடும்பத்தை மீண்டும் சந்திக்க மாட்டேனா? பழைய சந்தோஷம் மீண்டும் கிடைக்காதா?” என்ற ஏக்கத்துடனேயே வாழ்க்கையைக் கழிக்கின்றாள். கண்களில் இருந்து கண்ணீர் துளி கையை நனைக்க சுயநினைவு திரும்பியவளாய் எழுந்து மாலையை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் செல்கின்றாள்.

## அறிந்துகொள்ளுங்கள்

1. மாரா என்பதன் பொருள் என்ன? கசப்பு
2. உயிருள்ள நீர் எதைக் குறிக்கிறது? பரிசுத்த ஆவியை
3. புனித லூக்காவின் தொழில் என்ன? மருத்துவர்
4. ஆதாம் என்பதன் பொருள் என்ன? மண்ணால் ஆனவன்
5. உலர்ந்த என்புகளுக்கு இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்? எசேக்கியேல்
6. அமைதி என்ற சொல்லின் எபிரேயச் சொல் என்ன? சலோம் (Shalom)
7. பவுல் யாரை அன்பு மகன் என்று அழைத்தார்? தீத்துவை
8. பர்ணபாவின் சொந்த இடம் எது? சைப்பிரஸ் தீவு
9. தாயின் கருவில் அழைக்கப்பட்ட இறைவாக்கினர் யார்? எரேமியா
10. பழைய ஏற்பாட்டு வசனங்களை மத்தேயு எத்தனை தடவை பாவித்துள்ளார்? 60 தடவை

*வே. நொயலின் - தரம் 13, கலைப்பிரிவு, பிச்சகுளம், முருங்கன்*

## மன்னா விளம்பரப் பலகை

“வலிமை உடையவரைவிட
பொறுமை உடையவரே மேலானவர்”

“எண்ணங்களை மனிதர் எண்ணலாம் - ஆனால்
எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்”

*அ. வேஜின் நிலானி, ஆவணம், நானாட்டான்.*

## அறிய வேண்டிய அறிவு

| | |
|---|---|
| மிகமிக நல்லது | - திட்டமிட்ட செயற்பாடு |
| மிகமிகத் தீயது | - பழிவாங்குவது |
| மிகப்பெரிய வெகுமதி | - பொறுமை |
| மிகமிகத் தேவை | - சமயோசித புத்தி |
| மிக இனிமையானது | - அன்பு செய்வது |
| மிக மோசமானது | - பொறாமை |
| நம்பக் கூடாதது | - வதந்தியை |
| ஆபத்தைத் தருவது | - அதிக பேச்சு |
| உறவைக் கெடுப்பது | - கடன் |
| உயர்வுக்கு ஒரே வழி | - உழைப்பு |
| சாதனையின் சாதனை | - விடாமுயற்சி |
| முன்னேற்றத்தைச் சிதைப்பது | - கோபம் |
| நிம்மதியைக் கெடுப்பது | - சந்தேகம் |
| நோயைத் தருவது | - மிதமிஞ்சிய உணவு |
| செய்ய வேண்டியது | - உதவி |
| நட்பைப்பெற வழி | - புகழ்ச்சியான பேச்சு |
| மதிப்பைப்பெற வழி | - உயர் பண்புகள் |
| அமைதியாய் இருக்க ஒரே வழி | - சகிப்புத்தன்மை |
| கடன்படாதிருக்க ஒரே வழி | - சேமிப்பு |

- சுகுமார் அஸ்வின் (எமர்சன்), தரம் 6, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்

## உன்னருகே நானிருந்தால்

காலங்கள்தோறும் யுத்த மேங்கள் சூழும்
ஆயுதங்கள் ஓங்கும்
வன்முறைகள் வெற்றிகொள்ளும்
உறவுகள் சீரழியும்
இடப்பெயர்வுகள் வாழ்வாகும்
அநீதி முடிவாகும்
இவையனைத்தும் தூசாகும்
இறைவா! உன்னருகே நானிருந்தால்.



*பீ. ஒகஸ்ரினா, தரம் - 13 வ / இறம்பைக்குளம், மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா*

## வேதனை



போர் சூழ்ந்திருக்கும் இந்நாட்டில்
உடன் பிறப்புக்கள்
படும் வேதனை
அந்தோ பரிதாபம்!

தாயின் மடியில்
வாழவேண்டிய பிள்ளைகள்
போரின் கொடூரத்தால்
சிந்திய குருதி அந்தோ பரிதாபம்!

நீதிக்காக எம் மக்கள்
குரல் எழுப்பும் வேளையில்
இறைவனின் திட்டதிற்கு மாறாக
சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள்!



“மரி அன்னையே
எமக்குத் தஞ்சம்” என்று
அன்னையின் பாதச் சுவடுகளில்
நாளும் தவம் கிடக்கும்
உள்ளங்கள் அந்தோ பரிதாபம்!

இருக்க இடமின்றி
உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
படுக்கப் பாயின்றி
எம் மக்கள் படும் வேதனை சொல் ஒண்ணாத் துயரம்!

இறைவனின் கல்வாரிச் சிலுவை – எம்
ஒவ்வொருவருக்கும் பக்தி நிறைந்த
ஓர் வழிப்பயணமாக மாறிட்டும்.

*அ. யோகா, களிமோட்டை, முருங்கன்.*

## அமைதி



இலங்கையரின் இதயங்களில் எரிகின்றதே தீ
இயற்கையும் தீ மூட்டுகின்றதே
இனியும் வேண்டாம் யுத்தம்
வரவேண்டும் இலங்கையில் அமைதி!

இளநீர் கொடுத்த தென்னை மரங்களெல்லாம்
கண்ணீர் வடித்துக் காய்ந்துவிட்டன
உலகம் தேடும் உயர்ந்த அமைதியை
தேடுகின்றது எம் வன்னிப்பகுதி!

உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி
வாடும் மாந்தர்கள் எத்தனை எத்தனை?
அவர்களின் கண்ணீரைத் துடைக்க
சமாதானம் என்னும் தூய காற்று
விரைவில் வீசும் என்று
நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

*ஜே. நிலோஜினி, பொன்தீவுகண்டல், முருங்கன்*

## முகாமில் நான்

மூன்று மாதம்கூட ஆகவில்லை முகாம் வந்து
முப்பதுமுறை சென்றுவிட்டேன் ஆஸ்பத்திரிக்கு - ஏன்?
எனக்கு முன்னும் பின்னும் விழுந்த செல் வீச்சுக்களால்
உச்சி முதல் உள்ளங்கால்வரை வடுக்கள்!

முடியாதா? என் சோகக்கதை என்று
தலைதெறிக்க ஓடி வந்தும்
முகாமில்தான் கொணர்ந்து போடப்பட்டேன்.
முற்றுப்பெறாது இந்த வரலாறு? என்று யோசிப்பதற்கு முன்
முடிவாகிவிட்டது இனி முகாமில்தான் வாழ்க்கை என்று.

மூன்று வேளை வயிராற உண்டு வந்த உணவு
மூன்று வேளைக்கு ஒருமுறை
வயிற்றைச் சந்திப்பதும் குறைவு
முன்னால் மடிந்த என் உறவுகளை நினைக்கையில்
முகங்குப்புற விழுந்து அழுகிறேன் தனியாய்
தேற்றவோ யாருமில்லை!

முயன்று பார்த்தேன் உறவினர் இல்லம் செல்ல
முயற்சிகள் முழுவதும் தோல்வியிலே முடிந்தன.
முடியாதா என் வாழ்க்கை முகாமில் என்று
முற்றிலும் வெறுப்புடன் வாழ்கின்றேன்.

முடிந்தளவு உதவி செய்ய பலர் முன்வந்தும்
முழுமையாக யாவருக்கும் உணவளிக்க முடியவில்லை
முட்டுக்கட்டையாக முகாமில் முடங்கிக்கிடக்கின்றேன்
முடியுமானால் தந்தாய் இத்துன்பக் கிண்ணம்
என்னைவிட்டு அகலட்டும்.

சகோ. ஆர். மேரி பஸ்ரியன்,
ஆரம்ப மெய்யியல் பீடம், களுத்துறை.

## எங்கே சென்றாய் சாமாதானமே

போரடித்த புயலாய் நாங்கள் கதறுகின்றோம்
இரத்த ஆறு ஓடவே நாங்கள் குமுறுகின்றோம்
சந்தர்ப்பவாதிகள் எம் தேசத்தைக் கொழுத்தவே
நீர் படைத்த மானிடன் இங்கே மடிகின்றான்.
எம் மண்ணின் இரத்த வாடை மறையும் முன்னே
மண்ணில் வந்து பிறப்பாயே.

கி. இவாஞ்சலின் டலிமா,
1ம் வட்டாரம், பேசாலை.

பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில்

# நோபேட் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூத்த குருக்களில் ஒருவராகிய அருட்பணியாளர் சீமான்பிள்ளை நோபேட் அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் கடந்த யூன் மாதம் 23ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் திறந்தவெளி மண்டபத்தில் நூற்றுக்கணக்கான குருக்கள், துறவிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தின் மத்தியில் நடைபெற்றது. நல்லடக்கத் திருப்பலி மற்றும் இறுதி அடக்கச் சடங்கு ஆகியவற்றை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி நடத்தினார்.

கடந்த யூன் மாதம் 20ம் திகதி நெஞ்சுவலி காரணமாக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அடிகளார் வைத்தியர்களின் தீவிர முயற்சியின் பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மாலை 7.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அடுத்த நாள் 21ம் 22ம் திகதிகளில் அவருடைய பூதவுடல் மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவர் பணியாற்றிய பங்குகளி-லிருந்தும் இன்னும் அவருடைய உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் அவருடைய பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஆயர் இல்லத்திற்கு வந்த வண்ணமே இருந்தனர். அந்த இரண்டு நாட்களும் காலையும், மாலையும் குருக்கள் திருப்பலிகளை ஒப்புக்கொடுத்தனர். 23ம் திகதி காலை 6.30 மணிக்கு அவருடைய பூதவுடல் ஆயர் இல்லத்திலிருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு கொண்டுவரப்பட்டு மாலை 3.00 மணிவரை மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மாலை 3.00 மணிக்கு மன்னார் ஆயர் தலைமையில் நல்லடக்க ஆராதனைகள் இடம்பெற்றன. திருப்பலியின்போது மன்னார் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் மறையுரை ஆற்றினார். திருப்பலியைத் தொடர்ந்து மறைமாவட்ட குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் அருட்தந்தை நோபேட் அடிகளாரோடு தொடர்புபட்ட அனைவருக்கும் நன்றி செலுத்தி உரையாற்றினார். நோபேட் அடிகளாரின் குடும்பத்தவர் சார்பாக திரு. எமில் அவர்களும் நன்றி உரை ஆற்றினார்.

பின்னர் இறுதி ஆசீரைத் தொடர்ந்து அடிகளாரின் பூதவுடல் குருக்கள், துறவியர் பொதுமக்கள் அணிவகுத்துச் செல்ல மன்னார் பொது சேமக்காலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மாலை 5.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாடசாலை மாணவர்-களின் பாண்ட் சோக இசை ஒலிக்க அன்னாரின் வாழ்க்கைச் சிறப்புக்கள் பற்றிய கவிதைகள், அஞ்சலிகள் ஒலிபெருக்கியில் ஒலிக்க அமைதியாக அடிகளாரின் இறுதி யாத்திரை இடம்பெற்றது.

நோபேட் அடிகளாரின் நெருங்கிய உறவினரான அருட்பணியாளர் தேவசகாயம்பிள்ளை, அவருடைய நெருங்கிய நண்பர் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவர் அருட்பணியாளர் ஏ.எம். ஸ்ரீபன் ஆகியோர் உட்பட இன்னும் பல குருக்கள் ஆயரோடு கூட்டுத்திருப்பலியில் இணைந்துக்கொண்டனர்.

## எமக்குத் தெரியும்!

- இளைய குருக்கள்

எமக்குத் தெரியும்! நீங்கள் பஸ்ரியனின் வழியில்
வங்காலையில் பணியாற்றியது.
எமக்குத்தெரியும் நீங்கள் ஜிம்பிறவுண், றஞ்சித் இழப்பில்
உடைந்துபோனது.
அதனால்தான் ஏழைப் பிள்ளைகளின் தந்தையாகி,
உணவு, உடை, விறகு சுமந்து ஓடி ஓடி உழைத்தீர்கள்.
மூன்று மாதம் வைத்தியசாலையில்
ஊனமுற்றவர்களோடு கரைந்துபோனீர்கள்.
We......Miss.........you.................... அண்ணா
உங்களுக்குத் தெரிந்துவிட்டது உங்கள் நேரம்!
மருதமடுத் திருத்தலம் (16.06.09) சென்று தியானத்திலும்
குருக்களுக்கான தினத்தில் (19.06.2009) எழுத்தூரிலும்
தேடித்தேடி எம்மை கைகுலுக்கி வாழ்த்துச் சொல்லிவிட்டு
பிரியாமல் பிரிந்துவிட்டீர்கள்!

## என் ஆருயிர் நண்பா நோபேட்!

- அருட்பணி ஏ.எம்.ஸ்ரீபன்,
உயர்தலைவர், செபமாலைத்தாசர்சபை, இந்தியா



உனது பிரிவு சுமக்க முடியாத சுமை
தாங்க முடியாத தாக்கம்
விளங்க முடியாத விளக்கம்
இறைவன் ஒருவருக்கே வெளிச்சம்!

நீ அன்பின் சிகரம்!
அந்த அன்பின் உச்சியை
நாம் அடைவது கடினம்
நீ அன்பின் பெருமழை!
அது வேறுபாடின்றி அனைவரையும் அடைந்தது
நீ அன்பின் ஓயாத அலை!
அது எப்போதும் அனைவரையும் முத்தமிட்டது.
நீ அன்பின் தென்றல் காற்று!
அது எல்லா வீதிகளிலும் வீடுகளிலும்
வைத்தியசாலைகளிலும் சென்று
அனைவருக்கும் புதுவாழ்வு கொடுத்தது.

உன்னைக் கண்டவர்கள் யாரும் உன்னை மறப்பதில்லை
உன் புன்முறுவலை பார்த்தவர்கள் ஊக்கம் பெற்றனர்
உன் பார்வையில் சிக்கியவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்
உன் பேச்சை கேட்டவர்கள் உள்ளம் உருகினர்.

## குருத்துவ உறவுகளின் உணர்வுகள்

தோழனே!
எங்கள் பணிக்களத்தில்
எங்களோடு இணைந்து
தீமைகளை எதிர்த்து
சமராடிய இயேசு வீரனே.

வலி வரும்வரை
இயேசுவைச் சுமந்து
வேதசாட்சிப் பாதையை
அலங்கரித்தவனே!

கலப்படமில்லா அன்பையும்
நஞ்சில்லாத பாசத்தையும்
வாழும் உறவையும்
நேசித்தவனே!

உயிர்வேதம் கொண்டு
இயேசு வழியை உனதாக்கி
மனிதத்தைக் காத்தவனே!
உனது பிரிவு
எங்கள் இதயங்களை
சுமையாக்கினாலும்
எங்கள் பாதையை
தியாக ஒளியினால்
தெளிவாக்கியவனே!

நாம் இயேசுவை மட்டும்
நெஞ்சில் வைத்து
பூசித்தோம் ஒன்றாய்.
ஆனால் நீயோ
மேனியை உருக்கும்
மெழுகுதிரி வாழ்க்கையாக
உன் வாழ்நாளை
வகுத்துக்கொண்டாய்.

எமது பணிப் பாதையில்
நாம் தொடரும் பாதமும்
நாம் பாடும் வேதமும்
இயேசு மட்டும்தான்
என்று உறுதியடைந்தோம்.
ஆனால் நீயோ
உன் குழந்தைகளுக்காய்
இரைதேடிய பெலிக்கான்
பறவையாகி தியாகத்திற்கு
அர்த்தம் கொடுத்தாய்!

**"... இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது..." (உரோமர் 8:39)**



## "ஊனத்திலும் வெறுமையிலும்"

- அருட்பணி. ஜெகானந்தன்

வறுமையிலும் தனிமையிலும்
வெறுமையிலும் கொடுமையிலும்
சாவினிலும் சரித்திரச் சரிவினிலும்
உயிராய், உடலாய், உறவாய்
வாடிவந்த வன்னி மக்களுக்குத் தேடியே சுகம் தந்தவரே...
மரணப் படுக்கையிலும் மறக்குமா மனம்....!

நொந்துநின்ற நோயாளர்க்கு நோபேட் என்றாலே
நோயே நொடியில் நோகாது போகும்.
மென்மொழியில் மெதுநடையில்
நஞ்சுபடா நல்பஞ்சு வார்த்தையால்
கசப்பான நிஜங்களைச் சிரிப்பாலே சிதைப்பதில்
இயேசுவின் நம்பிக்கையின் கொத்துக்குண்டு நீரே!,

அவலங்கள் இமயங்களானதால்
தன் நோய் மறந்து தற்கொடையாய்
அரவணைப்பில் அன்னை தெரேசாவாய்
தன்னை எண்ணையாக்கி வன்னியர்
வாழ்வுத் திரியை எரியவைத்த தியாக தீபம் நீ

கரம் இழந்தவர்களுக்குக் கரமான இயேசு நீ
கால் இழந்தவர்களுக்குக் காலான இயேசு நீ
இயேசுவின் வார்த்தைக்கு உப்பாய் ஒளியாய் நின்றவரே

வாழும்போது வார்த்தையால் நன்றி
வார்த்தை இன்றிப் போகும்போது மௌனத்தால் நன்றி...!

## நோபேட் அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்பேடு

தகப்பன் பெயர் : பேதுருப்பிள்ளை மரிசால்பிள்ளை
தாயின் பெயர் : சந்தியாப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை
பிறந்த இடம் : சூரியகட்டைகாடு, நானாட்டான்
பிறந்த திகதி : 14.07.1952
ஆரம்ப கல்வி : சூரியகட்டைக்காடு, றோ. க. த. பாடசாலை
மேல்நிலைக்கல்வி : புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
சிறிய குருமடம் : யாழ். புனித மடுத்தீனார் (10.01.1967)
மெய்யியல் கல்வி: தூய பவுல் குருமடம், திருச்சி, (யூன் 1971)
இடைக்காலப்பயிற்சி : புனித மரியன்னை ஆலயம்,பேசாலை
இறையியல் கல்வி : தேசிய குருமடம், அம்பிட்டியா, கண்டி
திருத்தொண்டர் : கண்டி தேசிய குருமடத்தில் ஆயர் போல் பெரேரா அவர்களால்.
குருப்பட்டம் : 17.07.1979 - சூரியகட்டைக்காடு - ஆயர் தியோகுபிள்ளை அவர்களால்.

### பணித்தளங்கள்

1979 - 1980 : யாழ் குருநகர், உதவிப்பங்குத்தந்தை
1980 - 1981 : யாழ் அச்சுவேலி பங்குத்தந்தை
1981 - 1983 : மன்னார் பண்டிவிரிச்சான் ஆலயப் பங்குத்தந்தை
1983 - 1985 : பேசாலை பங்குத்தந்தை
1985 - 1987 : றோமாபுரியில் திருச்சபையின் சட்டவியலில் முதுமானிப்பட்டம்.
1987 - 1990 : அடம்பன் பங்குத்தந்தை
1990 - 1993 : சனிவிலேச்சில் இடம்பெயர்ந்தோருக்கான பணி
1993 - 1996 : வங்காலைப் பங்குத் தந்தை
1996 - 2000 : ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை
2000 - 2004 : தாழ்வுபாட்டுப் பங்குத்தந்தை
2005 - 2006 : யூபிலி விடுமுறை
2006 - 2007 : கொழும்பு மறைமாவட்டம்
2008-2009 : இயக்குனர், புனித சூசையப்பர் மாணவர் விடுதி.

## யூபிலி நாயகர் ஸ்ரனி அடிகளாரின் வாழ்வும் பணியும்

அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி அடிகளார் 14.08.1956 அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். பின்னர் அமலமரித்தியாகிகள் சபையில் தன்னை இணைத்துக்கொண்ட இவர், தனது மெய்யியல் கல்வியை கொழும்பில் உள்ள அ.ம.தி.கள் மெய்யியல் அகத்திலும் இறையியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் கற்றார். 14. 08. 1984 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் அன்றைய யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருத்துவ திருநிலைப்படுத்தலை அடுத்து பாசையூர், மன்னார் பேராலயம், உயிலங்குளம், நானாட்டான், மடு (1991 -1994) ஆகிய பங்குகளில் பங்குப் பணியாற்றினார். 994 -1996 வரை உரோமில் உயர் கல்வியை (Licenciate in Dogmatic Theology) மேற்கொண்டார். பின்னர் யாழ் அமல உற்பவத்தில் மறையுரைஞர் குழுத் தலைவராக (1998 - 2000), பணியாற்றினார். அமதிகளின் மாகாண நிர்வாக ஆலோசகராக இரு தடவைகள் பதவி வகித்தார். 2001 - 2003 வரை உரோமில் இறையியலில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 2004 - 2008 வரை மன்னாரில் உள்ள ஞானோதயம் அமதிகள் கல்வி மையத்தில் நிகழ்ச்சித்திட்ட இயக்குனராகக் கடமையாற்றினார். 2009 ஜனவரி தொடக்கம் மன்னார் மறைமாவட்ட விவிலிய மறைபரப்பு ஆணைக்குழுவின் இயக்குனராகப் பணிபுரிந்து வருகின்றார்.

உயிலங்குளத்தில் பங்குத்தந்தையாக இருந்தபோது பாதுகாவலன் பத்திரிகையில் சிறுகதைகளை எழுதிவந்தார். 1990ல் நானாட்டானிலும், 1992ல் பண்டிவிரிச்சானிலும் 1998ல் இலுப்பைக்குளத்திலும் திருப்பாடுகளின் காட்சிகளை அரங்கேற்றினார். 1991-1993 வரை பெருநிலப்பரப்பில் வாழ்வுதயம் மற்றும் மறைக்கல்விப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தார். இசைக் குழு, தெருக்கூத்துக்கள், நாடகங்கள் மூலமாக பெருநிலப்பரப்பில் மறைபரப்புப் பணிகளில் ஈடுபட்டார். குருத்துவ வாழ்வில் யூபிலி விழாக்காணும் ஸ்ரனி அடிகளாருக்கு மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கிறது.

# கலை இலக்கியச் சாளரம்

# சிறுகதை

# கவிதைக் களம்

## இணைப்பின் இரசிப்பு

ஒரு விடிவும் முடிவும் பிரசவிப்பது பிரளயம்
பூவும், வண்டும் புணர்வது புது வசந்தம்
மலரும் மணமும் யாசிப்பது அழகின் ஜாலம்
நிலவும் வானும் மோதுவது
இயற்கையின் சுகந்தம்
கடலும் அலையும் கலப்பது
மாறா நியதியின் திருப்பம்



*ஆர். பாரத், சிலுவைநகர், தலைமன்னார் மேற்கு*

## சோலைக் கிளிகள்

சோலை இழந்த கிளிகள்
பாலை நிலம் மெத்தையில்
தாயை எண்ணித் தவித்தன.

காளைக் கன்றொன்று
மேய்ச்சல் முடிந்ததென்று
தாயின் மடிதேடி
தாவிப் பாய்ந்ததங்கு
சேனை விதைத்த வயல்
செல்லை விளைச்சலாக்கி
தாயை உரமாக்கிற்று.



மாய உலகமிது
மனிதத்தை மறந்திங்கு
பட்சிகளாய் வாழ்கின்றோம்

சோலையில் வண்டென
சோழனின் வழியென
சோர்வது களைந்து
ஏர் கொழு பிடித்து
எருமைகள் வலித்து
எங்கள் வியர்வையில்
செழித்த தேசம் - எங்கள் தேசம்



பாவ தோசம் பட்ட மனங்களில்
பற்றிய வெறித் தீ
வெதுப்புகின்றது எம் தேசத்தை.
வெஞ்சினக் குமுறல்
வெற்றாக்கின எம் சோலையை
சேலை இழந்த தாயின்
முலை உறிஞ்சும் தௌவலை
சதை பிளிந்து தாகம் தீர்க்கும்
நர மனிதர் வாயில்
சுதந்திர அமிர்தம்.

கருகிய உடலில் காமம் தீர்க்கும்
வெறியர்கள் கையில்
வெண்புறா தவழுமோ?
செங்கோல் நிறுத்துமோ?



சர்வம் அறிந்து சர்வதேசமும் சாமர்த்திய
வார்த்தைகளில் சறுக்கி நழுவுதே
தரமற்ற தலைமையில்
தரித்திரம் செங்கோலுடன்
போதிமரப் போதனை எம் தேசத்தில்
சிலுவை மரத் தீர்ப்புத்தானோ?

சிரம் இழக்கினும் சிந்தையில் உரமிளோம்
சுரம் மீட்கும் ராகங்கள்
சிறை மீளும் எம் மண்ணில்
வேரறுந்த தண்டு துளிராகும்
துயின்ற சோலை மிளிரும்
கலைந்த கிளிகள் வேட்கையுடன் திரும்பும்
ஆதியவன் அருளால் அனைத்தும் கிட்டும்.

*- எஸ். பி. ஆன் வரேஸ் சொய்சா*

## தாய்

விளக்கு ஒன்று அணைந்து போனால்
வீடு மட்டும் இருள்கின்றது
வீதி விளக்கு அணைந்து போனால்
சாலை மட்டும் இருள்கின்றது
மேற்கே சூரியன் மறைந்து போனால்
பாதி உலகம் இருள்கின்றது
பெற்ற தாயவள் செத்துப் போனால்
மொத்த உலகமே இருள்கிறது.

தொட்டில் தாலாட்டி - என்னை
தூக்கி வளர்த்தவள் என் அன்னை!
தன் வயிற்றை பட்டினி போட்டு
பாலூட்டி வளர்த்தவள் என் அன்னை!
முத்தங்கள் கொடுத்தாள் எனக்கு
மதி நுட்பங்கள் ஊட்டினாள்
கஷ்டங்கள் வந்திட்ட போதிலும்
கணத்திலே மறந்தாள் மாது!
எத்தனை வைரங்கள் சேர்த்தாலும்
ஈடாகுமா என் தாயின் அன்பிற்கு!

*அ. டிப்னா,*
*சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்*

## நண்பன்

என் உணர்வுக்குள் உருவாகி
நட்புக்கு உயிர்கொடுத்த இனிய நண்பா!
வாழ்க்கைப்பாதையில் கால்பதித்த நாள்முதல்
சந்தித்த பலவகை மனிதர்களுள் ஒருவன் நீ.
நான் நடந்து வந்த வாழ்க்கையிலும்
நடக்கவிருக்கின்ற வாழ்க்கையிலும்
என்னால் மறக்க முடியாமலும்,
மறைக்க முடியாததுமான அன்பு நண்பன் நீ
மனித வாழ்வை எனக்களித்த இறைவன்
நட்பின் ஆழத்தை எனக்குணர்த்த
உன்னை எனக்கு நண்பனாக அளித்தார்!

*செ. டென்சியா,*
*8ம் வட்டாரம், பேசாலை*

## இறைதந்தையின் அன்பு

தனிமரமாய்த் தவிக்கிறோம்
மாயமான வாழ்வினில்
உம்மையன்றி கதியில்லை
ஏதுமில்லா ஏழை எமக்கு
இணைபிரியா உமதன்பில்
நீடுழியாய் வாழ்ந்திட
எந்தன் உள்ளம் தேடிடுதே
தூயனே உம் பாதம்.



சேய்போல் எம்மைச் சுமந்து
தாய்போல் அரவணைத்தீர்
கானகமாம் இந்தப் புவியில்
கலங்கியே தவித்த வேளை
கண்ணுறங்காது எம்மை
கருத்துடன் காத்தீரே!

*ப. தட்சாயினி (கீர்த்தா)*
*சாளம்பன், நானாட்டான்*

## உறவுகளைப் பிரிந்து


பத்து மாதம் சுமந்து - தனது
உதிரத்தை உணவாகக் கொடுத்த
தாயைப் பிரிந்து
பிள்ளையின் உயர்வுக்காய்
வியர்வைத் துளிகளையும்
மண் கூடைகளையும்
தூக்கிச் சுமந்த தந்தையை இழந்து
போரின் விழிம்பில்
துப்பாக்கி முனைகளுக்கு
இரையாகிய சகோதரர்களை இழந்து
துப்பாக்கி முனைகளினால் வீதிகளிலும்
ஓரங்களிலும் வைத்தியசாலைகளிலும்
பரதவித்து உயிர்களை இழந்த
உறவுகளைப் பிரிந்து பரதவிக்கின்றோம்.



*ஞா. குயின்சி குயின்ரா,*
*பொன்தீவுகண்டல்*

## நீ நினைத்தால் நிம்மதி வரும்

சமாதானமே! சமாதானமே!
நீ எங்கே செல்கிறாய்? சற்று நில்!
உன்னை வன்னிவாள்
மக்கள் தேடுகின்றனர்
நீ எங்கேயோ சுற்றித் திரிகின்றாய்
எல்லோரும் உன்னைத் தேடுகின்றனர்
நீ அவர்கள் சொல்வதை
கேட்காதவர்போல் திரிகின்றாய்
நீ நினைத்தால் உன் வன்னிவாள் மக்களுக்கு
நிம்மதியைக் கொடுப்பாய் அல்லவா!
நீ நிம்மதி கொடுப்பாய், அது நடக்கும்.



அ. வேஜின் நிலானி
ஆவணம், நானாட்டான்.

## சமாதானம் வேண்டும்

இனப்போர் ஒழிந்திட வேண்டும்
தொல்லை நிறை துயரத்தில் - மக்கள்
துவண்டாடிடும் நிலை மாறிட வேண்டும்
இனிதாய் இன்புற்று நாம் வாழ்ந்திட வேண்டும்.

அல்லலுற்று அகதியாய் - அவனியில்
அலைந்திடும் அவல நிலை மாறிடவேண்டும்
யுத்தம் என்னும் கொடிய அசுரன் - மீண்டும்
இப்புவியில் இல்லாது ஒழிந்திட வேண்டும்.


செல்லடிகள் வெடி முழக்கங்கள்
உறவு உடமை இழப்புக்கள்
இகமதில் இல்லாது ஒழிந்திட வேண்டும்
அகமதில் வசந்தம் வீசிட வேண்டும்.

கரை காணாக் கல்வியில் காவியமாக வேண்டும்
எமதன்புப் பெற்றாரைப் பேணிக்காத்திட வேண்டும்.
இருண்ட உள்ளங்களில் ஒளிவீசிட வேண்டும்.
இதுவே நாம் தேடுகின்ற அமைதி
இதுவே உலகில் நிலவிட வேண்டும்.

*யே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்*

## ‘யசோதா’

எஸ். ஏ. உதயன்



கௌதமரின நிஷ்டை கலைந்தது...
“வந்திருப்பது யார்...?
“பாடலிபுரத்திலிருந்து வருவதாகச் சொல்கிறாள், பகட்டாக இருக்கிறாள்” கௌதமர் கண்களைத் திறக்காமலே புருவத்தை உயர்த்தினார்.
“என்ன சொல்கிறாள்?”
தங்களோடுதான் பேச வேண்டுமாம்.”
கௌதமர் துணுக்குற்றார்.
“ஒருவேளை யசோதாவாக இருக்குமோ? ச்சீ. இருக்காது.. அவள் இத்தனை தூரம் தேடிவருவதாயிருந்தால் முன்பே வந்திருப் - பாளே...”

இப்போதெல்லாம் நிறையப்பேர் கௌதமரைப் பார்க்க இங்கு வருகிறார்கள். அவர்களில் பெண்களும்தான். நேற்றுக்கூட இளவரசி வஸாகாவும், பட்டத்துராணி மல்லிகா தேவியும் சேடியரோடு வந்தார்கள். உபதேசம் கேட்டார்கள். இளவரசி வஸாகா சூ.. எத்துணை ஆழமான அறிவாற்றல் .. சித்தார்த்தனின் உபதேசத்தைக் கண்களை மூடியபடியே கேட்டுக்கொண்டிருக்கும் பணிவு.. கௌதமருக்கு வஸாகாவைப் பிடித்திருக்கிறது.

வருகிறவர்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில் வருகிறார்கள்... இந்த உலகத்தில் உள்ளும் புறமுமாக அழிவற்ற நிலையில் நித்திய வஸ்து எதுவும் இல்லை என்ற ஞானம் மற்றவர்களுக்கு உயர்ந்த எண்ணங்களை ஏற்படுத்தி - யிருப்பதால்தான் ஏராளமாய் ஆட்கள் கௌதமரைத் தேடிவருகிறார்கள்.

‘சரயூ’ நதித்தீரத்தில் அழகிய மாடம்... இளவரசன் சுதத்தன், புத்தருக்காக மாடம் மட்டுமல்ல ஏராளமான திரவியங்களை செலவழித்து ஜேதவனம் என்கிற உத்தியானத் தையுமல்லவா உருவாக்கி கௌதமருக்கு பாத காணிக்கையாக்கியிருக்கிறான். அங்கு ‘புத்தம் தர்மம் சங்கம்’ என்று ஓங்கியொலித்த மந்திரத்தினுள் எல்லாமும் கட்டுப்பட்டிருந்தது. அகன்ற மேடையின் நடுவே ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பிய அரச மரம். இது கௌதமரின் முயற்சியினாலும் ஆழ்ந்த சிந்தனையினாலும் மனதின் மயக்கம் போக்கி தெளிவைப் பெற்றதின் அடையாளமாக தலைநிமிர்ந்து நிற்கிறது. அரச மரத்தை வணங்குவது முயற்சியையும் ஆத்ம வெற்றியையும் வணங்குவதற்குச் சமானம். இறுமாப்புடன் விழிகளைத் திறந்த கௌதமருக்கு தூரத்தில் யசோதா தெரிந்தாள்.
“வரச்சொல்லுங்கள் ஆனந்தரே” கௌதமருக்குப் பணிவிடை செய்யும் ஆனந்தருக்கு அவரின் வார்த்தையே வாழ்க்கை என்பதுபோல விரைந்தார். யசோதா கௌதமனின் முன்னிலை யில் வந்து நின்றபோது தேகம் ஒரு தடவை சில்லிட்டு ஆடியது.
குரலைத் தாழ்த்தி அழைத்தார்.
“...ய... சோ...தா...”
“யசோதாதான். உங்கள் மனைவி. உங்களோடு சயனித்துப் பிள்ளை பெற்றுக்கொண்ட அபலைப் பெண்.”
வந்தவள் கோமாய்ப் பொரிந்தாள்.
“சாந்தி... சாந்தி... புத்தம் சரணம் ..” அவர் தடுமாறி ஞானம் பேசினார்.

யசோதா முகம் சுழித்தாள். கோபத்தால் அதிர்ந்தாள். “‘நீங்கள் பூட்டிய தாலி இன்னும் என் கழுத்தில்தான் இருக்கிறது.. பாருங்கள்.” அரச மரத்தின் கிளையில் இருந்த பட்சியொன்று கீச்சிட்டுப் பரவரத்துப் பறந்தது. கௌதமர் நெஞ்சில் யசோதாவின் பார்வை ஈட்டியாய்க் குத்தியது.. அவர் மனசோடு பேசினார். அவர் இதழ்கள் முறுவல் பூத்தது..
‘...ய...சோ...தா....’ வெகு நாட்களுக்குப் பிறகு அவளின் பெயரை உணர்ச்சியோடு உச்சரித்தார்.
“பெண்ணே நான் சொல்வதைப் பொறுமையாகக் கேள். இந்த உலகத்தின் பேறுகள் யாவும் கணத்துக்கு கணம் மாறிக்கொண்டெயிருக்கும். தோன்றியது யாவும் அழியும். இந்த அநாத்ம வாதத்தைப்புரிந்து கொள். நான் பரிநிர்வாணம் அடைந்திருக்கிறேன். ஆசை துறந்து ஞானம் பெற்றிருக்கிறேன். இதைவிடப் பெரியது ஒன்றுமில்லை.”

அவர் பேசிக்கொண்டிருந்தபோதே சீடர் ஆனந்தர் அங்கு வருவதைப் பார்த்துவிட்டு அவருக்கு கைகளால் சைகை செய்தார். அந்த சைகைக்கு வரவேண்டாம் என்று பொருள். ஆனந்தர் தூரத்திலேயே நின்றுவிட யசோதா அச்சமின்றி கௌதமரை நிமிர்ந்து பார்த்தாள்.

சிரைத்த தலை, மெலிந்த தேகம், அவர் காவி தரித்திருப்பது அவளுக்கு எரிச்சலை மூட்டியது .

அவளுக்கு ஞாபகம் வந்தது கௌதமர் காதலோடு வந்து அவளைப் பெண்பார்த்ததும் கலியாணம் செய்து கொண்டதும் சல்லாபித்ததும் அவள் ஒரு பிள்ளைக்குத் தாயானதும் அவள் மனதில் தொடராய் ஓடியது.

நினைவு சுட்டதால் பொரிந்தாள், “இரவோடிரவாக ஏன் யாருமறியாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்தீர்கள்.” கௌதமர் சொல்வதற்கு முன் சுற்று முற்று ஒரு தடவை பார்த்தார். தன் சீடர் ஆனந்தர் திடுக்கிட்டு நிற்பது தெரிந்தது. அதனால் மௌனத்தில் நிமிடங்கள் கழிந்தன.
“பெண்ணே நீ சொல்வது நிஜம்தானா?” ஆனந்தர் கேட்டார். “ஏன் உங்கள் குருநாதர் இதை உங்களுக்குச் சொல்லவில்லையா?”

ஆனந்தர் தன் குருவைக் கிட்ட வந்து உற்றுப் பார்த்தார். “ஓ.. எத்துணை சாந்தம்... புன்னகை மாறாத வதனம் .... அதிராமல் கூறும் பஞ்சசீலக் கொள்கையும் தர்மபோதனையும் ஞானம்பெற்ற இவரைத் துறவுக்குத் துரத்தியது ஆடம்பரமும் அரண்மனையும் மட்டுமல்ல, கட்டிய அழகிய மனைவியும் பிள்ளையும் ....” ஆனந்தரின் நினைப்பில் கௌதம புத்தர் இன்னும் ஒரு படி உயர்ந்தார்.

கௌதமர் யசோதாவின் கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. அவரின் மனம் வேறொரு நினைப்பில் இருந்தது. நேற்றைக்கு முன்தினம் தன்னிடம் வந்த பெண்ணை யசோதாவுடன் ஒப்பிட்டுத் தராசில் ஏற்றிப் பார்த்தார். அவள் கணவனை விட்டு விலகிய கைம்பெண் தன் ஆண்பிள்ளையை சர்ப்பம் தீண்டி இறந்துவிட தூக்கிக்கொண்டு ஓடிவந்தாள். “குழந்தை இறந்துவிட்டது. ஒரே பிள்ளை, ஆண்பிள்ளை” அரற்றினாள். “பெண்ணே நான் என்ன செய்ய வேண்டும்.?” “உயிர்ப்பித்துத் தாருங்கள் புத்தரே” “அதனாலென்ன, தருகிறேன். ஆனால் நீ ஒன்று செய்ய வேண்டுமே?” “எது வேண்டுமானாலும் செய்கிறேன். சொல்லுங்கள்.” கௌதமருக்கு சிரிப்பு வந்தது. புன்னகை மாறாமல் சொன்னார், “ஒருபோதும் சாவு நிகழாத வீடுகளுக்குச் சென்று மூன்று பண்டங்கள் ...” அந்தப் பெண்ணுக்கு வியர்த்தது. எளிதான பொருட்கள்தான் உப்பு, கடுகு, மிளகுதான் .. “போ ... வாங்கிவா ... நாழிகையாவதற்குள் திரும்பிவிடு.” அவள் குழந்தையின் உடலைத் தரையில் கிடத்திவிட்டு ஓடினாள். பொழுது கழிந்து வந்தவளின் மனம் கெட்டியாகியிருந்தது “சாவு நேராத வீடு எங்குமில்லையே ஐயனே” “புரிகிறதா? சாவு மட்டும்தான் மனித வாழ்வில் நிச்சயமானது.” அவள் புரிந்துகொண்டாள். அவள் புத்தரின் ஞானத்தை உள்வாங்கியிருந்தாள். தன் பிள்ளையின் ஈமக்கிரியை செய்வதற்கு மனம் விட்டுக் கொடுத்ததை நினைத்து சாந்தியடைந்தாள்.

அவளைவிட இந்த யசோதா என்ன? ஆழ்ந்து அமைதியாக உரைத்தால் சரியாகப் புரிந்துகொள்ளுவாள். யசோதாவின் கண்களில் ரௌத்திரம் தெரிந்தது. “நான் கேட்டதற்கு இன்னும் பதில் சொல்லவில்லை.” அவளின் சீற்றம் கௌதமரின் அமைதியைக் கலைத்தது...
“நீ என்ன கேட்கிறாய் நான் பதில் சொல்வதற்கு?”
“அரண்மனையின் கேளிக்கையும், பகட்டும் மனைவியையும், புத்திரனும் எப்படிக் கசந்தது உங்களுக்கு?”
“யசோதா மாற்றம் என்பது முன்னோக்கிச் செல்வது. பின்னோக்கியல்ல. கடந்தகாலம் பிணத்திற்குச் சமனாகும். அதை நினைத்துக் குழம்பாதே. நிகழ்காலம் மட்டும்தான் வாஸ்தவம். வா...யசோதா பொய்மையைவிட்டு விலகி வந்துவிடு. நிஜமானது எது என்று காட்டுகிறேன். பிணியையும், முதுமையையும் சாவையும் உணராத புதிய நிலைக்குள் வந்து விடு..”
“ச்சீ ... மனித வாழ்க்கையின் இயற்கை விதிகளுக்கு முகம் கொடுக்க முடியாத கோழையா நீங்கள். அதனால்தானா ஓடிவந்தீர்கள்?” கௌதமருக்கு முகம் சட்டெனக் கறுத்தது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

### கட்டுரைத் தொடர் 5

# தெசலோனிக்கர் 1ம், 2ம் திருமுகம்

எழுத்துருவாக்கம் ஆயர் செ. சூசைமாணிக்கம்

## 1. தெசலோனிக்கர் முதல் திருமுகம்

உரோமைப் பேரரசுக்கு உள்பட்ட மாசிதோனிய மாநிலத்தின் தலைநகர் தெசலோனிக்கா. இது ஒரு துறைமுகப்பட்டினம், வணிக நகர். அங்கு யூதர் பலர் வாழ்ந்து வந்தனர்.

தமது இரண்டாம் நற்செய்திப் பயணத்தின் - போது ஏறத்தாழ கி.பி.50இல் பவுல் தெசலோனிக்கா நகரை அடைந்தார். அங்கு மூன்று வாரமாவது தங்கி அவர் நற்செய்திப் பணி ஆற்றியிருக்க வேண்டும். திரளான பிற இனத்தார் அவரது போதகத்துக்குச் செவிமடுத்துக் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டனர். இதனால் யூதர்கள் பொறாமை கொண்டு குழப்பம் உண்டாக்கவே, பவுல் அங்கிருந்து இரவோடு இரவாக வெளியேற வேண்டியிருந்தது (திப 17:1-10).

இருப்பினும் பவுல் தெசலோனிக்கரின் நலனில் தொடர்ந்து அக்கறை காட்டி வந்தார்; அவர்களைக் காண ஏங்கினார் (2:17-20). தாமே அங்கு செல்ல முடியாத நிலையில், சில மாதங்கள் கழித்துத் திமொத்தேயுவை அனுப்பி வைத்தார் (3:1-5). திமொத்தேயு தெசலோனிக்கக் கிறிஸ்தவர்கள்பற்றி நல்ல செய்தி கொண்டு வந்தார். அதாவது, பல இன்னல்களுக்கு நடுவிலும் அவர்கள் தளராத உள்ளத்துடன் கிறிஸ்தவ நம்பிக்கையில் நிலைத்திருப்பதாகப் பவுலிடம் தெரிவித்தார் (3:6-13). இதை அறிந்த பவுல் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி அவர்களை ஊக்குவிக்கவும், திமொத்தேயு வழியாக அவர்கள் எழுப்பியிருந்த சில வினாக்களுக்கு விடை அளிக்கவும் அவர்களுக்கு ஒரு மடல் வரைந்தார். இதுவே புதிய ஏற்பாட்டில் முதன்முதல் எழுத்து வடிவம் பெற்ற நூல். இதைக் கொரிந்திலிருந்து பவுல் ஏறத்தாழ கி. பி. 51- இல் எழுதினார்.

### கடித அமைப்பு

1. முன்னுரை (1:1-10)
2. நிகழ்ச்சிப் பகுதி (2:1-3:13)
   தெசலோனிக்காவில் பவுலின் பணி (2:1-16)
   திருமுகம் எழுதப்பட்ட சூழல் (2:17-3:13)
3. அறிவுரைப் பகுதி (4:1-12)
   தூய வாழ்வு (4:1-8)
   சகோதர அன்பு (4:9-10)
   உழைத்து வாழ அழைப்பு (4:11-12)
4. கோட்பாட்டுப் பகுதி (4:13-5:11)
   இறந்தோரின் நிலை (4:13-18)
   ஆண்டவரது வருகை (5:1-11)
5. அறிவுரைப் பகுதி (5:12-22)
6. முடிவுரை (5:23-28)

### சிறப்புக் கருத்து

### கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

இம்மடலில் காணப்படும் முக்கியமான இறையியல் கருத்தாகக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அமைகிறது. தெசலோனிக்கர் இரண்டாம் திருமுகத்திற்கும் இது பொருந்தும். எனவே இதுபற்றிய அடிப்படையான சில கருத்துக்களை இவண் காண்பது நல்லது.

தீமை நிறைந்த, அநீதி மலிந்த, இந்த உலகில் கடவுள் குறிக்கிட்டு, விரைவில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்தைத் தோற்று - விப்பார். பொல்லாரை அழித்தொழித்து நல்லார்க்கு நிறைவாழ்வு அளிப்பார் என்ற எண்ணம் கி. மு 3ம் நூற்றாண்டு அளவில் யூதரிடையே அரும்பியது. இது காலப்போக்கில், கடவுள் தம் ஊழியர் (மெசியா) வழியாக உலகை நன்னிலைக்குக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையாக மலர்ந்தது. கடவுள் இவ்வாறு செயற்படும் நன்னாள் ஆண்டவரின் நாள் என்று பெயர் பெற்றது. இதற்கு வெளிப்பாட்டுக் கண்ணோட்டம் எனப் பெயர். இக்கண்ணோட்டம் புதிய ஏற்பாட்டைப் புரிந்துகொள்ள இன்றியமையாத பின்புலம் ஆகும். போருக்குச் சென்ற அரசர் ஒருவர் தம் மாற்றானை முறியடித்து, வெற்றி வீரராகத் தமது நகருக்குள் நுழைகிறார் என வைத்துக் - கொள்வோம். அப்பொழுது நகர மக்கள் மாபெரும் கூட்டமாகத் திரள்வார்கள்; நகருக்கு வெளியே சென்று ஆர்வத்தோடு தங்கள் அரசரை வரவேற்று, ஆடம்பரத்தோடு அவரை ஊர்வலமாக அழைத்து வருவார்கள். அன்று அவர்களுக்குப் பெரிய விழா.



இதுபோன்று சாவை வென்று விண்ணகம் சென்ற கிறிஸ்து மீண்டும் தம் மாட்சியில வருவார் (1:10) அப்பொழுது தீயோரை ஒழித்துக்கட்டி, நல்லார்க்குத் தம் நிறை வாழ்வில் பங்களிப்பார். என்ற எதிர்பார்ப்பு தொடக்கக் காலக் கிறிஸ்தவர்களின் மனத்தில் மிக ஆழமாய் வேரூன்றியிருந்தது. தீர்ப்பின் நாள், நெருப்பின் நாள், சினத்தின் நாள், ஆண்டவரின் நாள் என்றெல்லாம் அழைக்கப்பெற்ற அந்த நாளுக்காகத் தெசலோனிக்கக் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியோடு காத்திருந்தார்கள். இம் மகிழ்ச்சியைக் குலைக்கும் வகையில் அவர்க - ளிடையே சில ஐயப்பாடுகள் எழுந்ததாகத் தெரிகிறது. இவை பற்றித் திமொத்தேயு வழியாக அறியவந்த பவுல் விளக்கம் அளிக்கிறார்.

i. ஆண்டவரது வருகைக்கு முன் இறந்தவர்களின் நிலை என்ன? அதாவது, ஆண்டவர் அண்மையில் வருவார்; அவர் வரும் வரை எல்லோரும் உயிருடன் இருப்பர்; அவரை வாழ்த்தி வரவேற்பர்; அவருடன் இறை மாட்சியில் பங்குபெறுவர் என்று தெசலோனிக்கர் நம்பியிருந்த வேளையில் அவர்களுள் சிலர் இறக்க நேரிட்டது. இதனால் மற்றவர்கள் கவலைகொள்ளத் தொடங்கினார்கள். இதற்குப் பவுல் 4:13-18-இல் விளக்கம் அளிக்கிறார். உயிர்த்த கிறிஸ்து மாட்சியோடு வருவார் என்பதைப் பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் இறைக்காட்சியின் ஒளியில் (விப 19:16-19) வெளிப்பாட்டு நடையில் (மத் 24:30-31) விளக்குகிறார். வெற்றி வேந்தரை எதிர்கொள்ளச் செல்லும் மக்கள் போன்று இறந்தோரும் உயிருடன் இருப்போரும் இணைந்து கிறிஸ்துவை வரவேற்கச் செல்வர்; எல்லோரும் இறை மாட்சிக்குள் எடுத்துக்கொள்ளப்படுவர்; எப்போதும் அவரோடு இருப்பர். எனவே இறந்தோரைப்பற்றிக் கவலைப்படுவது பொருளற்றது என்கிறார் பவுல்.

ii ஆண்டவரின் வருகை எப்போது நிகழும்? இறந்தோர் போன்று இப்போது உயிரோடு இருப்போரும் ஆண்டவரைச் சந்திக்கத் தவறிவிடுவாரோ? இக்கேள்விக்கான பதிலும் (5:1-11) வெளிபாட்டு நடையில் அமைகிறது; இயேசுவின் கூற்றை (மத்.24:36-44) நினைவுபடுத்துகிறது. ஆண்டவரின் வருகை திடீரென நிகழும் அதற்காக விழிப்புடன் காத்திருந்து, போர்க்கால அடிப்படையில் செயல்படுவதில்தான், தத்தம் கடமைகளைச் செய்து தூயோராய் ஒழுகுவதில்தான் கிறிஸ்தவ வாழ்வு அடங்கும் என்கிறார் பவுல்.

## 2. தெசலோனிக்கர் இரண்டாம் திருமுகம்

கிறிஸ்துவின் வருகை விரைவில் நிகழும் என்று பவுல் தம் முதல் மடலில் தெசலோனிக்கருக்கு எழுதியிருந்தார். இதைத் தவறாகப் புரிந்துகொண்ட சிலர் அந்நாள் ஏற்கெனவே வந்துவிட்டது (2:2; காண் மத். 24:23-28) என்று நம்பத் தொடங்கினர்; அல்லது இவ்வாறு சிலர் பவுலின் கூற்றைத் திரித்துக் கூறியிருக்கலாம். இதனால் மக்களிடையே குழப்பமும் மனக்கலக்கமும் உண்டாயின.

ஆண்டவரின் நாள் நெருங்கி வந்துவிட்டது என்றால் ஏன் கடுமையாக உழைக்க வேண்டும்? என்று கருதிய சிலர் சோம்பித் திரிந்தனர்; தாம் வேலை செய்ய விரும்பாதது மட்டும் அன்று, பிறரையும் வேலை செய்ய விடவில்லை.

வேறு சிலர், நாம் மீட்புப் பெறுவோமா? ஆண்டவரின் நாளுக்காகத் தயாரிக்க நேரம் இல்லையே! என்று மனம் கலங்கத் தொடங்கினர்.

இக்கட்டத்தில் ஆண்டவரின் வருகைபற்றி மேலும் சில தெளிவுகளை அளித்து, வாழ்வில் பிடிப்பு உள்ளவர்களாய்த் தெசலோனிக்கரை மாற்றிட, ஏறத்தாழ இரண்டு மாத இடை வெளிக்குப்பின் (கி. பி. 51) கொரிந்திலிருந்து பவுல் இம்மடலை எழுதியிருக்க வேண்டும்.

ஆண்டவரின் வருகைபற்றிப் பவுலின் சீடர் ஒருவர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் (கி.பி. 80-100) ஒருவேளை பவுல் இறந்த பிறகு – பவுலின் பெயரால் வேறொருவர் எழுதிய மடல் இது என்பர் சிலர். எதிர்க்கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை என இம்மடலைக் கருதுவோரும் உள்ளனர்.

### கடித அமைப்பு

1. முன்னுரை (1:1-12) 2. கோட்பாட்டுப் பகுதி (2:1-12) *ஆண்டவரின் வருகைக்கு முன்நிகழும் அடையாளங்கள்.* 3. அறிவுரைப் பகுதி (2:13-3-15) *நம்பிக்கையில் நிலைத்திருக்க எச்சரிக்கை (2:13-3:5) சோம்பல் தகாது (3:6-15).*
4. முடிவுரை (3:16-18).

### சிறப்புக் கருத்துகள்

#### ஆண்டவரின் வருகைக்குமுன் நிகழும் அடையாளங்கள

ஆண்டவரின் வருகை திடீரென நிகழும் என்று1தெச. 5:2-3இல் குறிப்பிட்ட பவுல், அது முன்னறிவிப்போடு தோன்றும் என இம்மடலில் வரைகிறார்; அதற்குமுன் நிகழவிருக்கும் அடையாளங்களை வருணிக்கிறார் (2:1-12). இப் பகுதியும் வெளிப்பாட்டு நடையிலேயே உள்ளது (காண் மாற் 13). முதலில் இறைவனுக்கு எதிரான கிளர்ச்சி, அதாவது சமயப் பிரிவினை தோன்றும். மாந்தரைக் கெடுத்து இறையாட்சியை அழிக்கச் சாத்தான் மேற்கொள்ளும் இம்முயற்சியைத் தொடர்ந்து நெறிகெட்ட மனிதன் - எதிர்க்கிறிஸ்து – வெளிப்படுவான் (2:3-4) என்கிறார் பவுல். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் செலூக்கிய மன்னன் அந்தியோகு IV எருசலேம் கோவிலில் சேயு தெய்வத்தின் சிலையை மக்கள் வழிபாட்டுக்காக நிறுவிக் கோவிலைத் தீட்டுப்படுத்திய நிகழ்ச்சி இங்கு நினைவுகூரத் தக்கது (2மக் 6:2; ஒப் மாற் 13:14; தானி 11:36-37). கிறிஸ்துவுக்கும் எதிர்க்கிறிஸ்துவுக்கும் இடையே நடைபெறும் போராட்டம் விளக்கப்படுகிறது (2:5-12). அவரைத் தடுத்து வைக்கும் ஆற்றல் அகற்றப்படும். இது கலிகுலா அல்லது தொமிசியனின் கொடுஞ்செயல்களை நினைவுறுத்துவதாக அமைந்துள்ளது. இருப்பினும் இறுதி வெற்றி கிறிஸ்துவுக்கே உரியது. எனவே கிறிஸ்தவ நம்பிக்கையில் நிலைத்திருக்கப் பவுல் எச்சரிக்கை விடுக்கிறார் (2:13-3:5); சோம்பலைத் தவிர்த்துச் சுறுசுறுப்புடன் உழைத்து வாழக் கட்டளை கொடுக்கிறார் (3:6-12; 1தெச 4:11-12; 5:14).

(தொடரும்)

## கருத்துக் களம்

# மாதங்களின் பெயர்களை எப்படி அழைப்பது சரியானது?

*மேற்படி விடயம் தொடர்பாக வாசகர்களின் ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான கருத்துக்களை மன்னா வரவேற்கின்றது. இந்த விடயம் தொடர்பாக தெளிவான நிலைப்பாடு இல்லாத நிலை தொடர்வதால் உண்மையை, சரியானதைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியாக உங்கள் கருத்துக்கள் அமையும் என எதிர்பார்க்கின்றோம். - பதிப்பாசிரியர்*

## தை. மாசி... என்று அழைப்பதே சரியானது. அருட்பணி. ம. இ. பயஸ்

உரோமாபுரியின் ஆட்சிக் காலத்தில் பட்டினத்தின் தோற்றம் (AB URBE CONDITA) என்ற அடிப்படையில் ஆண்டுகளை கணக்கிட்டனர். தமது சக்தியுள்ள தெய்வங் - களினதும், சக்கரவர்த்திகளினதும் பெயர்களை மாதங்களுக்குச் சூட்டினர். அவை முறையே JANUS (சுறவம் - தை), FEBRUARIUS (கம்பம் - மாசி), MARTIUS ) மீனம் - பங்குனி), APRLIS , (மேழம் - சித்திரை), MAIUS (விடை - வைகாசி), JUNIUS (இரட்டை - ஆனி), JULIUS (கடகம்-ஆடி) AUGUSTUS (மடங்கல் - ஆவணி) SEPTEM (கன்னி - புரட்டாசி) OCTO (துலை - ஐப்பசி) NOVEM (நளி - கார்த்திகை) DECEM (சிலை - மார்கழி)

**கோள்களைப் பின்பற்றி நாட்கள் பெயரிடப்பட்டன. அவை முறையே:**

ஞாயிறு (SOLAR - SUNDAY)
திங்கள் (LUNA - MONDAY)
செவ்வாய் (ZEUS - TUESDAY)
புதன் (அறிவன்- MERICURY - WEDNESDAY)
வியாழன் (JUPITER - THURSDAY)
வெள்ளி (VENUS - FRIDAY)
சனி (காரி- SATURN - SATURDAY)

**அன்றிருந்த இலக்கங்கள்:**

**உரோமானியர்:**
I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X
**அராபியர்:** 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10
**தமிழர்:**க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ,க

உரோமாபுரியிலே கத்தோலிக்க திருச்சபையின் தலைவராயிருந்த 1ஆம் யோவான் ஞானத்தந்தை ஆராட்சிகளை அடுத்து தம்து ஆட்சியாண்டு கிறிஸ்துவின்பின் 523 என்று அறிக்கையிட்டு, புதிய கிறிஸ்தவ ஆண்டு வரிசையைக் காண்பித்தார். கத்தோலிக்க திருச்சபையின் தலைவராயிருந்த 13ம் கிறகோரி ஞானத்தந்தை சில திருத்தங்களுடன் இவருடைய காலம் கி. பி 1582ம் ஆண்டு எனப் பிரகடனம் செய்தார். மேற்குலகம் 1751ம் ஆண்டும், இங்கிலாந்து 1752ம் ஆண்டும் உருஸ்சிய 1917ம் ஆண்டும் இதை அதிகாரபூர்வமாக உள்வாங்கினார். பழைய மாதங்கள், நாட்கள் ஆகியவற்றின் பெயர்கள் மாற்றம் பெறவில்லை.

இயேசுவின் உயிர்ப்பு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிறு (மாற் 16:9, லூக்கா 24: 1) புதிய ஓய்வு நாளாக முதலிடம் பெற்றது. ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியில் சிக்கிய ஓசேயானியா, ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆகிய கண்டங்களின் மக்களும் கிறிஸ்தவ ஆண்டினைப் பின்பற்றினர்.

**தமிழர்**

பிசவ - அட்சய வரை 60 ஆண்டு பலசக்கர முறையில் இருந்த தமிழ் ஆண்டின் பெயர்கள், ஒன்றுகூட தமிழ்ச் சொல்லாக இருக்கவில்லை. 1921ம் ஆண்டு தமிழ்ச் சான்றோர் பச்சையப்பன் கல்லூரியில் (சென்னை - இந்தியா) கூடி ஆராய்ச்சி செய்தனர். திருவள்ளுவர் பெயரில் தொடராண்டு கி. மு. 31 என்று தீர்மானித்தனர்.

1935ம் ஆண்டு புதிய தமிழ் தொடர் அறிமுகமானது. (1935 + 31 = 1966) 1970ம் ஆண்டு இந்திய தமிழக அரசு இதை ஏற்றுக் கொண்டது. 1972ம் ஆண்டு இந்திய மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றது. இவ்வருடம் கிறிஸ்தவ ஆண்டு 2009 என்றால் 31 ஆண்டுகள் இணைத்தால் திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆகும்.

**கிறிஸ்தவர்கள்**

தமிழ் மக்களுக்கென ஆண்டுகள் கணிக்கப்படுவது போற்றப்படுவதும் வரவேற்புக் -குரியதுமாகும். ஆயினும் கிறிஸ்தவர்களின் மாதங்களைக் குறிப்பிடும்பொழுது, வேற்று மத, மொழிகளைப் பயன்படுத்தாமல் சுத்த தமிழ் மாதங்களின் பெயர்களையே நாமும் பயன்படுத்த வேண்டும். பிறமொழி கலக்காமல் தமிழைப் பாதுகாப்போம். தமிழ் கத்தோலிக் - கர்களே உங்கள் நாட்காட்டிகளில் பிற மத மொழிச் சேர்க்கையை நிறுத்துங்கள். 12 ஆங்கிலச் சொற்கள் தமிழ் அகராதிக்கு அவசியமா? கலப்படம் தொடர வேண்டுமா?

01-02-2008 ஆண்டு தொடக்கம் தைப்பொங்கல் விழாவே தமிழ்ப் புத்தாண்டு விழா எனத் தமிழ் நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. தைப்பொங்கல் புத்தாண்டு என்றால் வேற்று மக்கள் கொண்டாடும் சித்திரை புத்தாண்டு எம்முடையதாகுமா?

- நன்றி-பாதுகாவலன்

## ஜனவரி, பெப்ரவரி என்று அழைப்பதே சரியானது. மரிய வளன்

ஜனவரி, பெப்ரவரி என்பவை கிரகோரியன் நாட்காட்டிக்குரிய மாதங்களின் பெயர்களாகும். தை, மாசி .... என்பவை தமிழ் நாட்காட்டிக்கு உரியவை. கிரகோரியன் நாட்காட்டியும், தமிழ் நாட்காட்டியும் நாள்களைக் குறிக்கும் முறை வித்தியாசமானது. உதாரணமாக, தமிழர் தைப் -பொங்கல் விழாவை தமிழ் நாட்காட்டியின்படி தை முதலாம் நாள் கொண்டாடுகின்றார்கள். இந்த ஆண்டு அது கிரகோரியன் நாட்காட்டியின் படி ஜனவரி 14ம் நாள் கொண்டாடப்பட்டது. ஜனவரி என்பதற்குப் பதிலாகத் தை என்று சொன்னால் அது தை 14ம் நாள் கொண்டாடப்பட்டதாயிருக்கும். ஆனால் ஒரேநாள் தை முதலாம் நாளாகவும் தை 14ம் நாளாகவும் இருக்க முடியாது. எனவேதான் இத்தகைய குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவே கிரகோரியன் நாட்காட்டியின்படி நாட்களைக் குறிக்கும்போது ஜனவரி, பெப்ரவரி என்ற சொற்களைப் பயன்படுத்துகின்றோம். கடந்த காலத்தில் ஜனவரி, பெப்ரவரி .. என்பதற்குப் பதிலாக தை, மாசி ... என்பவற்றைத் தவறாகப் பயன்படுத் - தினோம் என்பதால் தொடர்ந்தும் அப்படித் தவறாகப் பயன்படுத்த வேண்டுமா? மேலும் இன்று பொதுவாக எல்லா நாடுகளிலும் திருச்சபையிலும் கிரகோரியன் நாட்காட்டிதான் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- நன்றி-பாதுகாவலன்

இடம்பெயர்ந்த வன்னி மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள

# வவுனியா நிவாரண முகாம் செய்திகள்

**வவுனியா நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள**
வன்னி மக்கள் தொடர்பாக வெளிவந்த முக்கியமான பத்திரிகைச் செய்திகளின் தொகுப்பு

## வவுனியா முகாம்களுக்கு தினமும் பதினொன்றேகால் கோடி ரூபா தேவை

வடபகுதியில் நடைபெற்ற மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 3. இலட்சம் மக்களுக்கான ஒரு நாளைக்குரிய உணவு மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் (11 கோடியே 30 இலட்சம் ரூபா) நிதி தேவைப்படுவதாக 'வேள்ட் விசன்' (World Vission) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 'வேள்ட் விசன்' நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் சுரேஷ் பார்ட்லட் தெரிவிக்கையில்,

நிவாரண உதவிகளை வழங்கும் அமைப்புகளுக்கு நிதி உதவி தற்போது பாரியதொரு பிரச்சினையாக உள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி உதவிகள் முன்னரே திட்டமிட்ட செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் தற்போது நிவாரண உதவிகளை வழங்குவதற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிதி உதவியை இலங்கைக்கு வழங்குவதா இல்லையா என்பது குறித்த அரசியலில் உலக நாடுகள் ஈடுபடக்கூடாது. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களில் சிறுபிள்ளைகள் பெருமளவில் உள்ளனர். எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கான தேவை உள்ளது.

அம்மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டியவர்கள். இம்மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பல மில்லியன் டொலர் நிதி உதவி தேவைப்படுகிறது எனத் தெரிவித்தார். (தினக்குரல் - 29.05.2009)



## படையினரிடம் சரணடைந்த 9,728 பேர் வவுனியாவிலுள்ள நான்கு முகாம்களில்

### 1700 பெண்கள் அடங்குவதாக பிரதி பொலிஸ்மா அதிபர் தகவல்

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அவ்வியக்கத்திலிருந்து தப்பி வந்து படையினரிடம் சரணடைந்த 9 ஆயிரத்து 728 விடுதலைப் புலி உறுப்பினர்களும் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நான்கு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று வட மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் லெவ்கே தெரிவித்துள்ளார்.

1700 பெண்கள் உள்ளடங்கலாக சரணடைந்துள்ள இவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை அவர்களில் பலர் இது வரையில் சிங்களவர்களைக் கண்டதுகூட இல்லை என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் உட்பட 9 ஆயிரத்து 728 உறுப்பினர்கள் இதுவரையில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 2 ஆயிரம் பேருடன் கடந்த சனிக்கிழமை வவுனியா நெளுக்குளம் தொழில் நுட்ப நிறுவனத்தில் வைத்து விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் மூலம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

தெற்கில் வாழும் தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் இணைந்து ஒற்றுமையானதொரு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர்களுக்கு உதாரணங்களுடன் எடுத்துக் கூறினேன்.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷமீது நம்பிக்கைக்கொண்டு நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளில் அவர்களின் ஒத்துழைப்புக்களை முழுமையாக வழங்குமாறு வேண்டுகோளுக்கு அவர்கள் பெரும் வரவேற்பினை வழங்கினர் என்றார். (வீரகேசரி - 16.06.2009)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் கழிவறை வசதிகள் பற்றாக்குறை

வவுனியா நலன்புரி நிலையங்களில் குளியலறை மற்றும் மலசலகூட வசதிகள் உட்பட பல்வேறு குறைபாடுகள் நிலவி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சுமார் மூன்று இலட்சம் மக்கள் தங்கியுள்ள மேற்படி நலன்புரி நிலையங்களுக்கு 6 ஆயிரத்திற்கும் அதிகமான மலசலகூடங்கள் தேவைப்படுகின்ற நிலையில் அங்கு 3 ஆயிரம் கழிவறை வசதிகளே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுகாதார வசதிகளற்ற நிலையில், அங்கு 50 பேருக்கு ஒரு கழிவறை என்ற அடிப்படையிலேயே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (வீரகேசரி - 15.06.2009)

## வவுனியா நலன்புரி நிலைய மக்களுக்கு மன்னாரில் உணவுப் பொருட்கள் சேகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பொது அமைப்புக்கள் உணவுப் பொருட்களை சேகரித்து வழங்கிவருகின்றன.

மேற்படி நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் அவதியுறுகின்றனர். இவர்களுக்கு உதவும் நோக்கில் பொது அமைப்புகள் பல இணைந்து மேற்படி மன்னார் மாவட்டத்தில் மதிய நேர உணவுகளை சேகரித்து வழங்கி வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் ஒத்துழைப்புடன் வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், அரசு அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் உதவியுடன் மதிய நேர உணவுகள் பெறப்பட்டு வழங்கப்படுகிறது.

## வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்த 400 வயோதிபர்கள் முதியோர் இல்லங்களில்

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 70 வயதுக்கு மேற்பட்ட சுமார் 400 வயோதிபர்கள் வவுனியா, மன்னார் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சமூக நலத்துறை உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

வவுனியா பம்பைமடுவில் உள்ள அன்பகம் முதியோர் இல்லத்திற்கு 200 வயோதிபர்களும் வடமாகாண சமூக நலத்துறை திணைக்களத்தினால் பம்ஜைமடு ஆயுள்வேத வைத்தியசாலையில் நடத்தப்படும் முதியோர் இல்லத்திற்கு 55 வயோதிபர்களும் அகிலாண்டேஸ்வரி முதியோர் இல்லத்திற்கு 101 பேரும், மன்னாரில் உள்ள பட்டித்தோட்டம் இல்லத்திற்கு 70 பேரும், கீரியில் உள்ள இந்து ஒன்றியம் நடத்தும் முதியோர் இல்லத்திற்கு 15 பேரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வன்னியிலிருந்து வ்ந்த நலன்புரி நிலையங்களில் இருக்கும் வயோதிபர்களை உறவினர்கள், நண்பர்களுடன் முகாம்களுக்கு வெளியே தங்க அனுமதிக்குமாறு அல்லது அவர்கள் அனைவரையும் முதியோர் இல்லங்களுக்கு அனுப்புமாறும் வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்டதும் தெரிந்ததே. (தினக்குரல் - 07.05.2009)

## வவுனியா நிவாரணக் கிராமங்களில் பெற்றோரை இழந்த நிலையில் பல சிறுவர்கள்

வவுனியா நிவாரணக் கிராமங்களில் பெற்றோரை இழந்த பல சிறுவர்கள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து கடந்த சில மாதங்களாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தவர்கள் பெற்றோரை இழந்த சிறுவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ஜகத் வெல்லவத்த கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: பெற்றோர்கள் உயிருடன் இருக்கின்ற போதிலும் தவறவிட்ட அநேகமான சிறுவர்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். பெற்றோரும் பிள்ளைகளும் வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ளனரா என்பது தொடர்பாகவும், ஆராய்ந்து வருகின்றோம்.

பெற்றோரை இழந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களின் எதிர்காலப் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு விசேட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். இதற்கமைய நடைமுறையிலுள்ள சுனாமி பேரலைச் சட்டத்தின் பிரகாரம் அந்தச் சிறுவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் அவர்களை ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளோம். (வீரகேசரி - 25.05.2009)

## முகாம்களில் உள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் அகதிகளில் 10 பேரில் ஒருவர் அங்கவீனர்

### ஹன்டிகாப் இன்டர்நஷனல் நிறுவனம் தெரிவிப்பு

முகாம்களிலுள்ள 2 இலட்சத்து 80 ஆயிரம் அகதிகளில் 10 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் அங்கவீனர்களாகவோ அல்லது மிக மோசமாகக் காயமடைந்தோ இருப்பதாகவும் நிவாரணப் பணியாளர்கள் கூறியுள்ளனர். உடலுறுப்புகளை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்கள் அல்லது சக்கர நாற்காலிகளும் தேவையெனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பிரெஞ்சு தன்னார்வத்தொண்டு நிறுவனமான ஹன்டிகாப் இன்டர் நஷனல் இதனைத் தெரிவித்திருப்பதாக பிரிட்டனின் 'டெலிகிராப்' பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

இலங்கை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரில் இந்தத் தன்னார்வ நிறுவனம் செயற்கை அவயவங்களைத் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலையை அமைத்துள்ளது.

அண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் நிலையங்களில் அவசர பிரிவொன்றை இந்த அமைப்பு ஏற்படுத்தியுள்ளது. அதிகளவில் இந்தச் செயற்கை அவயவங்கள் தேவைப்படுவதாக அந்த அமைப்புக் கூறியுள்ளது. மோதல் வலயத்தில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட சகலருக்குமே உதவி தேவைப்படுவதாக நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

ஆயிரக்கணக்கானோர் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கவீனராகக் காணப்படுகின்றனர். சுமார் 25 ஆயிரத்திற்கும் 30 ஆயிரத்திற்கும் இடைப்பட்ட தொகையினர் முடமாக இருப்பதாக ஹன்டிகாப் இன்டர் நஷனல் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் சதீஸ் மிஸ்ரா கூறியுள்ளார். வவுனியாவில் ஒரு அவசர நிலையமொன்று ஏற்படுத்தப்பட்டு அங்கு விசேட நிபுணர்கள் குழு பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செயற்கைக் கால்கள் பொருத்துவதாயின் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாக தொழிற்சாலைக்குக்கொண்டு சென்று அவர்களை பயிற்றுவித்தல் வேண்டும். ஆனால் முகாம்களை விட்டு மக்கள் வெளியே செல்ல முடியாத நிலையினால் தமது பணி பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். செயற்கைக் கால்களைப் பொருத்தி அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும். என்று அவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும். ஆனால், முகாம்களைவிட்டு மக்கள் வெளியேற அனுமதியில்லை. ஆதனால், எமது பணியை மேற்கொள்வது கடினம் என்று அவர் தெரிவித்தார்.

அண்மைய மோதலில் அவயவங்களை இழந்திருந்த பொது மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து தான் அதிர்ச்சி அடைந்ததாக உதவிப் பணியாளர் ஒருவர் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகைக்கு தெரிவித்திருக்கிறார்.

"ஒருவர் தனது ஒரு காலை இழந்திருந்தார். அவருடைய மனைவிக்கு இரு கால்களும் இல்லை. அவர்களுக்கு 8 மாத குழந்தை ஒன்று உள்ளது. அவர்கள் அந்தக் குழந்தையை பதுங்குகுழிக்குள் விட்டுவிட்டு உணவு எடுப்பதற்காக வந்தபோதே செல் தாக்கியுள்ளது. இப்போது அவர்கள் வவுனியா முகாமில் இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

தனது 20 வருடத் தொழிலில் உலகளாவிய ரீதியில் யுத்த வலயங்களிலுள்ள அகதிகளுக்குத் தான் உதவியளித்து வருவதாகவும் ஆனால், இந்த மாதிரியான மோசமான நிலையைத் தான் பார்த்ததில்லை என்றும் அவர் கூறியுள்ளார். முகாம்களிலுள்ள முதியவர்கள் இறந்துள்ளனர். பல குழந்தைகள் உறவினர்கள் இன்றியும் பராமரிப்பு இன்றியும் தனியாக உள்ளனர். பல பிள்ளைகளுக்கு தோல் நோய் பரவியுள்ளது.

6000 பேர் புல்மோட்டை முகாமில் உள்ளனர். உடுத்த உடையுடன் அந்த அகதிகள் நிர்க்கதியாகக் காணப்படுகின்றனர். இந்த முகாம் காட்டுக்குள் இருக்கிறது. 5 பேருக்கு பாம்பு கடித்துள்ளது. வவுனியாப் பகுதியில் உள்ள முகாம்களில் சகதியும் கழிவுகளுமாக காணப்படுகின்றன. இந்த மோசமான சுகாதாரமற்ற நிலையின் மத்தியில் கடுமையாக காயமடைந்தவர்கள் முகாம்களுக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்று அவர் தெவித்தார். (தினக்குரல் - 29.05.2009)

## இலங்கை மற்றும் உலகத் திருச்சபைச் செய்திகள்


### ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும் உணர்வுடன்
### இனவெறி, இனப்பாகுபாடு, சகிப்பற்ற தன்மை ஆகியவற்றின்
# ஒவ்வொரு வடிவத்திற்கும் முடிவு கட்டுங்கள்!

### – திருத்தந்தை அழைப்பு –

ஜெனீவாவில் இடம்பெற்ற இனப்பாகுபாட்டிற்கு எதிரான ஐ. நா கருத்தரங்கிற்கு வத்திக்கான் பிரதிநிதி குழுவை அனுப்பியுள்ளவேளை, உலகில் சகிப்பற்ற தன்மையை அகற்றுவதற்கு நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுமாறு திருத்தந்தை வலியுறுத்தினார்.

வரலாறு கற்றுக்கொடுத்துள்ள பாடங்களையும் தவிர்த்து இன்றும்கூட இத்தகைய வருந்தத்தக்க, சகிப்பற்றதன்மை சார்ந்த செயல்கள் இடம்பெறுவதால் ஐ. நா.வின் இந்த முயற்சி முக்கியத்துவம் நிறைந்தது என்றார். இதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள், உரையாடல் மற்றும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும் உணர்வுடன் இனவெறி, இனப்பாகுபாடு, சகிப்பற்ற தன்மை ஆகியவற்றின் ஒவ்வொரு வடிவத்திற்கும் முடிவுகட்டுவார்கள் எனத் தான் நம்புவதாகவும் திருத்தந்தை தன் செய்தியில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய முயற்சி மனிதனின் மாண்பு மற்றும் அவனின் உரிமைகளின் உலகளாவிய மதிப்பீட்டை உறுதிசெய்வதற்கான ஓர் அடிப்படை நடவடிக்கையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். உலகில் சகிப்புத்தன்மையை ஏற்படுத்த தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும், இது குறித்துக் கல்வி புகட்டப்பட வேண்டுமெனவும் திருத்தந்தை கோரிக்கை விடுத்தார்.



### கிறிஸ்தவ மதம் போர்த்துக்கேயரின் கொடையல்ல

#### – கொழும்புப் பேராயர் –

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே நாம் அப்போஸ்தலரான புனித தோமையார் மூலம் கிறிஸ்தவ மதத்தை ஒரு கொடையாகப் பெற்றுக்கொண்டோம் என்று பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை கூறினார்.

கடந்த 10.04.2009 பெரிய வெள்ளியன்று ஜா எல பங்கில் அமைந்துள்ள புனிதத்தலமான கப்பலாகன்டா 'கல்வாரி'யின் 150வது யூபிலி விழாவின்போதே பேராயர் இவ்வாறு கூறினார்.

எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்திற்கும், உயிர்ப்பிக்கும் வாழும் சாட்சியாக விளங்குபவர் புனித தோமையார். இயேசுவின் விண்ணேற்றத்தின் பின்னர் புனித தோமையார் தனது விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்து நற்செய்தியை அறிவிப்பதற்காக சீனா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1330ம் ஆண்டு திருத்தந்தை 22ம் யோவானால் நியமிக்கப்பட்ட ஒரு ஆயர் கொழும்பிலிருந்து பணியாற்றினார். ஆகவே நீண்டகாலக் கிறிஸ்தவ பாரம்பரியத்தின் வாரிசுகள் என்ற மட்டில் எமது விசுவாசத்தைப் பறைசாற்றுவதற்கான சுதந்திரமும், தைரியமும் எமக்கு உண்டு என பேராயர் கூறினார்.

### கத்தோலிக்க இசைப் பாரம்பரியத்தை பாதுகாக்கும் முயற்சி
## தியானம் மற்றும் இசை மாலைப் பொழுது

கொழும்பு அக்குவானஸ் கல்லூரியின் உப அதிபரும் "கத்தோலிக்க மெசஞ்சர்" பத்திரிகையின் பதிப்பாசிரியர் குழுவின் அங்கத்தவருமான அருட்பணி. சமன் மக்சிமஸ் அடிகளாரால் ஒழுங்குபடுத்தப்பட்ட "தியானம் மற்றும் இசைமாலைப் பொழுது" என்ற நிகழ்வின் தலைப்பு "கத்தோலிக்க இசைப் பாரம்பரியம்" (Catholic Music Heritage) என்பதாகும்.

இது 2009ம் ஆண்டு ஏப்ரல் 27ம் நாள் மாலை 6.30 மணிக்கு அதிமேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. திருச்சபையின் பட்டறிவு மிகுந்த இசையமைப்பாளர்களான அருட்தந்தையர்கள் மோசேஸ் பெரேரா, யோசவ் கப்றால், மார்சலின் ஜெயக்கொடி (அமதி) மற்றும் திரு. ஜே. கே. எஸ். பெரேரா ஆகியோரால் இசையமைக்கப்பட்ட 50 ஆண்டுகாலப் பாடல்களின் தொகுப்பான இறுவட்டு (CD) வெளியிடப்பட்டது.

"வருங்கால திருச்சபை திருவழிபாட்டு நிகழ்வுகளுக்காக இவை பாதுகாக்கப்படல்" என்பதை நோக்கமாகக் கொண்டே இவை தொகுக்கப்பட்டன.

## இந்தியத் தேர்தல் முடிவுகள் குறித்து திருச்சபை மகிழ்ச்சி

இந்தியத் தேர்தல் முடிவுகள் குறித்து இந்தியத் திருச்சபை தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. மதச்சார்பற்றதும் முன்னேற்றக்கொள்கையுடைய அரசைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்த இந்திய வாக்காளர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம் என இந்திய ஆயர் பேரவையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தங்கள் மதத்தை மட்டும் வளர்த்துச் சிறுபான்மை மதத்தவரை ஒடுக்க நினைத்தவர்களுக்கு வாக்காளர் நல்ல பாடம் புகட்டியிருப்பதாகவே சிறுபான்மையினர் கருதுகிறார்கள். பிளவுபடுத்தும் சக்திகளினின்று மக்களைக் காப்போம் என்றும், நிலையான மதச்சார்பில்லா ஜனநாயக ஆட்சி மலரும் என எல்லா மக்களிலும் சிறப்பாகச் சிறுபான்மை மதத்தவரிடையே நம்பிக்கை மீண்டும் கொண்டுவருவோம் என்ற தேர்தல் வாக்குறுதியை யு.பி.ஏ அரசு செயற்படுத்தட்டும் என இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் தங்கள் அறிக்கையில் கோரியுள்ளார்கள்.

### கிறிஸ்தவர்கள் இலங்கை நாட்டிற்கு அளித்த பங்களிப்புகள்
## கொழும்புப் பேரா்யர் எழுதிய நூல்

கொழும்புப் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையால் எழுதப்பட்ட "இலங்கையில் சில கிறிஸ்த பங்களிப்புக்கள்" எனும் நூலின் முதல்பிரதி முன்னாள் பேராயரான மேதகு நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ ஆண்டகைக்கு பேராயர் இல்லத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

நூலின் முன்னுரையில் பேராயர் எழுதியது, இலங்கையில் கிறிஸ்தவ சமூகத்தின் பங்களிப்பு அடிக்கடி பலரால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் சில உண்மைகளை அறிந்துகொள்ளாமையினாலும், குரோத எண்ணத்துடன் பரப்பப்பட்ட கட்டுக்கதைகளை நம்பியதாலும் செய்யப்பட்ட செயல்களாகும். இவை நல்ல கருத்துடன் செய்யப்பட்டவை. ஆனால் தவறாகத் தெரிவிக்கப்பட்டவை. இன்னும் பலர் இருக்கிறார்கள், அவர்கள் உண்மைச் சம்பவங்களைப்பற்றி விழிப்புள்ளவர்கள். ஆனால் கட்டுக்கதைகளை நம்புபவர்கள்.

எமது மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்கவும் எமது சொந்தக் கத்தோலிக்க சமூகத்திற்கும் ஏனைய கிறிஸ்தவ சமூகங்களுக்கும் எமது வரலாற்றையும் எமது தாய்நாடான இலங்கைக்கு நாம் அளித்த பங்களிப்பையும் பற்றி எடுத்துக்கூற வேண்டும் என்று கூறினார் பேராயர்.

### யாழ் மறைமாவட்டத்தில் குருத்துவ வெள்ளிவிழா நாயகர்கள்

யாழ் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 4ம் திகதி மூன்று அருட்பணியாளர்கள் தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கின்றார்கள். அருட்பணியாளர் எக்ஸ். பேனாட் றெக்னோ, அருட்பணியாளர் ஆர். சி. எக்ஸ். நேசராசா, அருட்பணியாளர் ஏ. சகாயதாசன் ஆகியோரே இந்த யூபிலி நாயகர்களாவர்.

### உயர் கல்விக்கான பயணங்கள்

- அருட்பணியாளர் போல் றொபின்சன் அவர்கள் மூன்று ஆண்டுகள் இறையியல் பட்டப்படிப்புக்காக (முதுகலைமாணி) இந்தியாவின் பெங்களூரில் உள்ள புனித இராயப்பர் இறையியல் கல்லூரிக்குச் செல்கிறார்.
- அருட்பணியாளர் அலெக்ஸ் றொபட் அவர்கள் மூன்று ஆண்டுகள் இறையியல் பட்டப்படிப்புக்காக (முதுகலைமாணி) உரோமை, ஊர்பன் பல்கலைக்கழகம் செல்கிறார்.

### யூலை மாதத்தில் யாழ் ஆயரின் முக்கிய தினங்கள்



யூலை மாதத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் முக்கிய தினங்கள் வருகின்றன. யூலை 3ந் திகதி ஆயருடைய பெயர் கொண்ட புனிதரின் (புனித தோமையார்) தினம். யூலை 6ம் திகதி யாழ் ஆயராக நியமனம் பெற்ற (1992) தினம். யூலை 13ம் திகதி அவருடைய பிறந்த (1938) தினம். யூலை 30ம் திகதி அவர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட (1981) தினம். எனவே தனது முக்கிய தினங்களை நினைவுகூர்ந்து ஆண்டவருக்கு நன்றி கூறும் ஆயருக்காக நாமும் செபிப்போம். எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

## இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக
### கத்தோலிக்க ஆயர்கள் ஜனாதிபதியுடன் உரையாடல்

பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் மற்றும் ஆயர் கரல்ட் அன்ரனி, ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, ஆயர் கிளீற்றஸ் பெரேரா ஆகியோர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டதையிட்டும், அவர்களுக்கான நிவாரணம், புனர்வாழ்வு நடவடிக்கைள் பற்றியும் உரையாடினர்.

இவர்களுடன் 'கறிற்றாஸ்' இலங்கை இயக்குனர்களான அருட்பணி. டேமியன் பெர்னாண்டோ மற்றும் அருட்பணி. ஜோர்ஜ் சிகாமணி ஆகியோரும் உடன் சென்றனர்.

இவர்கள் இடம்பெயர்ந்த மக்கள் சார்பாக ஜனாதிபதியிடம் பல்வேறுபட்ட வேண்டுகோள்களை விடுத்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளுக்கான கத்தோலிக்க திருச்சபையின் உதவியையும் ஆதரவையும் ஆயர்கள் ஜனாதிபதிக்கு உறுதிப்படுத்தினர்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கான உலர் உணவு, உணவு வகைகள் உடை மற்றும் அடிப்படைத் தேவையான பொருட்களை வழங்குவதில் கறிற்றாஸ் நிறுவனம் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றது என்று அருட்பணி. டேமியன் கூறினார்.

## போர்தான் ஒரே தீர்வு அல்ல!

### – பேராயர் மல்கம் றஞ்சித் –

தற்பொழுது போர் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் யாவரும் முகம்கொடுக்க வேண்டிய மற்றுமொரு கடினமான போர் எழுந்துள்ளது. அதாவது இலங்கை அன்னையின் பிள்ளைகளிடையே ஒப்புரவு, அன்பு ஆகியவற்றின் மூலம் அவர்கள் இழந்த மாண்பை மீண்டும் பெறச்செய்தல் என்று கூறினார் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை.

2009 வைகாசி 1ம் நாள் இத்தாலியிலுள்ள பதுவைப்பதியில் 15.000ற்கும் மேற்பட்ட இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த மக்கள் புனித அந்தோனியாரின் விழாவைச் சிறப்பிக்கக் கூடியிருந்தபோதே பேராயர் மல்கம்இவ்வாறு கூறினார்.

கிறிஸ்தவர்கள் எல்லாவிதமான வேறுபாடுகள், பிரிவினைகளுக்கு மேலாக உண்மையானதும் நீடித்து நிற்கக்கூடியதுமான அமைதியைக் கண்டறிய வேண்டும். நாம் வருங்காலத்தில் முகம்கொடுக்கவேண்டிய கடினமான சவால் இதுவாகும் என்றும் அவர் கூறினார்.

## அனைத்துத் துறவற சபைகளின் நவத்துறவிகள் ஒன்றுகூடல் –2009

"ஆண்களும் பெண்களும் இறைவனுடன் இணைந்த படைப்பாளிகள்" என்பதே ஏப்ரல் 13-16 வரை சிலாபம் சங்கின்டியாவ உருவாக்கல் நிலையத்தில் நடைபெற்ற அனைத்துத் துறவறசபை நவத்துறவிகளின் ஒன்றுகூடலின் கருப்பொருளாய் அமைந்தது.



வருடாவருடம் துறவற சபை முதல்வர்கள் மாநாட்டினால் ஒழுங்குபடுத்தப்படும் இந்நிகழ்வில் இம்முறை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் உட்பட 12 துறவற சபைகளிலிருந்து 52 பேர் பங்கேற்றனர்.

### திருமலை மட்டுநகர் மறைமாவட்டக் குருக்களுக்கான
## இடமாற்றங்கள்

- அருட்பணி. யூட் ஜோண்சன் - பங்குத்தந்தை - கல்முனை கல்முனைக் கோட்ட முதல்வர்.
- அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் - பங்குத்தந்தை – திருக்கோவில்
- அருட்பணி. ஜெய நிக்ஷன் - பங்குத்தந்தை – அளிக்கம்பை
- அருட்பணி. நிதிதாசன் - அருட்தந்தை அன்ரனி லீயோ (திருமலை) அவர்களுக்கு துணையாகவும், திருமலை (J.R.S) இயேசு சபை அகதிப்பணி பொறுப்பாளராகவும் செயற்படுவார்.
- அருட்தந்தை சி. வி. அன்னதாஸ் - சிறிய குருமடம் மாணவர்களின் கல்வி, ஆன்மீக உருவாக்கத்தில் துணைபுரிவார்.
- அருட்தந்தை ஜே. டன்ஸ்ரன் - தற்காலிக பங்குத்தந்தை - சகாயபுரம்
- அருட்தந்தை ஏ. தேவதாசன் - தேற்றாத்தீவு பங்கை தற்காலிகமாக மேற்பார்வை செய்துகொண்டு, மறைமாவட்ட அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கத்தில் இணைப்பாளராகவும் பணியாற்றுவார்.



- நன்றி -
வெட்டாப்பு

**புனித பவுல் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை**

# புனித பவுலின் அறநெறி அறிவுரை

**ஜெராட் டி ரொசய்ரோ அ.ம.தி.**



புனித பவுலின் "இயேசுக் கிறிஸ்து அனுபவம்" அவரது வாழ்வு, நற்செய்திப்பணி, உறவுகள் அனைத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது அறிவுரைகள் குறிப்பாக அறநெறி அறிவுரைகள் கிறிஸ்துவில் வேரூன்றி கிறிஸ்தவ வாழ்வை அமைவாக வாழ்வதற்கு தூண்டுதலளிப்பவையாகவும், வரம்பிடுபவையாகவும் அமைந்தன. இங்கு அவரது கிறிஸ்தவ அறநெறி வாழ்வுக்கான அறிவுரைகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### இறையருளே அடிப்படை

கிறிஸ்தவ சபைகளுக்குப் பவுல் அளித்த அறநெறி அறிவுரைகளின் அடிப்படை இறை அருளாகும். மனிதரிடம் எந்தத் தகுதியும் இல்லாமல் இறைவன் தம்மையே மனிதருக்கு நற்கொடையாக அளிக்கிறார். இறைவனின் இச்சுய அளிப்பே அருளாகும். இச்சுய அளித்தலில் இறைவன் மனிதருக்குரிய வரங்கள், நலன்கள், யாவையும் அடங்கும் (உரோ.8:32). அருள் இறைவனின் கொடை மட்டுமல்ல, அஃது அவரது வள்ளன்மையுமாகும். இறையருளான இறைவனின் சுய அளித்தல் மனிதரைப் பாதிக்கின்றது. மனிதரையும் வள்ளன்மையுடையவராக்குகிறது, அருளுடையவராக்கிறது. இறைவனோடும் மனிதர் - மனிதரோடும், சுற்றுச் சூழலோடும் நெருங்கிய உறவை வளர்க்க இறையருள் வழியாகின்றது (உரோ.6:-11). இதனால் இறையருள் வாழ்வு, அறநெறி வாழ்வு என்பதை ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக புனித பவுல் கணிக்கின்றார். (1கொரி. 7-11, உரோ.12, 2 தெச.3).

சுருக்கமாக, இயேசுக் கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பில் வெளிப்பட்ட இறைவனின் மீட்பளிக்கும் அருளே புனித பவுலின் அறநெறி அறிவுரைகளுக்கு அடிப்படையாகும் (1 கொரி. 5:7-8). கிறிஸ்துவின் தியாகப்பலியில் மலர்ந்த புதிய வாழ்வை, புதிய புளிப்பு மாவை ஏற்பதுபோல ஏற்று, தன்மயமாக்கி வாழ்வது கிறிஸ்தவ அறநெறிக்கு அவசியமாகும் என புனித பவுல் வலியுறுத்துகிறார். மேலும் கிறிஸ்தவ அறநெறிக்கு எதிர்பார்ப்பாய் அமைந்துள்ளவை நற்பண்புகளாகும். "ஆண்டவரின் நாளுக்காகக் கிறிஸ்தவர்கள் மாசற்றவர்களாய், தூய உள்ளத்தினராய் இருத்தல் வேண்டும்" (1தெச. 5:23, உரோ.6:2-23) எனப் பணிக்கும் பவுல் கிறிஸ்துவின் தாழ்ச்சியை (பிலி.2:6-11) கிறிஸ்தவ வாழ்வுக்கு ஓர் உயர்ந்த பண்பாகக் காண்கிறார்.

### தூய ஆவியில் அறநெறி

கிறிஸ்தவர்கள் இறைவனின் தூய ஆவிக்குப் பணிந்து வாழ்வதால் சரியானது எது? தவறானது எது? என்பதை உணர்ந்து அதன்படி வாழ்வார்கள் என்பது புனித பவுலின் படிப்பினையாகும். இறைவனின் ஆவியார் கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் கோவில்கொண்டிருப்பதால் (1கொரி. 3:16, உரோ. 8:26) தம் மனநிலைகளில் வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்று, தம் நடத்தையில் உயர்ந்திருப்பார்கள் என எதிர்பார்க்கிறார் (உரோ.15:14, கொலோ 3:6). புனித பவுல் தனிநபரின் அறநெறி வாழ்வை அதிகமாக வலியுறுத்தக் காணலாம். ஒவ்வொரு தனிமனிதரும் சகோதரத்துவ, சமத்துவ மனநிலையுடன் ஒருவர் ஒருவரை மதித்து ஏற்று வாழ்வதையே அழுத்திப் பேசுகின்றார்.

### அறநெறியின் சாரம் அன்பு

"நீங்கள் அறிவிலும், அனைத்தையும் உயர்த்தும் பண்பிலும், மென்மேலும் வளர்ந்து, அன்பால் நிறைந்து, சிறந்தவற்றையே ஏற்றுச் செயல்படுமாறு இறைவனை வேண்டுகின்றேன்" (பிலி. 1:9) எனும் பவுலின் மனநிலையில் அன்பு பளிச்சிடக் காணலாம். "அன்பால் நிறைந்து" என்ற பண்பை வலியுறுத்த அன்புக்கு ஓர் அதிகாரம் வைத்துள்ளார் (1கொரி 13). அன்புதான் இறைவனின் திருச்சட்டத்தின் சுருக்கம் என்றார் (கலா 5:13-14). அன்புதான் அனைத்தையும் ஒருங்கிணைத்து நிறைவு செய்கிறது (கொலோ 3:14). அடுத்தவரிடம் அன்பு கொள்பவரே திருச்சட்டத்தையே நிறைவேற்றுபவராவார் என்றார் (உரோ 13:8-10). கடவுளின் அன்பு சகோதர அன்புக்கு மூலமாய்ச் செயற்படுகிறது என விளக்குகின்றார் (1கொரி 8:3, 9-12).

தீய ஒழுக்கமற்ற வாழ்வுக்கு இறையன்பு இதயத்தில் இல்லாமையும் பிறரன்பு வாழ்வில் இல்லாமையுமே காரணம் எனக் கோடிட்டுக் காட்டுகிறார் (கலாத் 5:14). மேலும் "நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப் - படுவீர்கள் எச்சரிக்கை" (கலா 5:15) என்கிறார்.

எனவே கிறிஸ்துவின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட கிறிஸ்தவர்கள்,

**மனத்தாழ்ச்சி** (பிலி. 2:3; எபே. 4:2; கொலோ. 312; 1 கொரி. 13:14).
**அமைதி** (கலா. 5:22; 6:1; 2 கொரி 10:1 எபே 4:2; கொலோ. 3:12).
**பொறுமை** (கொலோ. 1:11; 3:12; 1தெசலோ 1:3; 2தெச 1:4; 2 கொரி. 6:4)
**நற்குணம்** (உரோ. 15:14; எபே 4:3; 5:9; 2தெச 1:12; கொலோ. 3:12)
**மகிழ்ச்சி** (உரோ. 14:17; 15:13)
**தூய்மை** (1கொரி 5:9; 2கொரி 1:13
**தன்னடக்கம்** (1கொரி 9:25)
**உண்மை** (1கொரி. 5:8 எபே 4:25; 5:29)
**நீதி** (எபே. 4:24; 5:9; கொலோ. 3:9) ஆகிய பண்புகளை வாழவேண்டும் என அறிவுறுத்துகிறார்.

### உலகப் போக்கைத் தவிர்த்தல்

கிறிஸ்தவ அறநெறி வாழ்வில், "இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக" என வேண்டுகிறார் பவுல். உள்ளதே போதும் என்ற மனப்பான்மை மிகத் தேவையான ஒன்றாகும். இதனை வலியுறுத்துவதற்கு உலகப் போக்கிலொன்றான பொருளாசையால் விளையும் தீமையைச் சுட்டிக் காட்டுகிறார். பொருள் ஆசையே எல்லாத் தீமைக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்த திரிந்து பல வேதனைகளைத் தாங்களே தங்கள்மேல் வருவித்துக் கொள்கிறார்கள் எனச் சுட்டிக் காட்டுகிறார் (1திமோ 6:10).

உலகப் போக்கில் வீண் பேச்சும் ஒன்று என்றார் பவுல். "எனவே உலகப் போக்கிலான வீண் பேச்சுக்களை விலக்கு, ஏனெனில் அதனால் அவர்கள் மென்மேலும் இறைபற்று அற்ற - வர்களாவார்கள். அவர்களது போதனை சதையழுகல் நோய் போன்று அரித்துத் தின்றுவிடும்" (2 தீமோ. 2:16-17 என்கிறார். மேலும் வெறும் சொற்களைப்பற்றிச் சண்டையிடுவது பயனற்றது. அது கேட்போரின் அழிவுக்கு ஏதுவாகும் என்பதால் கடவுள்முன் சான்றுபகிர்ந்து ஏற்புடையவராக நிற்க முழு முயற்சி செய்யத் தூண்டலளிக்கிறார் புனித பவுல். உண்மையின் வார்த்தையை நேர்மையாய்ப் பகுத்துக் கூறும் பணியாளனாகிய நீ வெட்கமுற வேண்டிய - தில்லை (2திமொ2:14-15) என்பது பவுலின் தெளிவாகும். ஒரு பெரிய வீட்டில் பொன், வெள்ளிக் கலன்கள் மட்டுமல்ல மண் மற்றும் மரத்தாலான கலன்களும் உள்ளன. அவற்றுள் சில மதிப்புடையவை; சில மதிப்பற்றவை. ஒருவர் மதிப்பற்றவற்றிலிருந்து தம்மைத் தூய்மையாக வைத்துக்கொண்டால் அவர் மதிப்புக்குரிய தூய கலனாகக் கருதப்படுவார். அவர் எந்த நற்செயலையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்; தம் தலைவருக்கும் பயனுள்ளவராயிருப்பார். (2 திமொ. 2:20-21). புனித பவுல் இவ்வுருவகம் வழியாகத் தம் அறநெறிச் சிந்தனையைப் புரிந்துகொள்வதற்குத் தூண்டுதலளிக்கிறார்.

### படைக்கலன்களை அணிதல்

கிறிஸ்தவ அறநெறி வாழ்க்கைப் போராட்டம் மிக்கதாகும். அதனால் அனைத்தின்மீதும் வெற்றி பெற்று நிலைநிற்க வல்லமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக் - கலன்களையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபே. 6:13) என அறிவுறுத்துகிறார். உண்மை என்ற இடைக்கச்சை, நீதி எனும் மார்புக் கவசம், நம்பிக்கை எனும் கேடயம், மீட்பு எனும் தலைச் சீர், இறைவார்த்தை எனும் போர்வாள் நற்செய்தி அறிவிக்கும் ஆர்வம் எனும் மிதியடி இவையே கிறிஸ்தவர்கள் அணிய வேண்டிய கடவுள் அருளும் படைக்கலன்களாகும் (எபே 6:14-17).

இன்னும், பகலைச் சார்ந்த நாம் அறிவுத் தெளிவோடு இருப்போம். நம்பிக்கையையும், அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புப் பெறுவோம் என்னும் எதிர்நோக்கைத் தலைச் சீராவாகவும் அணிந்துகொள்வோம்" என்கிறார். இன்னும் பகலைச் சார்ந்த நாம் அறிவுத் - தெளிவோடு இருப்போம். நம்பிக்கையையும், அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புப் பெறுவோம் என்றும் எதிர்நோக்கைத் தலைச் சீராகவும் அணிந்துகொள்வோம் என்கிறார். (1 தெச.5.8) நாம் இருந்தாலும் இறந்தாலும் இயேசுக் கிறிஸ்துவோடு இணைந்து வாழ்ந்து, அவரின் நல்லதொரு படைவீரனைப்போல விதிமுறைகளுக்கு உட்பட்டு விளையாடும் விளையாட்டு வீரனைப்போல நிலத்தில் பாடுபட்டுழைத்து, விளைச்சலில் முதல் பங்குபெறும் தொழிலாளர்போல (2திமொ. 2:3-6) கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் என இவ்வுருவகங்களை முன்வைக்கிறார். கிறிஸ்தவர்கள், தெளிவான நோக்கம், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற மனத்திடன் இவற்றைக் கிறிஸ்து இயேசுவில் கொண்ட நம்பிக்கையால் பெறுகிறார்கள் என்பது புனித பவுலின் நம்பிக்கைக் கண்ணோட்டமாகும்.

### முடிவு


புனித பவுலின் அறநெறி அறிவுரைகளுக்கு அடிப்படை இறையருளாகும். தூய ஆவிக்கு திறந்த மனத்துடன் வாழ்வதும், "அன்பால் நிறைந்த" மனநிலையுடன் வாழ்வதும் அறநெறி வாழ்வுக்கு மெருகூட்டும் இயல்பு வழிகளாகும். இறைவனளிக்கும் படைக்கலன்களை அணிந்து போர்வீரனைப்போல, விளையாட்டு வீரனைப்போல, தொழிலாளியைப்போல கிறிஸ்தவர்கள் வாழ்வது இலட்சியத்தை, வாழ்வின் நோக்கை அடைவதற்கு முறைகளாகும்.

பவுலின் அறநெறிப் போதனைகளை இன்னும் பல பரிமாணங்களிலும் நோக்கலாம். அறநெறியும் இல்லறமும், அறநெறியும் செல்வமும், அறநெறியும் சமுதாயமும், அறநெறியும் அதிகாரமும் எனக் காணலாம். ஆயினும் கிறிஸ்து அனுபவம் யாவுக்கும் தனிமனித அனுபவமாகக் கைகூடவேண்டும்.

---

# சுதேச குருக்கள் தினம் - 26.06.2009

## "நலிந்தோரை திடப்படுத்த இயேசு ஆண்டவர் உன்னை அழைக்கிறார்"



**அருட்பணி.**
**ரெஜினோட்ல்ட் சபரமாது,**
**தேசிய இயக்குனர்,**
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்

"நானே என் மந்தையை மேய்த்து இளைப்பாறச் செய்வேன்" என்கிறார் தலைவராகிய ஆண்டவர். "காணாமல் போனதைத் தேடுவேன், அலைந்து திரிவதை திரும்பக் கொண்டுவருவேன், காயப்பட்டதற்குக் கட்டுப் போடுவேன், நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன், வலிமையுள்ளதை பாதுகாத்துக்கொள்வேன். இவ்வாறு நீதியுடன் அவற்றை மேய்ப்பேன்" (எசேக்கி. 34:15-16).

"எல்லாம் வல்ல இறைவன் தம் மக்கள்மீது கொண்டுள்ள அன்பு எல்லையற்றது" என பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்தில் காணப்படும் 'இஸ்ரயேலின் ஆயர்கள்', மற்றும் 'நல்ல ஆயன்' என்ற பகுதியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வீழ்ந்த, காணாமற்போன தம் மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பை தனது ஒரே மகனான இயேசுக் கிறிஸ்துவிடம் ஒப்படைத்ததன் மூலமாக தனது அன்பை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆண்டவர் இயேசுவின் திருவசனங்களான: "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கே வந்தார்..." (மத். 20:25) "நோயற்றவருக்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்" (லூக். 5:35) "நல்ல ஆயன் நானே, நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்... அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்..." (யோவான் 10:14-15). மற்றும் காணமல்போன ஆடுகளின் உவமை (லூக் 15:3-7) என்பவற்றின் ஊடாக இவ்வுண்மை தெளிவாகிறது. இவ்வாறு பார்க்கும்பொழுது நலிந்தோரைத் திடப்படுத்த இறைவனாகிய தந்தையும் இறைமகனாகிய இயேசுவும் எவ்வாறு செயல்பட்டார்கள், செயல்படுகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

இன்றைய நவீன உலகில், உலகம், சரீரம், பசாசு என்பவைகளின் சோதனைகளினால் பாவத்தில் விழும் மக்கள் அநேகர். நாளுக்கு நாள் மனிதரிடம் காணப்படும் ஆணவம், சுயநலம், நான் மட்டுமே என்ற எண்ணம் அதிகரிக்கின்றனவே தவிர குறைவதில்லை. பல புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும், தொழில் நுட்ப முன்னேற்றமும் மனிதனை மென்மேலும் தன்னைப்பற்றியே நினைத்தவனாக சுயநலவாதியாக்குகின்றன. சகோதர அன்பு, அயலானில் அக்கறை, உதவி தேவைப் பட்டோருக்கு உதவுதல் போன்ற நற்கிரிகைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து தன்னைப்பற்றியே சிந்தித்து அவனுக்காக மட்டுமே வாழுகிறான். சட்ட ஒழுங்கற்ற நிலை, அநீதி, செல்வத்திற்கும், ஆட்சிக்கும் பேராசை, இலஞ்சம், ஊழல் ஆகியன தினமும் எம் செவியில் கேட்கும் அன்றாட செயல்களாக மாறிவிட்டன.

இவ்வாறு இன்றைய மனிதன் இறைவனைத் தேடிச் செல்வதைத் தவிர்த்து, இறைவன் இல்லாத உலகொன்றைக் கட்டியெழுப்ப முற்படுகின்றான்.

அதேவேளை அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகளும் மக்களின் விசுவாசத்துக்குப் பாதகமாக அமைகின்றன. மக்கள் மேலும் நலிந்தவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களது சிறிய விசுவாசத்தையும் இழக்கும் நிலை ஏற்படுகின்றது. இப்படியாக இன்றைய நவீன உலகைப் பாவம் ஆட்சிசெய்கின்றது. இவை அனைத்திலும் இறைவன் மனிதனின் அழிவை அல்ல, மாறாக மீட்பையே விரும்புகின்றார். "தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

இன்று சுதேச குருக்கள் தினம். இயேசு, "என் பின்னே வாருங்கள், மனிதர்களைப் பிடிப்பவர்களாக்குவேன்" என்று தன் சீடர்களுக்கு விடுத்த அழைப்பு அன்றுபோல் இன்றும் பொருத்தமாகும். ஆண்டவரின் அழைப்பை ஏற்று, அவரைப் பின்பற்றி, அவருக்குச் சேவை செய்யக் கடந்த காலங்களைவிட இன்றே சீடர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள்.

விழுந்தோரை எழுப்பிவிட, நலிந்தோரைத் திடப்படுத்த, காயப்பட்டோரைக் குணப்படுத்த, அநாதைகளுக்கு ஆதரவளிக்க, வழிதவறிச் செல்வோரை நல்வழிக்குக் கொண்டுவர, சேவை மனப்பான்மையுடன் தங்களையே அர்ப் -பணிக்கக்கூடியவர்களும், விரும்புபவர்களும் இன்றைய சமுதாயத்தின் தேவையாக இருக்கிறது. ஆகவே எப்பொழுதும் தம் மக்களின் நலன் கருதும் ஆண்டவரிடம் இன்று விசேடமாக மன்றாடுவோம்.

நலிந்தோரைத் திடப்படுத்தி, இயேசு காட்டிய வழியில் செல்ல மேலும் அநேக குருக்களையும், துறவிகளையும் அழைக்குமாறு அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடுவோம். இறைவனின் அழைப்பை ஏற்றுத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க பயிற்சி பெறுவோர்க்கு எம்மாலியன்ற உதவிகளைச் செய்வோம். அவ்வாறே இயேசுவின் இதயத்தை ஒத்த நல்ல மேய்ப்பர்களுக்கு ஆண்டவரின் மந்தையை ஒப்படைப்பதற்கு முழுமூச்சுடன் செயல்படுவோமாக.



# மாணவர் பகுதி

மாணவ மணிகளே! இது உங்களுக்கான பகுதி. இதில் உங்களுக்குப் பயனுள்ள சிறிய கட்டுரைகள் இன்னும் பொது அறிவோடு தொடர்பான விடயங்கள் பலவும் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். - பதிப்பாசிரியர்

## வருடங்களின் நிறைவு விழாக்கள்

முதல் வருட நிறைவு - காகித விழா
இரண்டு வருட நிறைவு - பருத்தி விழா
மூன்று வருட நிறைவு - தோல் விழா
நான்கு வருட நிறைவு - மலர் விழா
ஐந்து வருட நிறைவு - மரவிழா
ஆறு வருட நிறைவு - சர்க்கரை, இரும்பு விழா
ஏழு வருட நிறைவு - கம்பளி, செம்பு விழா
எட்டு வருட நிறைவு - வெண்கல விழா
ஒன்பது வருட நிறைவு - மண்கலக விழா
பத்து வருடம் - தகரம், அலுமினிய விழா
பதினொரு வருட நிறைவு - உருக்கு விழா
பன்னிரெண்டு வருடம் - லினன் விழா
பதின்மூன்று வருட நிறைவு - பின்னல் விழா
பதினான்கு வருட நிறைவு - தந்த விழா
பதினைந்து வருட நிறைவு - பளிங்கு விழா
இருபது வருட நிறைவு - பீங்கான் விழா
இருபத்தைந்து வருடம் - வெள்ளி விழா
முப்பது வருட நிறைவு - முத்துவிழா
நாற்பது வருட நிறைவு - மாணிக்க விழா
ஐம்பது வருட நிறைவு - பொன் விழா
அறுபது வருட நிறைவு - வைர விழா
எழுபத்தைந்து வருட - பவள விழா
நூறு வருட நிறைவு - நூற்றாண்டு விழா

*- அ. ஜென்சி*

## புனை பெயர்கள்

உலகின் சர்க்கரைக் கிண்ணம் - கியூபா
இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
முடிவில்லா நகரம் - உரோமாபுரி
ஐரோப்பாவின் போர்க்களம் - பெல்ஜியம்
வெள்ளை யானை நாடு - தாய்லாந்து
புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ
ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
மரகதத்தீவு - அயர்லாந்து
இங்கிலாந்தின் தோட்டம் - கென்ட்
தங்கக் கம்பளி பூமி - ஆஸ்திரேலியா
பொன் வாயில் நகரம் - சென் பிரான்சிஸ்கோ
கனவு கோபுரங்களின் நகரம்- ஒக்ஸ்போர்ட்
ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் - ஹங்கேரி
உலகின் கூரை- பாமீர் பீடபூமி (மத்திய ஆசியா)
அதிகாலையில் அமைதியாக இருக்கும் நாடு - கொரியா
மத்திய தரைக் கடலின் திறவுகோல் - ஜிப்ரால்டர் ஜலசந்தி

*- எல். ஏ. செறின்*

## ஞாபகமும் மறதியும்

"தலை குனிந்து படித்தால் தலை நிமிர்ந்து வாழலாம்" என்ற பழமொழிக்கேற்ப மாணவப் பருவத்திலே நாம் கற்கும் கல்வி, பின்னர் நாம் சமூகத்தில் சிறந்த அந்தஸ்தில் இருக்க உதவுகின்றது. எனினும் இம்மாணவப் பருவத்தில் பாடக் குறிப்புக்கள் தொடக்கம் சகல விடயங்களையும் ஞாபகத்தில் வைத்திருப்பது இன்று பல மாணவர்களுக்கு சிரமமாகவே உள்ளது. இதன் காரணமாக பல மாணவர்கள் திறமை குன்றிய மாணவர்களாக உள்ளனர்.

ஞாபகமும், மறதியும் அனைவருக்குமுரிய பொதுவான விடயம் எனினும் மாணவர்கள் இதனால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஒரே ஆசிரியர், ஒரே பாடத்தை கற்பித்தபோதும் எல்லோராலும் ஒரே புள்ளிகளைப் பெறமுடியாமல் போவதற்கு இந்த ஞாபக மறதியும் ஓர் காரணமாகின்றது. அத்துடன் சில காலம் சென்ற பின்னர் கற்ற பாடங்களை மறந்து விடுதலும் பரீட்சை மண்டபத்தில் படித்த பாடங்களை மீட்க முடியாமல் போதலும் இதனுள் அடங்கும். எனவே மாணவர்கள் தமது ஞாபக சக்தியை அதிகரித்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவது பற்றி சற்று ஆராய்வோம்.

### ஞாபகம் என்றால் என்ன?

புலன் தரவுகளால் பெறப்பட்ட கடந்தகால விடயங்களை களஞ்சியப்படுத்தி தேவைக்கேற்ப மீட்டுக்கொள்ளும் செயற்பாடு ஞாபகம் எனப்படும். எமது சிந்தையின் தொழிற்பாட்டிற்கு மனனஞ்செய்யும் ஆற்றல் அவசியமாகும். ஒருவர் மனனஞ் செய்தலை ஊக்குவிக்கும் பொதுவான காரணிகளான:-

1. மனனஞ் செய்பவரின் நுண்மதி அளவு
2. நோக்கம் / குறிக்கோள்
3. விடயம் தொடர்பான விளக்கம்
4. கற்போனின் வயது, மனவுறுதி, மனவிருப்பம், மனவெழுச்சி.

அதாவது நாம் மனனஞ் செய்யும் திறன் எமது நுண்மதியில் பெருமளவு தங்கியுள்ளது. நுண்மதியின் மூலம் விடயத்திலுள்ள தொடர்புகளை அறிவோமாயின் மனனஞ் செய்வது சுலபமாகிவிடும்.

ஒரு விடயத்தை மனனஞ் செய்வதன் நோக்கம் தெளிவாகத் தெரியவேண்டும். சில வேளைகளில் ஏதேனும் ஓர் ஒழுங்கில் வசனங்களைக் கூறும்படி எதிர்பார்க்கப்படலாம். அல்லது வேறு சில வேளைகளில் சொற்களின் பொருளை அறியும்படி எதிர்பார்க்கப்படலாம். எனவே என்ன குறிக்கோள் என்று தெரியாத ஒரு விடயத்தை மனனஞ் செய்வது கடினமான ஓர் செயலாகும்.

### மறதி என்பது யாது?

புலன்கள் தகவல்களைக் களஞ்சியப்படுத்த முடியாமை அல்லது நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் மறத்தல் மறதி எனப்படும். அதாவது நினைவுச்சுவடு மங்கிப் போதல் மறதி எனப்படும்.

1. அச்சம், சினம், வெறுப்பு போன்ற மனவெழுச்சிகளுடன் கற்பவை.
2. மாறுபட்ட நிலமைகளில் கற்பவை.
3. மூளையில் ஏற்படும் திடீர் அதிர்ச்சி.
4. கற்கும்போது ஏற்படும் ஞாபகத்தடைகள் போன்றவை மறதிக்குப் பிரதான காரணங்களாக அமைகின்றன.

அதாவது கற்கும் இரு விடயங்கள் மிக வேறுபட்டிருந்தால் தடைகள் குறைவாக இருக்கும் உதாரணமாக, ஓர் மொழிப்பாடம் கற்றபின் வேறொரு மொழிப்பாடம் கற்காது கணிதப் பாடம் கற்றால் மொழிப்பாடம் கற்பதில் தடைகள் குறைவாகவே காணப்படும். அதேவேளை இரண்டும் ஒரே வகையாக இருக்குமாயின் சில வேளைகளில் தடைகள் குறைந்து ஒன்றையொன்று மீட்டறிய மற்றயது உதவியாக அமையும். இன்னும் கற்றலுக்கும் மீட்டறிவதற்கும் இடையில் உள்ள இடைவேளையின்போது சிறிது ஓய்வு எடுத்தல் தடைகள் குறைய ஏதுவாக இருக்கும்.

பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவோர் படித்தபிறகு வேறு விடயம் கற்காது நித்திரைக்குப் போவது வீதத்தை அதிகரிக்கவும் செய்கிறது என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொருவரும் தமது ஞாபகத்திறனை வளர்க்க வேண்டுமெனில் தேவையான விடயங்களை மிகச்சிறப்பாக மனனஞ்செய்ய வேண்டும். அவ்வாறாயின் பொருத்தமான வழிகளைக் கையாளலாம்.

விளக்கமில்லாத விடயங்கள், தொடர்புபடுத்தமுடியாத விடயங்கள் என்பன விரைவில் மறந்து விடப்படுகின்றன. எனவே மனனஞ் செய்பவர் குறிப்பிட்ட விடயத்தின் பொருள் உணர்ந்து கற்க வேண்டும். அத்துடன் தாம் முன்பு பெற்ற அறிவுடன் தொடர்புபடுத்திக் கற்கும்போது நினைவுப்படுத்தி வைத்திருத்தல் சுலபமாகிறது.

கற்கும் எந்தவொரு விடயத்திலும் முதலில் ஒரு நோக்கம் வேண்டும் அவ்வாறு நோக்கம் அறியப்பட்டால் விடயங்களை மனனஞ் செய்வதை விடுத்து கால இடைவெளிகள் கொடுத்து மனனஞ் செய்யும்போது அவை நீண்டகாலம் ஞாபகத்தில் இருக்கும். பரீட்சைக்கு சில நாட்களின்முன் ஓய்வின்றி கற்பவை பரீட்சைக்கு மாத்திரமே உதவும். அதன்பின் மறந்துவிடும். நீண்ட காலத்திற்கு நினைவு வைத்திருப்பதற்கு இடைவெளிவிட்டு கற்பது மிக நன்று.

கற்றவற்றைத் தானே ஓர் முறையாவது உரத்து மீட்டுக் கூறுதல் மௌனமாகப் பல முறை வாசிப்பதைவிட சிறந்தது. இன்னும் இன்னொருவருக்கு அதைக் கூறுதல் அல்லது அதைப் பார்த்து எழுதுதல் என்பன மனனம் செய்ய அதிக உதவி அளிக்கும். அதேவேளை தவறுகளை அறிந்து திருத்திக்கொள்ளவும் இம்முறைகள் பயனுடையதாக அமைகின்றது.

சிறுவயதில் நாம் கற்றவை இன்னும் ஞாபகத்தில் இருக்கக் காரணம் மீண்டும் மீண்டும் கற்றதேயாகும். எனவே ஒரு மாணவன் கூடிய நுண்மதி கொண்டிருந்தால் மட்டும் போதாது, அதனை விருத்தி செய்ய அவனுக்கு ஒரு நல்ல குடும்ப சூழலும் பாடசாலை சமூக சூழலும் வேண்டும்.

எனவே எனது பெற்றோர் படித்தவர்கள் கெட்டிகாரர்கள் ஆகவே நானும் அவ்வாறே இருப்பேன் என்று நினைக்காது அவர்களைப் போல நானும் வருவேன் என்ற எண்ணத்தை மனதில் வளர்த்து அதற்கான முழு முயற்சியிலும் ஈடுபட்டு எம்மை நாமே திறமைசாலிகளாக மாற்ற வேண்டும். அதுவே உண்மையானதும் நிரந்தரமானதுமான திறமையும் பெருமையுமாகும்.

## சர்வதேச நிறுவனங்கள்

❖ **உணவு விவசாய நிறுவனம் - FA O**
தோற்றம்- 1945, தலைமையகம் - உரோம்
நோக்கம் - உலகளாவிய ரீதியில் உணவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்.

❖ **உலக வானிலை அமைப்பு - WMO**
தோற்றம்- 1950, தலைமையகம் - சுவிஸ்
நோக்கம் - சர்வதேச ரீதியில் காலநிலை, பருவகால அவதானிப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

❖ **அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் - UNHCR**
தோற்றம்- 1959, தலைமையகம் - ஜெனிவா
நோக்கம- உலகளாவிய ரீதியில் ஏற்படும் இயற்கை, செயற்கை அனர்த்தங்களால், உள்நாட்டுப் போர் ஆகியவற்றால் ஏற்படும் இடர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குதல்.

❖ **சர்வதேச தொழிலாளர் நிறுவனம் - ILO**
தோற்றம - 1919, நோக்கம் - உலக தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

❖ **சர்வதேச அணுசக்தி முகவரகம்- IAEA**
தோற்றம்- 1957, தலைமையகம் - வியன்னா
நோக்கம்- அமைதிப் பணிக்கு அணுச்சக்தி பயன்படுத்துவதை ஊக்குவித்தல்

*- சிறானி பர்னபாஸ்*

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

*அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.*

**தொடர் - 23**

தருவது தஞ்சை டோமி



**கேள்வி:** *இயேசு முழுக்கு ஞானஸ்நானம்தானே பெற்றார். ஆதித் திருச்சபையில் முழுக்கு ஞானஸ்நானம்தான் நடைமுறையில் இருந்தது. அப்படியானால் அதுதானே முறையான ஞானஸ்நானம்?*

**பதில்:** இயேசு ஆண்டவரின் அன்பும் கட்டாயமும் கலந்த கட்டளையாகிய "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" என்ற கட்டளையையே கத்தோலிக்கத் திருச்சபை கடைப்பிடித்து வருகிறது. இயேசு பெற்ற ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானத்திற்கும், இயேசு ஏற்படுத்திய ஞானஸ்நானத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானம், "மனம் மாறுங்கள். ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத் 3:1-2) என்று மனம்மாறவும், இயேசுவில் விசுவாசம் கொள்ளவும் அழைக்கும் ஞானஸ்நானமே. ஆனால் இயேசு ஏற்படுத்திய ஞானஸ்நானம் தமதிரித்துவத்தின் பெயரால் வழங்கப்படும் மீட்பளிக்கும் (தூய ஆவி) ஞானஸ்நானமாகும்.

ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானத்திற்கும் இயேசு நிறுவிய ஞானஸ்நானத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:

1) இயேசு ஏற்படுத்திய ஞானஸ்நானம் பரிசுத்த தமதிரித்துவத்தின் பெயரால் பாவங்களைக் கழுவி மீட்பளிக்கும் அருட்சாதனமாகும். ஆனால் ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானத்தில் பாவமற்ற இயேசு பாவம் கழுவப்படுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை தேவையுமில்லை. (திரிதெந்து சங்கம், ஞானஸ்நானம் எண்.7 பகுதி 1ல் காண்க) ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானம் ஒரு சட்டரீதியான பாவம் கழுவும் சடங்கேயாகும்.
2) ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானம் இயேசுமீது விசுவாசம் கொண்டு பாவங்களுக்கு வருந்தி அருளைப் பெற்ற ஒரு தயாரிப்பேயாகும். ஆனால் இயேசு ஏற்படுத்திய ஞானஸ்நானம் மத் 3:11இல் காண்பதுபோல், "நீங்கள் மனம் மாறுவதற்காக நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப்பின் ஒருவர் வருகிறார்..... அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்" நமக்கு பரிசுத்த ஆவியையும் அருளையும் பெற்றுத்தரும் அருள் அடையாளமாகும்.
3) ஸ்நாபக அருளப்பரின் ஞானஸ்நானத்தில் பங்குபெற்றவர்கள் பரிசுத்த ஆவியையும் அருளையும் பெறும் வண்ணம் மறுபடியும் புனித பவுல் எபேசு நகரில் ஞானஸ்நானம் கொடுப்பதைக் காண்கிறோம்.

இங்கே முழுக்கு ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் இயேசுவின் ஞானஸ்நானத்தில் பங்குபெற்றது அருளையும் ஆவியையும் பெறவேயொழிய வேறு எதற்குமில்லை. புனித தோமஸ் அக்குவினாஸ் கூற்றுப்படி நீரை ஊற்றியும் தெளித்தும் பரிசுத்த தமதிருத்துவத்தின் பெயரால் அளிக்கப்படும் ஞானஸ்நானமும் முறையானதே என்கிறார். பல பிரிந்த சபைகளில் கத்தோலிக்க திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்களை முழுக்கு ஞாஸ்நானம் பெற கட்டாயப்படுத்துவது விவிலியத்திற்கும் இயேசுவின் நோக்கத்திற்கும் முற்றிலும் முரண்பட்டதாகும்.

புனித தெர்தூளியன் எந்தத் தண்ணீரையும் தெளித்துக் கொடுக்கும் ஞானஸ்நானமும் முறையானதே என்கிறார். புனித அகுஸ்தீனார் குழந்தைமீது இலேசாக ஞாஸ்நானத்தில் தெளிக்கப்படும் தண்ணீரும் குழந்தையின் பாவத்தைக் கழுவுவதாகும் என்கிறார். திரிதெந்து சங்கம் தொடக்கத்திலிருந்தே தண்ணீரைத் தெளித்தும் ஊற்றியும் அளிக்கப்பட்ட ஞானஸ்நானங்கள் முறையானதே என்று உறுதி செய்துள்ளது.

முழுக்கு ஞானஸ்நானம்தான் முறையான ஞானஸ்நானம் என்று கூறுபவர்களே, திப 2:14-41இல் பெந்தக்கோஸ்து நாளில் மூவாயிரம் பேர் திருமுழுக்கு பெற்றார்களே, மூவாயிரம் பேரும் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது சாத்தியமா? தண்ணீர் பற்றாக்குறை தலைவிரித்தாடும் எருசலேமில் 3000 பேரும் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது சாத்தியமா?

சிறையிலிருப்பவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது நடைமுறைக்கு ஒத்துவராதே! அவர்கள் ஞானஸ்நானம் பெறாமலே சாக வேண்டியதுதானா? யோவான் 3:5இல் ஒருவன் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று இயேசு உறுதியாகக் கூறியுள்ளதால் முழுக்கு ஞானஸ்நானம்தான் முறையான ஞானஸ்நானம் என்று கூறுவது ஞானஸ்நானத்தைவிட மூழ்கி எழுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கும் முழுமையான பரிசேயத்தனமாகும்.

முழுக்கு ஞானஸ்நானம்தான் முறையான ஞானஸ்நானம் என்று இயேசுவே சொல்லாததை நாம் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? ஞானஸ்நானம்தான் மீட்புபெற முக்கியமே ஒழிய மூழ்கி எழுகின்றோமா, தண்ணீர் ஊற்றியா தண்ணீரைத் தெளித்தா என்பது முக்கியமல்ல.

(கேள்விகள் தொடரும்)

## 150 ஆண்டுகளைக் கண்டு மகிழும்

# திருக்குடும்ப தியானயோக சபையினர்

அருட்சகோ. லோறா, ஜெறல்டீன் தியானயோக தி.கு.சபை, நாகொட.

திருக்குடும்ப தியான யோக சபையின் வாழ்விலே, வரலாற்றிலே பொன்னான புனித நாள் 01.06.2009. திருக்குடும்ப சபைக்கு உயிர்நாடியாக சபையின் ஸ்தாபகர் வண. பீற்றர் பியன்வெனு அடிகளாரால் இத்தியானயோக சபை அமைக்கப்பட்டது. திருக்குடும்ப தியானயோக சபை இன்று 150வது ஆண்டை எட்டியுள்ளது. கடந்துவந்த ஆண்டுகளில் ஆண்டவரின் அருட்செயல்களை நினைத்து, நன்றிப் புகழ்பாடவும், காலத்தின் குறிகளுக்கேற்ப எம்தியான யோகசபையை வளமாக்கி மலர்விக்கவும், அருட்கடலாம் ஆண்டவர் தந்தருளிய நல்லதோர் சந்தர்ப்பம் இது.

தந்தையாம் இறைவன் இறை குடும்பமாகத் தம் மக்களை இணைக்க தம் திருமகன் யேசுவை உலகிற்கு அனுப்பினார். இதுவே பரம தந்தையின் ஆவல்.

19ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாடு பல்வேறு குழப்பங்களுக்கும் மாற்றங்களுக்கும் உட்பட்டிருந்த காலகட்டத்தில் இறைவனின் தனி அழைப்பைப் பெற்ற பியர் பியன்வெனு நோஜ அடிகளார் இறைவனின் திட்டத்தைச் செயற்படுத்தும் ஆவலால் உந்தப்பட்டார். எல்லாச் சூழல்களிலும் விசுவாசத்தைப் பரப்பி, உறுதிப்படுத்துவதையும், ஒரே உள்ளமும் ஒரே ஆன்மாவும் கொண்டு விளங்கிய ஆதிக் - கிறிஸ்தவர்களின் சாட்சியத்தை வாழ்வதையுமே சபையின் நோக்கமாகக் கொண்டார். நசரேத்தில் யேசு மரி சூசை வாழ்ந்த வாழ்வை வாழ்வதே சபைச் சகோதரிகளின் எடுத்துக்காட்டான வாழ்வாகும்.

சபை அங்கத்தினரை உந்தித்தள்ளும் சக்தியாக, ஊற்றாக அமைவது "தேவன் மாத்திரமே" எனும் மனப்போக்காகும். திருக்குடும்ப சபை எல்லா நிலையினரையும் தன்னகத்தே தழுவிய ஒரு பரந்த விருட்சமாக இன்று பணிபுரிகின்றது.

- அப்போஸ்தலிக்க சகோதரிகள்
- தியானயோக சகோதரிகள்
- திருமடச் சார்பற்ற சகோதரிகள்
- பொதுநிலையினர் - இளைஞர், யுவதிகள், பிள்ளைகள் ஆகியோர்
- குருக்களான துணை அங்கத்தினர்

இவர்கள் பிரமாணிக்கமான வாழ்வு வாழ்ந்து திருக்குடும்பத்தின் மனப்பான்மையையும், நோக்கத்தையும், கொண்டு ஒரே அர்ப்பணத்தில் ஐக்கியமாக இறை அரசைப் பரப்புகின்றனர்.

காலங்களினூடாகச் செயற்படும் தந்தையாகிய இறைவன் 19ம் நூற்றாண்டில் கலக்கம் நிறைந்த சூழ்நிலையில் தம் மக்களைத் தேடிவந்தார். பிரான்ஸ் நாடு அரசியல், மதம், பொருளாதாரம் போன்ற பல்வேறு நிலைகளில் குழப்பமடைந்து இருண்ட கட்டங்களினூடாக சென்றுகொண்டிருந்த நிலையில் போர்டோவிலிருந்த குருவானவர் பியர் பியன்வெனு அவர்களின் இதயத்தை இறைவன் தனதாக்கிக்கொண்டார். ஆன்மீக வாஞ்சை நிரம்பிய இவர், அக்காலகட்டத்தில் எல்லா மக்களிடையேயும் நற்செய்தியைப் பரப்பி, விசுவாசத்தை உறுதிப்படுத்தும் பணியைப் புரிவதற்கு ஆறு கிளைகள் கொண்டதான திருக்குடும்ப சபையை நிறுவினார்.

தன் சபையின் உன்னத கட்டமாக செபத்திலும் தியானத்திலும் தம் வாழ்வை அர்ப்பணிக்கும் ஓர் கிளையை நிறுவ ஆசித்தார். இந்த ஆவலின் விளைவுதான் ஆனித் திங்கள் முதலாம் திகதி 1859ல் நிறுவப்பட்ட தியான யோகக் கிளையாகும். இது அவரது மரணத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டது. தியானயோக சபையினர் திருக்குடும்ப சபையின் மறைபொருளாக, அதன் உயிர்நாடியாக இருக்க வேண்டுமென விரும்பினர். 1822ல் அருளப்பட்ட நற்கருணை ஆசீருக்கு இவர்கள் இடையறா நன்றி



செலுத்தும் பணியையும் கொடுத்தார். தந்தையையே நோக்கிய வண்ணமாக இருக்கும்படியான யேசுவின் மனப்போக்கை தியானயோக சபைச் சகோதரிகள் அமைதியிலும் ஏகாந்தத்திலும் நீடிக்கச் செய்கிறார்கள். உலகின் மத்தியில் இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் இவர்கள் எடுத்துகாட்டாக விளங்குகிறார்கள். அப்போஸ்தலிக்க சபைகளில் ஈடுபட்டுள்ள சகோதரிகள்மேலும் தங்களின் செபத்திற்காக ஒப்படைக்கப்பட்ட பணிகள்மேலும் தேவைப்படும் அருளையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொடுக்கிறார்கள்.

அமைதியிலும் ஏகாந்தத்திலும் தேவன் மாத்திரமே என்ற மனப்போக்கில் தொடர்ச்சியான செபம், மகிழ்ச்சியான தபம் எனும் திருச்சபையின் நோக்கைத் தியானயோகச் சகோதரிகள் வாழ்கின்றனர். குழுவாழ்வு தியான சபை - யினருக்கு முதன்மையானது.

எம் குழுக்களில் நாம் வாழ்கின்ற ஐக்கிய வாழ்வு எம்மிடமிருந்து சபைச் சகோதரிகளுக்கும் உலகம் முழுவதற்குமே அலைகளாகப் பரவிச் செல்கின்றது. இன்று உலகில் அன்பற்ற நிலை, பிரிவுகள் மலிந்து காணப்படும் நிலையில் எமது அன்பு வாழ்வு, அன்பான செயல்கள், செபங்கள், ஐக்கிய வாழ்வு ஆகியவை எம் குழுக்களை மட்டுமல்லாது முழு உலகையும் ஊடுருவுமென்றே நம்புகிறோம். எமது மறைந்த நாளாந்த வாழ்வில் இயேசுவோடு ஒன்றித்து நாம் ஒப்புக்கொடுக்கும் ஆராதனை, புகழ்ச்சி, நன்றியும் சகோதரருக்காக நாம் எழுப்பும் வேண்டுதல்களும் யேசுவில் நாம் எல்லோரும் ஓர் குடும்பமாக இருக்க ஆசிக்கும் எம் வாழ்வின் பிரமாணிக்கத்தைத் தூண்டுகின்றது.திருக்குடும்ப சபை ஆரம்பமான காலகட்டத்தில் ஏழ்மை, எதிர்ப்புகள், கேள்விக்குறிகள், ஏளனம் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த இக்கட்டான நிலைகள் மத்தியில் ஓர் அருங்கொடை அருளப்பட்டது. 1822 மாசித் திங்கள் மூன்றாம் நாள் நற்கருணை ஆசிர்வாதத்தின்போது குருவானவர், பீடப்பணியாளர், அருட்சகோதரிகள், பொதுநிலையினர், பிள்ளைகள் கூடியிருக்க நற்கருணைநாதர் எல்லோருக்கும் தம்மைக் காண்பிக்க அருள்கூர்ந்தார்.

அவரது நிரந்தர பிரசன்னத்தை, ஆசீரை நினைவுகூர்ந்து நன்றி செலுத்தும் பணி, தியானயோக சபையினரிடமே ஒப்படைக்கப் பட்டது. இதன் நிமித்தமே எமது குழுக்களில் நற்கருணை ஆராதனை நடைபெறுகின்றது. நற்கருணையே எம்மைத் திருக்குடும்பத்துடன் இணைக்கும் சாதனம்.

ஸ்தாபகர் அளித்த முக்கியமான ஒழுங்கு ஒன்று இந்த வகையில் எம் வாழ்வை வர்ணிக் -கின்றது. யேசு, மரி, சூசை நசரேத்தில் எந்த வகையில் செபத்திலும் தியானத்திலும் தம் வாழ்வைச் செலவழித்து மறைந்த வாழ்வு வாழ்ந்தார்களோ அவர்களைப் பின்பற்றி இவர்களும் அன்பு வாழ்வு, அமைச்சல், சுய மறுப்பு என்னும் புண்ணியங்கள் அமைந்த தியாக வாழ்வு, பிறரின் இரட்சணியத்தில் வாஞ்சைகொண்ட வாழ்வை வாழ்வார்களாக. தியானயோக சபைக் குழுக்களாக, நாம் வசிக்கும் பங்குத்தளத் திருச்சபையின் ஓர் பகுதியாக எம்மை அமைத்துக்கொள்கின்றோம். செபமே எமது பணி. கிறிஸ்துவின் பிதாவை நோக்கிய ஆராதனை, புகழ்ச்சி, நன்றி வேண்டுதல்களைச் செய்கின்ற மனப்போக்கில் எம்மை இணைத்துக்கொள்கின்றோம்.

தியானக் குழுவின் முதற்குழு ஸ்தாபிக்கப் -பட்ட 150ம் வருட நிறைவைக் கொண்டாடும் நாம், பிரான்ஸ், ஸ்பெயின், ஆஜன்ரீனா போன்ற பிரதேசங்களில் வாழும் எம் சக சகோதரிகளு -டன் இலங்கையில் வாழும் நாமும் ஒன்றித்து, நன்றிப்பெருக்கோடு எம் இதயங்களை ஆண்டவர்பால் திருப்புகின்றோம். திருச் - சபையிலும் உலகத்திலும், எமக்கு இந்த அழைத்தலை அருளிய தேவனை ஏற்றிப் போற்றுவோம்.

---

## டிவைன் திருத்தல யாத்திரையின்போது

# குணமடைந்த ஓர் அனுபவப் பகிர்வு

தலைமன்னாரைச் சேர்ந்த எஸ். அல்விறெட் சில்வா ஆகிய நான் அண்மையில் கேரளாவில் அமைந்திருக்கும் டிவைன் இல்ல தியானத்தில் பங்கெடுத்த அனுபவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

காலை 5.00 மணிக்கு எழும்பினால் இரவு 10.00 மணிக்குப் படுக்கப்போகும் வரை தியானங்களும், கலந்துரையாடல்களும் தொடரும். நேரம் போவதே தெரியாது. இங்கு ஒரே நேரத்தில் 7 மொழிகளில் வெவ்வேறு மண்டபங்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தியானங்கள் நடைபெறும்.

பொதுமக்களுக்கான தியானங்கள், உணவுகள் போன்றவற்றை வழங்குபவர்கள் குருக்களோ துறவிகளோ அல்ல. சாதாரண பொதுமக்களே. இவர்களும் எம்மைப்போல தியானங்களில் கலந்துகொண்டு மனம் மாறிய பாவிகள்தான். இவர்கள் தமது அனுபவங்களை சாட்சியங்களாக புட்டுப் புட்டு வைத்து தெளிவு படுத்துகிறார்கள்.

நான் கடந்த 9 வருடங்களாக இரத்த அழுத்தம், சக்கரை, கொழுப்பு போன்ற நெஞ்சழுத்த வியாதிகளால் பீடிக்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் 9 நாட்கள் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் (Intensive Care Unit) இருந்தேன். வழமையாக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள்தான் இங்கு வைத்திருப்பார்கள். அதற்குள் ஒன்று உயிர் பிரிந்துவிடும். அல்லது ஓரளவு தேறிய நிலையில் விடுதிக்கு அனுப்பிவிடுவார்கள்.

எனக்குப்பணி புரிந்த வைத்தியர்கள், தாதியர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். எனது உடல்நிலையைக் கருத்தில்கொண்டு என்னை யாரும் பார்க்கக் கூடாது எனத் தடை விதித்திருந்தனர். குருக்கள் எனக்கு நற்கருணை தந்துகொண்டிருந்தார்கள். ஏனென்றால் எனக்கு மாரடைப்பு (heart strok) வந்தபடியால்தான் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைத்திருந் - தார்கள். 9 நாட்களின்பின் வைத்தியர் என்னை 2வது விடுதிக்கு கொண்டுபோய் மிக அவதானமாகவும் அக்கறையுடனும் கவனித்து ஓரளவு குணமாக்கி வருகை நோயாளியாக (Clinic Patient) ஆக என்னை மாற்றி வீட்டுக்கு அனுப்பினார்.

எனினும் உடல் சோர்வை நான் உணர்ந்தேன். "டிவைன் திருதலத்துக்கு என்னை அழைத்துச்செல்லும் ஆண்டவரே" என



உருக்கமாக வேண்டினேன். இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை என்ற இறைவாக்கு எனக்குப் பலித்தது. டிவைனில் என்னை ஆண்டவரிடம் ஒப்படைத்து உருக்கமாகச் செபித்தேன்.

7ம் நாள் இறுதி மாலை குணமாக்கல் வழிபாடு நடந்துகொண்டிருந்தது. என்ன ஆச்சரியம்! என் உடலில் ஓர் மாற்றத்தை உணர்ந்தேன். ஓர் சுகந்தமான காற்று என்மேல் வீசியதை உணர்ந்தேன். மலையாள அருட்தந்தை வழிபாட்டை நடத்திக்கொண்டிருந்தார். நற்கருணைப் பாத்திரத்தில் கைகளை வைத்தவாறு செபித்தவர் முதன் முதலாக எனது வருத்தங்களைக் குறிப்பிட்டு, "பிறநாட்டிலிருந்து வந்திருக்கும் நபர் பூரண சுகம்பெறுகிறார்" என்று சொல்லி, "எழுந்து நில்லுங்கள்" என்றார். நான் எழுந்து நிற்கக் கொஞ்சம் கூச்சப்பட்டேன்.

கூட்டத்திலிருந்த மக்களில் சிலர் என்னைப் பார்த்து, "உங்களைத்தான் குறிப்பிடுகிறார். உங்கள் குடும்பம் மட்டும்தான் பிறநாட்டிலிருந்து வந்தவர்கள்" என்றார்கள். நான் எழுந்து நின்றேன். என்னை மேடைக்கு அழைத்த அருட்தந்தை, கைகளை உயர்த்தி கால் விரல்களைத் தொடச் சொன்னார். கைகளை உயர்த்த முடியாமலும் குனிய முடியாமலும் இருந்த நான் உடனடியாக கைகளை உயர்த்தி குனிந்தேன். ஆண்டவருக்கே மகிமை! (Praise the Lord!) மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு. 24:115) என்னை அறியாமல் எனக்குள்ளே இந்த வார்த்தைகளைச் சொன்னேன்.

எனது உறவுகள் சிலருடன் மனத்தாங்கலாக இருந்த நான் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு அவர்களுடன் ஒப்புரவாகினேன். இப்போது நான் நல்ல சுகமாக இருக்கின்றேன். எனக்கு சுகம் தந்த இறைவனுக்கே நன்றி.

---

## கருத்துக் களம்

# தமிழர்கள் சிந்திக்கட்டும்! ஒன்றுபடட்டும்!

## தொண்டன் இதழின் ஆசிரியர் றொகான் அடிகளார்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் மாதாந்த கிறிஸ்தவ சஞ்சிகையாகிய தொண்டன் இதழின் ஆசிரியர் அருட்பணியாளர் றொகான் பேனார்ட் அடிகளார் 2009 யூன் மாத இதழின் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களை மன்னாவின் கருத்துக்களம் பகுதியில் தருகின்றோம். "கருத்துக்கு உரியவர்கள் உரைத்தவர்களே!"

"தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் - திட்டத்தை முன்வைக்காவிட்டால் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகுவார்கள்" இது பேராசிரியர் திஸ்ஸவித்தாரண தெரிவித்த கருத்து. ஆகவே ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அடைவதற்கு பிரபாகரன் வழிசமைத்துள்ளார் என்பதை பேராசிரியர் திஸ்ஸவித்தாரண அவர்களின் கூற்று நிரூபித்து நிற்கின்றது.

"இந்த நாட்டில் இனிமேல் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்போர் இல்லை. மாறாக நாட்டை நேசிப்பவர்கள், நேசிக்காதவர்கள் என்போரே உள்ளனர்" இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த இராணுவ வெற்றி முழக்கச் செய்தி. அப்படியானால் நாட்டை நேசிக்காதவர்கள் ஏன் உருவாகின்றார்கள்? எவ்வாறு எதனால் இந்நிலைமை ஏற்படுகின்றது என்பதை ஏன் இவர்களால் சிந்தித்து ஏற்றுக்கொள்ள முடிய வில்லை?

வடக்குக் கிழக்கு இணைந்த அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் எவ்வாறான நிலையை பேராசிரியர் திஸ்ஸவித்தாரண தலைமையிலான அனைத்துக்கட்சி சம்மேளனம் கொண்டிருக் கின்றது? ஜே.எச்.யு, ஜே.வி.பி, என்.எவ்.எவ். இவர்களின் துணைகொண்டுதான் ஜனாதிபதி தமிழ்ப் பிரதேசத்தில் போர் நடத்தி வெற்றியும் பெற்றுள்ளார். எனவே இந்த மதவாத, இனவாதக் கட்சிகளை மீறி தன்னிச்சையாக, தமிழர் நலன் கருதி தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதியால் முன்வைக்க முடியுமா? வெற்றிக்களிப்பில் மிதக்கும் பெரும்பான்மை சிங்கள சமூகம்தான் விட்டுக் கொடுக்குமா? அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஜானாதிபதிதான் தனது வாக்குவங்கியை தாரை வார்ப்பாரா?

தாங்கள் சொல்வதையும் செய்வதையும் நியாயப்படுத்தி சர்வதேச அளவில் (ஐ.நா) வெற்றிகொள்ளும் அரசாங்கத் தரப்பு அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகிறது? இப்போது வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்த களம் இறங்கி இருக்கிறது. அதன் பின்னர் அகதிகளாக்கப்பட்டுள்ள வன்னி மக்களை அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்தாது வேறு வேறு இடங்களில் செவ்வனே திட்டமிட்டு கிராமங்களை அமைத்து, அதைச்சுற்றி இராணுவ முகாம்களால் வேலியிட்டு, நில் என்றால் நிற்கவேண்டிய இரு என்றால் இருக்கவேண்டிய நாதியற்ற மக்களாக நடைபிணங்களாக்குவதேயாகும்.

"புலிகள் மரங்களில் மறைந்து நின்று தாக்குதல் நடத்தினால் ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு இராணுவ வீரரை நிறுத்துவோம்" என்று கங்கணம் கட்டியிருக்கிறார் இளைப்பாற வேண்டிய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா. இதன் அடிப்படையில்தான் 300,000 இராணு - வத்தினர்கள் கொண்ட நாடாக இலங்கையை மாற்ற முற்படுகின்றனர். அப்படியென்றால் இராணுவ ஆட்சி நடைபெறுகின்ற, பெயரளவில் ஜனநாயகத்தைக் கொண்ட நாடு என்று சொல்லலாம் அல்லவா? இத்தகைய நாட்டை நேசிப்பவர்கள் யாராக இருப்பார்கள்? இராணுவ ஆட்சியை விரும்புகிறவர்கள்தானே.

யாரை இராணுவத்தில் இணைக்கப் போகின்றார்கள்? சிங்களவர்களைத்தான். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் பொலிசில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தமிழர்களுக்கு ஆயுதம் கொடுக்கப்படவில்லை என்பதை நாட்டு மக்கள் அறிந்திருக்க வாய்ப்பிருக்கிறதோ என்னவோ? தமிழர்கள் சிந்திக்கட்டும், ஒன்றுபடட்டும்.

**நீங்களும் எழுதலாம்:** கருத்துக்களம் பகுதிக்கு மன்னா உங்கள் கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றது. அரசியல், சமயம் போன்ற எத்துறையைச் சார்ந்த கருத்துக்களாகவும் இருக்கலாம். தரம் கண்டு பிரசுரிப்போம் - பதிப்பாசிரியர்

# திருத்தந்தையின் புனித நாட்டுப் பயணம்

## திருத்தந்தை வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு

கடந்த மே மாதம் 2ம் வாரத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் பரிசுத்த பூமிக்கு (ஜோர்தான், இஸ்ராயேல், பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு) ஒரு திருப்பயணியாகவும் ஆன்மீகத் தலைவராகவும் பயணம் செய்தார். இந்நாடுகளில் உள்ள கத்தோலிக்க மக்களை ஊக்குவிக்கவும், கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஐக்கியத்தை வலுப்படுத்தவும், முஸ்லிம் மற்றும் யூதர்களுடன் உரையாடலை மேற்கொள்ளவும் இன்னும் பலஸ்தீன சமாதான முயற்சிகளுக்கு வலுவூட்டவும் திருத்தந்தை இப்பயணத்தை மேற்கொண்டிருந்தார்.



*திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் ஜோர்தான் நாட்டிற்கான திருப்பயணத்தின்போது அந்நாட்டு அரசர் 2ம் அப்துல்லா மற்றும் அரசி றானியா ஆகியோரினால் வரவேற்று அழைத்துவரப்படுகின்றார்.*

### யோர்தான் நாட்டில்

**மே 8ம் திகதி யோர்தான் நாட்டின் தலைநகர் அம்மானுக்கு வருகை தந்தபோது :**

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் கடந்த மே மாதம் 8ம் திகதி பரிசுத்த பூமியில் தடம்பதித்தார். முதன் முதலாக யோர்தான் நாட்டின் தலைநகரான அம்மானைச் சென்றடைந்த அவரை அந்நாட்டு அரசர் மற்றும் அரசி ஆகியோர் வரவேற்றனர்.

அங்கு உரையாற்றிய திருத்தந்தை கூறியதாவது : வரலாற்றில் அதிகம் வளமான பூமியும் அதிகளவான பழமை வாய்ந்த நாகரீகங்களின் இல்லமும், யூதர், கிறிஸ்தவர், முஸ்லிம் ஆகியோருடன் ஆழமாகப் பின்னிப்பிணைந்ததுமான இந்த மண்ணில், யோர்தான் இராட்சியத்தில் காலடி பதிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். விவிலிய வரலாற்றின் சில முக்கியமான நிகழ்வுகளில் விசேட பங்குவகித்த புனித இடங்களைத் தரிசித்து எனது வணக்கத்தைச் செலுத்துவதற்காகத் திருப்பயணியாக நான் இங்கு வருகை தந்துள்ளேன்.

“எனக்கு முன்னேயுள்ள கணக்கிடமுடியாத திருப்பயணிகளைப் போன்று இயேசு வாழ்ந்ததும் அவரது பிரசன்னத்தால் புனிதமாக்கப்பட்டதுமான இடங்களைத் தொட்டு வணங்கி திருப்தியடைவது இப்பொழுது எனது முறை”

**9ம் திகதி நேபே மலையில் உரையாற்றும்போது**
“தூரத்திலிருந்தே வாக்குத்தத்தப் பூமியைப்பற்றி சிந்தித்த மோசே நின்ற இந்த இடத்திலிருந்து எனது திருப்பயணத்தை ஆரம்பிப்பது பொருத்தமானது. இது யோர்தான் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

இங்குதான் திருமுழுக்கு யோவான் ஆண்டவருக்கான வழியை ஆயத்தம் செய்ய வந்தார். யோர்தான் ஆற்றில்தான் இயேசு திருமுழுக்குப் பெற்றார். யோவானின் கையால் திருமுழுக்குப் பெற்ற பின்னர் தந்தையின் அன்பார்ந்த மகனாக வெளிப்படுத்தப்பட்டார். தூய ஆவியால் திருப்பொழிவு செய்யப்பட்டார். தனது பகிரங்கப் பணியை ஆரம்பித்தார். யோர்தானிலிருந்தே இயேசுவின் நற்செய்தி முதன் முதலில் இயேசுவின் போதனை புதுமைகள் மூலம் முன்கொண்டு செல்லப்பட்டது.” என்றார்.



*திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் இஸ்ரேல் நாட்டிற்கான திருப்பயணத்தின்போது அந்நாட்டு ஜனாதிபதி சைமன் பெரஸ் அவர்களினால் வரவேற்கப்படுகின்றார்.*

### இஸ்ராயேல் நாட்டில்

யூத வாதத்திற்கெதிரான கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதவை எனத்தெரிவித்துள்ள திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் அவை எங்கு காணப்பட்டாலும் எதிர்க்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கிற்கான விஜயத்தின் ஓர் கட்டமாக இஸ்ரேயல் நாட்டிற்குச் சென்ற திருத்தந்தை, முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என அனைவராலும் புனிதமாக மதிக்கப்படும் ஜெருசலேமிலுள்ள டோம் ஒவ் ரொக் என்னும் புனித தலத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட முதலாவது திருத்தந்தை இவரே ஆவார். இதன் பின்னர் மற்றொரு புனிதத்தலமான மேற்குச் சுவருக்கு விஜயம் மேற்கொண்ட திருத்தந்தை அங்கு சிறப்பு ஆராதனைகளிலும் கலந்துகொண்டார்.

முன்னதாக யூதப் படுகொலைகளின் நினைவாலயமாக விளங்கும் யாட் வாஷமுக்கு விஜயம் மேற்கொண்ட திருத்தந்தை நாஜி ஆட்சியாளர்களினால் படுகொலை செய்யப்பட்ட 60 இலட்சம் யூத மக்களை நினைவுகூர்ந்ததுடன் இந்தப் படுகொலைகள் மறுக்கப்படவோ மறைக்கப்படவோ முடியாதவை எனத் தெரிவித்தார்.

டோம் ஒவ் ரொக்கினுள் நுழையும்போது இஸ்லாமியர்களின் பாரம்பரிய வழக்கப்படி திருத்தந்தை பாதணிகளைக் கழற்றிவிட்டு நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திய திருத்தந்தை இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் தத்தமது தாய்நிலத்தில் சமாதானமாக வாழ்வதற்குரிய வழிவகைகள் ஆராயப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.



*மேற்குக்கரைக்கு விஜயம் மேற்கொண்ட பரிசுத்த பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ரை பெத்லகேமில் வரவேற்று அழைத்துச் செல்கிறார் பலஸ்தீன ஜனாதிபதி மஹமூட் அப்பாஸ்.*

### பலஸ்தீன நாட்டில்

இஸ்ரேலுக்கான விஜயத்தின் ஒரு கட்டமாக மேற்குக் கரைக்கு விஜயம் மேற்கொண்ட திருத்தந்தை அங்கு பலஸ்தீன ஜனாதிபதி மகமூட் அப்பாசுடன் பேச்சுக்களை நடத்தினார். இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பிடமாகக் கருதப்படும் பெத்லகேமில் ஆராதனைக் கூட்டமொன்றை நடத்திய திருத்தந்தை பின்னர் கிறிஸ்து பிறந்த தொழுவமெனக் கருதப்படும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தேவாலயத்திற்கும் விஜயம் மேற்கொண்டார்.

பலஸ்தீன மண்ணில் நீடித்த அமைதிக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை பலஸ்தீனர்கள் தனிநாடொன்றை பெறுவதற்கான உரிமைக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இப்பிராந்தியத்திற்கான விஜயத்தின் பிரதான நோக்கம் பலஸ்தீன மண்ணில் குறைவடைந்து வரும் கிறிஸ்தவர்களின் பிரசன்னத்தை மேலும் குறையவிடாமல் பாதுகாப்பதாகும்.

மேற்குக்கரையில் திருத்தந்தையை வரவேற்ற ஜனாதிபதி அப்பாசுடன் பேச்சுக்களை நடத்திய திருத்தந்தை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அமைதியுடனும் பாதுகாப்புடனும் உங்களது மூதாதையர்களது நிலத்தில் வாழ்வதற்காக இறையாண்மையுள்ள பலஸ்தீன தேசமொன்றை உருவாக்குவதற்கான உங்கள் உரிமைக்கு திருச்சபை ஆதரவளிக்குமெனத் தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டிலிருந்து தொடரும் பலஸ்தீன கிளர்ச்சியாலும் அதிகரித்துவரும் இஸ்ரேலின் கடுமையான பாதுகாப்பு நடைமுறைகளாலும் பாதிப்படைந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் பெத்லகேமைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலின் பாதுகாப்பு நடைமுறைகளால் எழும் சிரமங்களை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பலஸ்தீன பிராந்தியத்தில் நடமாட்டத்திற்கான பூரண சுதந்திரம் விரைவில் உருவாகும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்ததுடன் இதற்காக மக்கள் பயங்கரவாதத்தில் தஞ்சமடையக்கூடாதெனவும் வலியுறுத்தியுள்ளார்.

# கத்தோலிக்க திருச்சபைக்கு 5 புதிய புனிதர்கள்

*இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி வத்திக்கான் புனித பேருது சதுக்கத்தில் நடைபெற்ற திருப்பலியின்போது திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் 5 பேரை புனிதர்களாக அறிவித்தார். இவர்களில் வெவ்வேறு துறவறசபைகளை ஸ்தாபித்த 4 இத்தாலிய நாட்டவரும் தேசிய நாயகராக விளங்கிய ஒரு போர்த்துக்கேய நாட்டவரும் அடங்குவர்.*

**“எமது இக்கட்டான வேளைகளில் எமக்கு மாதிரியாக விளங்கும் புனிதர்களை நோக்கிப் பார்ப்போம்”**

**(திருத்தந்தை 16ம் பெனடிக்ற்)**

## இவர்கள்தான் அந்தப் புதிய புனிதர்கள்



**ஆர்க் ஆஞ்சலோ ராடினி**
நசரேத் இல்லத்தின் வேலைசெய்யும் சகோதரிகள் சபையின் ஸ்தாபகர்.



**பேர்னாடோ ரொலமி**
ஒலிவற்றர் பெனடிக்ரர் சபையின் ஸ்தாபகர்



**நுனோ டி சான்ரா மரிய அல்வாரஸ் பெரேரா**
கார்மேல் துறவற சபையைச் சேர்ந்தவர்



**ஜெல்ரூட் கொமன்சோலி**
புனித நற்கருணைச் சகோதரிகள் சபையின் ஸ்தாபகர்



**கத்தரீனா வொல்பிச்சல்லி**
திருஇருதயப் பணியாளர்கள் சபையின் ஸ்தாபகர்

# செய்திகள் கூறும் செய்திகள்!

உலக வலம் உலக வலம் உலக வலம் உலக வலம்

அபூர்வ செய்திகளும் அவை கூறும் அர்த்தங்களும்

## குழந்தைகளாக இருந்தபோது பிரிந்த சகோதரிகள் 64 வருடங்களின் பின் சந்திப்பு



குழந்தைகளாக இருந்தபோது வெவ்வேறு குடும்பங்களால் தத்தெடுக்கப்பட்டு பிரிந்த இரு சகோதரிகள், 64 வருடங்களுக்குப்பின் மீள இணைந்த சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

ஜெனிபர் பெலிங்ஹாம், டியானி ஹக்கர் ஆகிய இரு சகோதரிகளும் முறையே சிசெஸ்டர் மற்றும் பிரைட்டன் நகர்களைச் சேர்ந்த வெவ்வேறு குடும்பத்தினரால் தத்தெடுக்கப்பட்டனர். இந்நிலையில் ஹக்கர், பல வருடங்களுக்கு முன்பு சிசெஸ்டரிலுள்ள பொதுப் பதிவுகள் அலுவலகத்தில் பணியாற்றியபோது தனக்கு ஒரு தங்கை இருப்பதை அறிந்துகொண்டார். ஆனால் பெலிங்ஹாமுக்கு இரு வருடங்களுக்கு முன்பே தனக்கு ஒரு சகோதரி இருக்கும் உண்மை தெரியவந்துள்ளது. இணையத்தளம் மூலம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையையடுத்து இரு சகோதரிகளும் மீள இணைந்துள்ளனர்.

*"பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?" - சினிமா பாடல். உண்மை அன்பு ஒருநாள் நிச்சயம் ஒன்றுசேர்க்கும்!*

## காலால் பரீட்சை எழுதிய மாணவி சாதனை

பத்தாம் வகுப்பு அரசு பொதுப் பரீட்சையில் கால் விரல்களால் எழுதிய மாணவியொருவர் 65.8 சதவீத மதிப்பெண்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தமிழ் நாடு விழுப்புரத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ஒருவரின் மகள் வித்யாஶ்ரீ (வயது 18) என்ற மாணவியே இவ்வாறு சித்தியடைந்துள்ளார்.பிறவியிலே இரு கைகளையும் இழந்த இவர் கல்வியில் தீவிர ஆர்வம் காட்டி வந்தார். இதனால் உளுந்தூர்பேட்டையில் உள்ள தனது பாட்டியுடனிருந்து 8ம் வகுப்புவரை படித்தார். ஏனைய மாணவர்களைப்போல் எழுத முடியவில்லையே என்ற ஆதங்கப்பட்ட வித்யாஶ்ரீ தனது இடது கால் விரலால் எழுதப் பழகினார். இந்நிலையில், கடந்த மார்ச்சில் நடைபெற்ற 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் பங்கேற்ற வித்யாஶ்ரீக்கு ஏனைய மாணவர்களைப் போன்றே பரீட்சை நேரம் ஒதுக்கப்பட்டது. வெளியான பரீட்சை முடிவில் தமிழ் 57, ஆங்கிலம் 77, கணிதம் 66, மதிப்பெண்கள் எனப் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

*"முள்ளில்கூட பூக்கள் உண்டு முடியும் என்ற சொல்லில்தான் வாழ்க்கை உண்டு."* (கவிஞர் மு. மேத்தா) முயன்றால் முடியாதது என்று இந்த உலகில் எதுவுமே இல்லை!

## திண்டுக்கல்லில் தமிழுக்குக் கோயில்

திண்டுக்கல் அருகேயுள்ள சின்னாளப்பட்டியில் தமிழுக்கு கோவில் கட்டப்படுகின்றது. திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப் பட்டி காந்தி கிராம பல்கலைக்கழகம் அருகே, தமிழன்னை திருக்கோவில் அறக்கட்டளை சார்பில், தமிழுக்கு கோவில் கட்டப்பட்டு வருகின்றது.

ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இக்கட்டிடப் பணிகள் தற்போது ஆரம்ப நிலையில் உள்ளன. இங்கு மூலவராக தமிழன்னை சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. முத்தமிழ் அரங்கம், பொது நூலகம், இலவச சித்தமருத்துவ நிலையம், தமிழ் தியாகிகள் நினைவுத் தூண் ஆகியவை அமைக்கப்படுகின்றன.

தமிழன்னைக்கு தினமும் தமிழின் உயிரெழுத்துக்களால் அர்ச்சனையும், பிரசாதமாகத் தேன், தினைமாவு, கனிகள் வழங்கப்படும். மத அடிப்படையில் எந்த வழிபாடும் நடத்தப்படாது. ஆண்டுதோறும் பொங்கல் அன்று செங்கரும்பு பந்தலிட்டு தமிழர் திருநாள் கொண்டாடப்படும். திருவள்ளுவர் தினத்தன்று தமிழுக்கு தொண்டாற்றிய சான்றோர்களுக்கு நினைவுத்தூண் மூலம் போற்றல் நிகழ்ச்சி நடக்கும். புதிய தமிழ் இலக்கிய படைப்புக்கல் அரங்கேற்றப்படும்.

*"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். கோயில் கட்டி தமிழைக் கும்பிடத் - தேவையில்லை. தமிழரின் தலைசிறந்த பண்பாடாகிய திருக்குறள் போன்ற பேரிலக்கியங்கள் காட்டும் வழியில் வீரம், விருந்தோம்பல், உலகளாவிய சகோதரத்துவம் போன்றவற்றை வாழ்வாக்குவதே முக்கியமானது.*

## தந்தை மயங்கி விழுந்த நிலையில் காரைச் செலுத்திய 6 வயது சிறுவன்



காரை ஓட்டிச் சென்ற தனது தந்தை மயக்கமடைந்த நிலையில் 6 வயதுச் சிறுவன் ஒருவன் எதுவித விபத்துக்கும் உள்ளாகாமல் காரை செலுத்திச்சென்ற விசித்திர சம்பவம் அமெரிக்க நெப்ராஸ்கா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினம் டஸ்ரின் மெயின்ஸ் என்ற மேற்படி சிறுவனையும் அவனது 3 வயது சகோதரனையும் அவர்களது தந்தையான பிலிப் பைன்ஸ் உணவகமொன்றுக்கு காரில் அழைத்துச் சென்றார்.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் குருதியில் குளுக்கோஸின் அளவு குறைந்ததால் காரில் மயங்கி விழுந்தார். காரின் பின் ஆசனத்திலிருந்த டஸ்ரின் உடனடியாக முன் ஆசனத்திற்கு தாவிக் குதித்து தந்தையின் மடியில் அமர்ந்தபடி காரைச் செலுத்த ஆரம்பித்துள்ளான். கார் மணிக்கு சுமார் 15 மைல் வேகத்தில் பயணித்துள்ளது. பல்வேறு வளைவுகளிலும் திறமையாக காரை சிறுவன் செலுத்திச் சென்றுள்ளான். சிறுவன் ஒருவன் காரை ஓட்டிச் செல்வதை அவதானித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அந்தக் காரை துரத்திச் சென்று அதன் திறந்த கண்ணாடியூடாக உள்ளே பிரவேசித்து காரை நிறுத்தும்வரை சிறுவனின் பயணம் தொடர்ந்தது.

*"அச்சம் தவிர்" - ஔவையார். ஆபத்து வேளையில் ஆற்றல் எங்கிருந்தோ வந்துவிடும். இன்றைய குழந்தைகள் வித்தியாசமானவர்கள் மட்டுமல்ல விவேகமானவர்களும்கூட.*

# மன்னார் பிரதேச செய்திகள்

## ஏ32 வீதி புனரமைப்பு வேலை ஆரம்பம்

மன்னாரையும் பூநகரியையும் இணைக்கும் ஏ32 சிலாவத்துறையிலிருந்து முருங்கன் வரைக்குமான வீதியை புனரமைக்கும் வேலைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. 15 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியைப் புனரமைப்பதற்கு 48கோடியே 40இலட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கான நிதியை வழங்கவுள்ளது.

முதலில் 6 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப் - படவுள்ளது. சிலாவத்துறையிலிருந்து மன்னார் வரைக்குமான வீதி ஏ32 மன்னார் யாழ். வீதியையும் ஏ14 மதவாச்சி - மன்னார் தலைமன்னார் வீதியையும் இணைக்கிறது. இந்த வீதிகளைப் புனரமைப்பதன் மூலம் வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தெற்கில் விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மன்னார் பிரஜைகள் குழுவின் நிவாரணப் பணிகள்

மன்னார் பிரஜைகள் குழுவினர் அண்மையில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து செட்டிகுளப்பகுதியிலுள்ள நிவாரணக் கிராமங்களில் வாழும் மக்களுக்கு உதவிவருகின்றனர். குறிப்பாக சில நிவாரணக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. மன்னார் ஆஸ்பத்திரியிலுள்ள மக்களுக்கும் தேயிலை, சீனி, சறம் போன்ற பொருட்களும் வழங்கப்பட்டன.

இன்னும் மன்னார் ஆஸ்பத்திரிச் சுற்றாடலை சிரமதானம் மூலம் சுத்தம் செய்யும் பணியையும் மன்னார் பிரஜைகள் குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

பிரஜைகள் குழுவினரால் இலவச சட்ட ஆலோசனை வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மன்னார் மாவட்ட மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்கப்படுகின்றார்கள்.

## மக்கள் நலன்பேணும் சேவைகளில் மன்னார், மாந்தை மேற்கு பிரதேச சபைகள்

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச சபைகள் வினைத்திறனான முறையில் மக்கள் நலன்பேணும் சேவைகளை வழங்கி வருகின்றன என்று மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஏ. ஜெ. துரம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி. இராசநாயகத்திற்கு "உள்ளூராட்சி உதவியாளர்கள் செயலாளர் கடமையாற்றல்" எனும் தலைப்பில் எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த நான்கு ஆண்டு காலமாக திரு. சாம்சன் ஜென்னிங்ஸ் மாந்தை மேற்கு பிரதேச சபையின் பிரதேச செயலாளராக 01.03.2006 முதல் கடமையாற்றி வருகிறார். அதேபோல் சி. எம் ஜேசுநேசன் மன்னார் பிரதேச சபையின் செயலாளராக 26.04.2006 முதல் கடமையாற்றி வருகின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வினைத்திறனாக முன்னெடுக்கும் வகையில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த உள்ளூராட்சி உதவியாளர்கள், செயலாளர்களாக நியமிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் தமது கடமைகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள். குறித்த சபைகள் வினைத்திறனான மக்கள் நலன் பேணும் சேவைகளை வழங்கி வருகின்றன.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி இல.74

கொரிந்து நகரமும் அதன் மக்களும் புனித பவுலுக்கு சவால்கள் நிறைந்த பணித்தளமாக இருந்திருக்கின்றது.

கிறிஸ்து என்ற அத்திவாரத்தைவிட்டு தமக்குப் போதித்த தலைமைத்துவத்தை முன்னுரிமைப்படுத்தி நான் பவுலைச் சார்ந்தவன், அப்பலோவைச் சார்ந்தவன், பேதுருவைச் சார்ந்தவன் எனப் போட்டிகளை வளர்த்துக்கொண்ட மக்கள் , பல்லின மக்களும் பலவித தெய்வ வழிபாடுகளும், ஒழுக்கக் கேட்டைப்பற்றி மரத்துப்போன உணர்வுகள், திருமணம், கன்னிமை, மணமுறிவு, மறுமணம் என்பவற்றில் எப்படியும் வாழலாம் என்ற, சித்தாந்தம் - இவைகளுக்கு மத்தியில் புனித பவுலின் பணி ஆற்றலும் சக்தியும் மிக்கதாக இருந்திருக்க வேண்டும்.

ஆகவே புனித பவுல் இரண்டு திருமுகங்களை எழுதுகின்றார். இவை இரண்டும் மிக நீளமான திருமுகங்களாக அமைந்துள்ளன.

***இனி நமது வினாக்களுக்கு வருவோம்: வினாக்கள் 12ம் அதிகாரம் முதல் 16ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1. யூதரானாலும் கிரேக்கரானாலும் அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் ஒரே உடலாய் நாம் எதனால் ஒன்றாய் இணைக்கப்படுகின்றோம்?
2. நாம் பல்வேறு இன, சாதி, மொழி பேசுபவராயினும் கிறிஸ்துவில் ஒன்றாயிருப்பதை எதற்கு உவமானமாய்க் கூறுகின்றார்?
3. எல்லாக் குணநலன்களிலும், பண்புகளிலும் சிறந்தது எது?
4. பரவசப்பேச்சுப் பேசுவதா, இறைவாக்குரைப்பதா? புனித பவுலின் பார்வையில் எது சிறந்தது.?
5. தூய ஆவியானவர் தரும் கொடைகளை ஆர்வமாய் நாடும் நாம் எக்கொடைகளைத் தேடி அவற்றில் வளர்ச்சியடைய வேண்டும்?
6. புனித பவுலடியார் தான் கற்பித்தது எதுவென கொரிந்தியருக்கு நினைவூட்டுகின்றார்?
7. தான் பறைசாற்றும் நற்செய்தியும் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் எப்போது பொருளற்றதாகிவிடும்?
8. மக்கள் அனைவரும் உயிர்த்தெழுவர் என்பதை உறுதிப்படுத்துவது எது?
9. "அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்த்தெழுகின்றது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்றெழுகின்றது." எனச் சொல்லப்படும் வார்த்தைகள் எவற்றைப்பற்றி கூறுகின்றன?
10. கொரிந்தியருக்கான தனது முதலாவது மடலில் புனித பவுல் கூறும் இறுதி அறிவுரை என்ன?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 72இற்கான கேள்விகளுக்கு 46 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**அ. கில்டா,**
**கட்டையடம்பன், மடுவீதி.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. ச. கிஷோஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
2. கே. டிலைக்சனா, திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான்.
3. ஜெ. ஜெல்சின் சார்ளஸ், சிறிய குருமடம், மன்னார்.
4. கி. அன்றிசானா, இல.2, 50, வீட்டுத்திட்டம், பள்ளிமுனை, மன்னார்.
5. ஆர். அன்ரனிற்றா, திருக்குடும்பக் கன்னியர் மடம், நானாட்டான்.
6. ஆ. லக்ஸனா, தரம் 13, வர்த்தகபிரிவு, மடு.
7. கி. யூடிற் ஷாளினி, திருக்குடும்பக் கன்னியர் மடம், நானாட்டான்.
8. ஜி. லினோஜினி, அன்னை திரேசா வீதி, இறம்பைக்குளம், வவுனியா
9. ஆ. றட்நாதன், தரம் 13 கலை, மன்னார்.
10. ச. டிலக்ஷினி, தரம் 5, 130/44, குட்செட்வீதி, வவுனியா.

# நெற்றிக்கண்

## பார்த்தீனியம் களையை அழிக்க நடவடிக்கை எடுப்பார்களா?

வவுனியாவில் மிக வேகமாக பரவிவரும் களைகளில் ஒன்றாகப் பாத்தீனியம் காணப்படுகிறது. ஆரம்பத்தில் வவுனியா நகரில் மாத்திரம் காணப்பட்ட இக்களையானது தற்போது வவுனியா நகரம், குருமன்காடு, வைரவர் புளியங்குளம், திருநாவட்குளம், தாண்டிக்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும் மிகவேகமாகப் பரவியுள்ளது.

எனினும் அரச வர்த்தமானியின்படி விவசாயத்திணைக்களம், பிரதேச செயலகங்கள், நகரசபை, பிரதேசசபைகள் என்பன பாத்தீனியக்கட்டுப்படுத்தலை மேற்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டது. இதன்பொருட்டு பிரதேச செயலகத்தால் எச்சரிக்கைப் பலகைகள் போடப்பட்டபோதிலும் தற்போது அப்பல கையை மூடும் வகையில் பாத்தீனியம் வளர்ந்து காணப்படுகிறது.

ஆனால், இக்களையைக்கட்டுப்படுத்த மூன்று முறை கிருமிநாசினி தெளித்தாலே போதுமானது. இவ்வாறாக இக்களையின் பரம்பல் தொடருமானால் வவுனியாவில் விவசாயத்திற்குப் பாதிப்பேற்படுவதோடு, சுவாச நோய்களின் அதிகரிப்பிற்கும் வழியேற்படுத்தும்.

ஆகவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இக்களையை விரைவில் அழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

\- க.டிலக்சன்.



இலக்கியத் தடாகம்

# விவிலியமும் தமிழ் இலக்கியமும்



ஒப்பீட்டுத் தொடர் 7.

- அருள் . செல்லத்துரை

| திருவிவிலியம் — கற்பிக்கும் கடவுள் | தமிழ் இலக்கியம் — கற்பிக்கும் கடவுள் |
|---|---|
| 1. உங்களுக்குப் போதகர் ஒருவரே. கிறிஸ்து ஒருவரே. உங்கள் ஆசிரியர். - மத். 23:8,10 | 1. தாயும் தந்தையும் சற்குரு நாதனும் ஆயும் தெய்வமும் நீ. - திருஅருட்பா 2767 |
| 2. ஆற்றலில் இறைவன் உயர்ந்தவர் அவருக்கு நிகரான ஆசிரியர் உளரோ? - யோபு. 36:22 | 2. தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்.... நீ. - திருஅருட்பா 2797 |
| 3. (அ) உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர்தாமே கற்றுத் தருவார். - ஏசா. 54:13<br>(ஆ) தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். - யோவா. 14:26 | 3. ஈன்றவனே என் தாயே என்குருவே. - திருஅருட்பா 3009 |
| 4. (அ) இப்போதனை கடவுளிடமிருந்து வருகிறதா அல்லது அதனை நானாகக் கொடுக்கிறேனா என்பதை அறிந்து கொள்வர். - யோவா 7:17<br>(ஆ) நான் உனக்கு அறிவு புகட்டுவேன்: நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்னைக் கண்ணோக்கி, உனக்கு அறிவுரை கூறுவேன். - திபா. 32:8 | 4. (அ) ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளம் என்றும் உள் என்றும் வெளி என்றும் வான் உலகென்றும் அளவறு விகாரம் உறநின்ற எனை உண்மை அறிவித்த குருவே - திருஅருட்பா 14<br>(ஆ) தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே. - திருமந்திரம் 183 |

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

முதுமாணிக் கற்கைநெறியை நிறைவுசெய்து மறைமாவட்டத்திற்குத் திரும்பியுள்ள

# அருட்பிரகாசம் அடிகளார்



அருட்பணியாளர் ம. க. அருள்பிரகாசம் அடிகளார் கடந்த மூன்று வருடங்களாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் கலை முதுமாணிக் கற்கை நெறியை (M.A) நிறைவுசெய்து மன்னார் மறை மாவட்டத்திற்குத் திரும்பியுள்ளார். அத்துடன் பேராதனையில் தங்கியிருந்த காலத்தில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் கலைமாணி (B.Th) பட்டத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமூகவியலில் கலை தத்துவமாணி (M.Phil.) நிலைக்குத் தகுதி பெற்று அதற்கான ஆய்வையும் தற்போது மன்னாரில் இருந்தவாறே மேற்கொண்டு வருகின்றார்.

அருள்பிரகாசம் அடிகளார் கடந்த மூன்று வருடகாலமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்ற காலத்தில் பேராதனை புனித திரேசாள் ஆலயத்திலும், கம்பளை புனித சூசையப்பர் ஆலயத்திலும் தங்கியிருந்து கண்டி மறைமாவட்டத்தில் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டதுடன் கண்டி/ சிறி இராமகிருஸ்ணா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், உள்ளக மேற்பார்வையாளராகவும், கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவ மன்றப் போசகராகவும் பணியாற்றினார்.

இவர் தற்போது மன்/ அரிப்பு றோ. க. த. க. பாடசாலையில் ஆசிரியராகப் பொறுப்பேற்று வஞ்சியன்குளம் பங்கில் தற்காலிகமாகத் தங்கியிருந்து பணியாற்றி வருகின்றார். இவர் தூய யோசவ்வாஸ் அடிகளாரின் தேசிய மட்ட சபையின் மன்னார் மறைமாவட்ட இணைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவரின் ஆன்மீகப் பணியும் கல்விப் பணியும் சிறக்க மன்னா மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்றது.

# மருத்துவப் பொழிவு

## சிக்குன்குன்யா நோய்களுக்கு சித்த ஆயுர்வேத சிகிச்சை

வைத்தியர் எஸ். லோகநாதன் B.S.M.S, R.A.M.P சித்தவைத்திய நிபுணர், மன்னார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**தசைகளிலும் மூட்டுக்களிலும் வீக்கத்துடன் வேதனைகளுக்கு உள் மருந்து**

1. இரசகெந்தி மெழுகு - இதில் 500 மி.கி. வீதம் இரண்டு வேளை உணவிற்குபின் வாழைப்பழத்தில் பொதிந்தோ அல்லது சர்க்கரையில் பொதிந்தோ பல்லில் படாமல் விழுங்கவும்.
2. வாத இராட்சசன் மாத்திரை -இதில் இரண்டு மாத்திரை வீதம் மூன்று வேளை உணவுக்குப்பின் கசாயத்துடன் விழுங்கலாம்.

**வெளி மருந்து**

பிண்டத்தைலம் அல்லது சரசபாதித் தைலம் அல்லது கற்பூராதித் தைலம் அல்லது குக்கில் தைலம் அல்லது விஷ முஷ்டித் தைலம் இவைகளில் ஏதாவதொன்றைச் சிறிதளவு எடுத்து மூட்டுகளில் வலி, வீக்கம் உள்ள இடங்களில் தேய்த்து சூடான ஒற்றடம் இடவும்.

**தோலில் ஏற்படும் தடிப்புக்கள் சிறு பருக்களுக்கு**

1. வங்க வெண்ணெய்க் களிம்பு - இதனை மேற்பூச்சாகப் பூசலாம் தடிப்பு மறையும்.
2. கந்தக இரசாயனம் - 5 கிராம் வீதம் இரண்டு வேளை உணவிற்குப் பின்னர் எடுக்கவும். பால் குடிக்கவும்.
3. பறங்கிப் பட்டைச் சூரணம் - 500 மி.கி வீதம் மூன்று வேளை உணவிற்குப் பின்னர் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.
4. இரசகெந்தி மெழுகு - இதில் 500 மி.கி. வீதம் இரண்டு வேளை உணவிற்குப்பின் வாழைப்பழத்தில் பொதிந்தோ அல்லது சக்கரையில் பொதிந்தோ பல்லில் படாமல் விழுங்கவும்.

**சிக்குன் குன்யா காய்ச்சலுக்கு வீட்டு வைத்தியம்**

1) காய்ச்சலிற்கு....

நிலவேம்புக்குடி நீர் - நிலவேம்பு, வெட்டிவேர், இலாமிச்சு வேர், சந்தனத் தூள், பேய்ப் புடோல், கோரைக் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பலி, பற்படாகம் ஆகிய இப்பத்துச் சரக்குகளும் தனித்தனியாக 8 கிராம் எடுத்து 400 மி.லீ. நீர் விட்டுக் கொதிக்க வைத்து 100 மி. லீ. ஆக வற்றவைத்து காலை, மதியம், இரவு 30 மி. லீ. குடிக்கக் கொடுக்கவும்.

2) தலைவலிக்கு - சுக்கு, இலவங்கப்பட்டை, மிளகு சமனாக எடுத்து வெந்நீரில் அரைத்து நெற்றியில் பற்றிடவும்.

3) உடல் அசதி, களைப்புக்கு எலுமிச்சம் பழச்சாற்றுடன் தேன் கலந்து காலையில் குடிக்கவும்.

**தடுக்கும் முறை**

1) சிக்குன் குன்யா வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டவர்களின் இரத்த மாதிரியைச் சேகரித்து ஆய்விற்கு அனுப்பி சிக்குன் குன்யாவிற்கான வைரஸ் உண்டா? இல்லையா? எனக் கண்டறியப்பட வேண்டும்.

2) நுளம்பு வாழும் இடங்களை முற்றாக அழித்தல் வேண்டும்.

3) நோய் ஏற்பட்டவர்களுக்கு தகுந்த மருத்துவமோ அல்லது மருத்துவ ஆலோசனைகளோ வழங்கப்படல் வேண்டும்.

4) நுளம்பு வலை அல்லது நுளம்புத்திரி பாவித்தல் அவசியம்.

5) உணவில் அதிகளவு கீரை, கரட், பப்பாளி, தோடம்பழம், தக்காளி, திராட்சை போன்றவற்றைச் சேர்க்கவும்.

6) அதிகளவு இனிப்பு, தேநீர், கோப்பி, சோடா, உறைப்பு, கொழுப்புணவு, கள்ளு, சாராயம், பீடி, சிகரெட் என்பவற்றைத் தவிர்க்கவும்.

7) நீர்த்தொட்டிகள், நீர்ப்பாத்திரங்கள், நீர் தேங்கிக் கிடக்கும் இடங்கள், வீசப்பட்ட பழைய டயர்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள், திறந்திருக்கும் டின்கள், பூச்சாடிகள், தேங்காய்ச் சிரட்டைகள் ஆகியவற்றில் அதிகளவு நீர் தேங்குவதால் பெருமளவில் இந்நுளம்புகள் பெருகுகின்றன. இவ்விடயங்களை முற்றாக அழிக்கவும். எனவே இத்தடுப்பு முறைகளை முறையாகப் பின்பற்றிவந்தால் சிக்குன்குனியா நோயை முற்றாகத் தடுக்கலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
அ. றேக்கா, தலைமன்னார் கிராமம்

## தக்காளி சாதம்

**தேவையான பொருட்கள்**

அரிசி 3 சுண்டு, தக்காளிப் பழங்கள் - 500 கிராம்
கடலைப் பருப்பு - தேவையான அளவு
வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2
கறிவேப்பிலை - தேவையான அளவு
இஞ்சி - 1 துண்டு, பூண்டு 1 பல்
நெய் அல்லது நல்லெண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
கடுகு, வெந்தயம் - தேவையான அளவு
மிளகாய்த்தூள் - தேவையான அளவு
கொத்த மல்லி இலை - சிறிதளவு
தண்ணீர் - 6 கப், மஞ்சள் தூள் - சிறிதளவு





**செய்முறை**

தக்காளிப் பழங்களை நன்றாகக் கொதித்த நீரில் 10 நிமிடம் போட்டு பின்னர் தோலை அகற்றி மிக்சியில் நன்றாக அரைத்து வைக்கவும். வெங்காயம் பச்சை மிளகாயை சிறிதாக நறுக்கவும், அத்தோடு பூண்டு, இஞ்சியை சீவிப்போடவும். ஓர் பெரிய பாத்திரத்தை அடுப்பில் வைத்து நெய்யை ஊற்றி கடுகு, வெந்தயம், நறுக்கிய வெங்காயம், மிளகாய்ப் பூண்டு, இஞ்சி கறிவேப்பிலை, கடலைப்பருப்பு இவற்றைப் போட்டு சென்நிறமாகும் வரை வதக்கி அரைத்த தக்காளிக் கூழையும் ஊற்றி சிறிதளவு மஞ்சள் தூள், தேவையான அளவு மிளகாய்த்தூள், உப்புதூள், ஏனைய தூள்களையும் போட்டு 6 கப் தண்ணீரையும் ஊற்றி அரிசியையும் கழுவி போட்டு மூடி நன்றாக வேக விடவும். 20 நிமிடங்களில் சோறும் நன்றாக வெந்திருக்கும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி கொத்தமல்லி இலையை அதன்மேல் தூவிவிட்டால் தாக்காளி சாதம் ரெடி.

தொகுத்துத் தருவது
ப. தட்சாயினி, சாளம்பன், நானாட்டான்.

## அன்னாசிப்பழ பாயாசம்

**தேவையான பொருட்கள்**

அன்னாசிப் பழம் - 1, சீனி - 2 கோப்பை
தேங்காய்ப் பால் - 1½ கோப்பை
பாதாம் பருப்பு - ½ கோப்பை
விதை நீக்கிய பேரீச்சம்பழம் - ½ கோப்பை
ஏலத்தூள் - சிறிதளவு



**செய்முறை**

அன்னாசிப் பழத்தைச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். வெட்டப்பட்ட அன்னாசித் துண்டுகளை கிரைண்டரில் அரைத்தெடுத்து அதனுடன் சீனியையும் சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். பின் அதனுள் விதை நீக்கிய பேரீச்சம்பழம், பாதாம் பருப்பு, ஏலத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து மெல்லிய பதத்திற்கு வரும்வரை நன்கு கரண்டியினால் கிளற வேண்டும். ஓரளவு இறுக்கமாக வரும்போது தேங்காய்ப் பாலைச் சேர்த்து மீண்டும் கிளற வேண்டும். அதன்பின் மூன்று நிமிடங்களுக்குள் அடுப்பில் இருந்து இறக்கி ஆறியதும் பரிமாறலாம். நாவுக்கு மிக சுவையாக இருக்கும்.

# தாய்ப்பால் பற்றி சில குறிப்புக்கள்

தொகுத்துத் தருவது : கி. மேரி றீதா, உடுவில்



- ♦ குழந்தைகளுக்குத் தேவையான எல்லாவிதமான போசனைகளும் தாய்ப்பாலில் உள்ளது.
- ♦ இது சுத்தமானதும், பொருளாதாரத்திற்கு ஏற்றதாகவும், இலகுவில் கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது.
- ♦ இது குழந்தைக்கும், தாய்க்கும் இடையே பிணைப்பையும், மனத் திருப்தியையும் ஏற்படுத்தும்.
- ♦ குழந்தைக்கு தொற்று ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய நோய் எதிர்ப்புச் சக்தி தாய்ப்பாலில் உண்டு.
- ♦ இலகுவில் சமிபாடடையக்கூடியதும் உகந்த வெப்பநிலையும் கொண்டது.

# கைமருந்து

தொகுத்துத் தருவது :
- ரவி ராணி, ப.க.கொ. மேற்கு, மன்னார்

- ♦ தலைவலி குணமாக ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு குடித்து வரவேண்டும்.
- ♦ கருஞ்சீரகத்தை பன்னீரில் குழைத்து தடவிவர காயங்கள் குணமாகும்.
- ♦ சிறிது உப்பை வறுத்து ஒரு சிறிய துணியில் மூட்டையாகக் கட்டி சூட்டுடன் ஒத்தடம் கொடுத்துவர பல் வலி குணமாகும்.
- ♦ கசகசாவை நீரிட்டு மைபோல் அரைத்து பாலில் கலந்து இரவு படுக்கமுன் குடித்துவர வாய்ப்புண் குணமாகும்.
- ♦ சிறிது மஞ்சள் தூளுடன் தேன் கலந்து தடவிவர காயங்கள் விரைவில் குணமாகும்.



## நலன்புரி நிலையங்களில் உள்ள வன்னி மக்களின்

# வாழ்வுக் கோலத்தை வெளிப்படுத்தும் எழுத்தோவியங்கள்

## துயரம் கொண்டும் துவண்டிடா மனிதர்கள்

அல்பிரட் அமல்ராஜ், வாழ்வுதயப் பணியாளர், வெ| செட்டிகுளம்.

1. ஆயிரம் வண்டிகள் வீதியில் உருளுது
பசியினில் மக்கள் நாளும் வாடுவர்
காரணம் இன்றி நிலையாய் ஓடுது
புளுதியில் எம்மவர் தினமும் புரளுவர்.

2. காடுகள் எல்லாம் கொட்டில்கள்
அதுவே மக்களின் சொத்துக்கள்
உருண்டு புரள சமதரை இல்லை
உருக்குலைந்த மனிதர்கள் இவர்கள்.

3. உருவம் இல்லாத கிராமம் தன்னிலே
ஊனும் உடலும் சோர்ந்து கிடக்குது
மக்களின் வாழ்வு ஆணையின் மத்தியில்
மறுத்திடமுடியா நிற்கதி எம்மில்.

4. எத்தனை நாட்கள்தான் இந்த வேதனை
மனிதர்கள் விரும்பா துன்ப வேதனை
வருபவர், போவபர் எம்மைப் பார்க்கிறார்
அத்தனை முறையும் நிரையில் காண்பதால்.

5. அள்ளிக்கொடுத்த அத்தனை கைகளும்
ஒருபிடி அரிசிக்கு அணியாய் நிற்குது.
எல்லா மனிதரும் இணைந்து காண்பதால்
படித்தவன், பாமரன் பார்த்திட முடியுமா?

6. தண்ணிப்பஞ்சம் தொடர்ந்து வாட்டுது
அளவுத் தண்ணியில் என்ன செய்வது
அத்தனை நோய்க்கும் இதுவே காரணம்
மரணம் வந்தால் எல்லாம் நிரூபணம்.

7. பள்ளிப்பாலகர் பரிதாப கோலமாய்
சொறியும் சிரங்கும் மூடியே நோக்கலாம்
ஊட்டச்சத்து கொஞ்சமும் இல்லை
ஊனமாய் பாலகர் திரிவதைக் காணலாம்.

8. வைத்திய சாலை வடிவாய் இருக்குது
வைத்தியர் அங்கியும் சுத்தமாய்த் தெரியுது
அம்புலன்ஸ் வண்டியும் ஓடித்திரியுது
மடியும் மக்கள் பத்தாய் உயருது.

9. சோளகக் காத்தினில் ஈக்கள் கூடுது
சுகாதாரப் பிரிவும் ஊதித் திரியுது
நெருக்கடியாக மக்கள் வாழ்வதால்
வீதியின் மருங்கும் மனித எச்சங்கள்.

10. செத்த நாக்கு உப்பைக் காணுமா
யுத்தப் போக்கு முடியும் நாள்வரை
பொதுவாய் சமைப்பது எத்தனை காலம்தான்
செத்தவன் பிழைத்ததும் இந்த உணவில்தான்

11. மரணம் எல்லாம் வடிவம் எடுக்குது
காரணம் தெரியா நிலையில் உள்ளது
கண்டவன், தெரிந்தவன் ஊமையாய் உள்ளான்
இறைவன் மட்டில் எல்லாம் விபரணம்.

12. தெருக்கள் எல்லாம் மின்குமிழ் மிதக்குது
கொட்டில்கள் எல்லாம் இருள்மயம் சூழுது
எண்ணிலடங்கா குடும்பங்கள் உள்ளே
கலவரம் மற்றும் காதல்களுக்கு பஞ்சம் இல்லை.

13. அடுத்தவர் மனைவியை ஊறு நினைப்பதும்
நிரை நிரையாக நித்திரை செய்வதும்
வயது மங்கையர் சுகாதாரம் காப்பதும்
நினைத்துப் பார்த்திட முடியாச் சோகங்கள்.

14. ஆலயம் தோறும் தோம்பு (பாடை) உள்ளது
மரித்தவர் உடலைத் தாங்கிச் செல்லவே
கொட்டில்கள் தோறும் பாடை உள்ளது.
அங்கமிழந்தவர் காவிச் செல்லவே.

15. செத்துப் பிளைத்த மக்களின் வாழ்க்கையில்
சுரண்டிப் பிழைக்கும் கூட்டம் உள்ளது
நாளும் பொழுதும் ஆர்வமாய் நிற்பதால்
பொருட்கள் எல்லாம் விலையாய் உள்ளது.

16. அம்மை நோயும் தொடர்ந்து துரத்துது
அகதிகள் வாழ்வினில் சஞ்சலம் தெரியுது
மரித்தவர் உடல்கள் தெரிவினில் கிடக்குது
துன்பம் எல்லாம் மொத்தமாய் வருகுது.

17. கறிற்றாஸ் நிறுவனம் காலைப் பதித்தது
உணவுத் தேவையை முழுமையாய்த் தீர்த்தது.
பணிகள் எல்லாம் பரவலாய்ப் பாய்ந்தது
பயங்கரமான அழுகுரல் மத்தியில்.

19. சமையல் செய்யக் கத்திகள் இல்லை
இருந்தும் அங்குதான் சமையல் நடக்குது
தகரத்துண்டுகள் எல்லாம் கத்திகள்
சாக்குத்துண்டும் கிழங்கைச் சீவுது.

20. வடித்துச் சமைக்க பால்வடி இல்லை
உள்ளிச் சாக்கும் வடியாய் மாறுது
பெருந்தொகை நபருக்கு சமையல் நடக்குது
ஒரு மணி நேரத்தில் ஆயிரம் உரொட்டிகள்.

22. உணவு உண்ண கோப்பை இல்லை
ஓட்டைச் சொப்பின் எல்லாம் போப்பைகள்
இருக்க இல்லிடம் வெறுமையாய் இல்லை
நடைபிணமாக திரிந்தே உண்கிறார்.

## மீண்டு [ம்] வந்தோம் எப்படி?

*வன்னியின் இறுதி அனுபவங்கள் கண்ணீருடன் இங்கு பகிரப்படுகிறது*

அ. மேரி கொன்செப்ரா, மடுக்கோவில், மடு.

ஓ மானிடா!
கருவறையிலிருந்து
கல்லறை வரைக்கும்தானே
உன் வாழ்க்கைச் சக்கரம்
சுழன்றுகொண்டிருந்தது.
சக்கரத்திலிருந்து அச்சாணி
ஒன்று பிசகியதால்
இடைவழியில் அது திண்டாடி
வண்டியே கவிழ்ந்த கதையோ!
கல்லறையிலிருந்துதான்
கருவறைக்கு என்று
மாறியமைத்த விதியை
என்னென்று கூறுவது?

பலவந்தத்திற்குப் பயந்து
எத்தனை நாட்கள்
இருட்டறைக்குள் காலம்
தள்ளினோம்?
மூவேளை உணவு
ஒருவேளைக் கஞ்சியாக
மாற்றப்பட்டதுமட்டுமல்லாமல்
பலவேளை உணவின்றிக்
கிடந்ததைக்கூட
நம் வயிறுகள் வாய்விட்டுச்
சொல்லியழுமே!
கொத்துக் குண்டில்
குலையாகத்தானே
குஞ்சுகளைப் பறிகொடுத்தோம்.
மறுநிமிடம் ஆகவில்லை
மீதமிருந்த குருவிகளையும்
குழறக் குழறப்
பறிக்கொடுத்தார்கள்.



துண்டாடப்பட்டவை
எம் உடமைகளும் நிலங்களும்
மட்டுமல்ல எம் குடும்பங்களும்
உறவுகளும்தான்.

ஓடி வந்து ஓரிடத்தில்
குந்தியிருக்க முயன்றால்
மீண்டும் வெடிச் சத்தம்
கேட்கத் தொடங்கிவிடும்.
மறுபடி வேறிடம் நோக்கி
ஓட்டம் ஓடி ஓடி வாடிக்
களைத்த பின்பும்
தேடித் தேடித் துரத்தும்
துன்பம்தான்
தொடர்கதையானது.

அத்தனையும் அரங்கேறி
முடிந்தபின்தான்
உயிர் எனும் பிச்சைக்காக
உன்னதரைக்
கையேந்தினோம்.

பல நாட்களாகப்
பந்தாடப்பட்டு எம்
மனங்களெல்லாம்
துண்டாடப்பட்ட நிலையில்
மீண்டும் ஓர் ஒளி தேடிப்
புறப்பட்ட பாதையில்தான்
எத்தனை அகோரக் காட்சிகள்!

உயிரற்ற உடலங்களாகவும்
உயிர்போகத் துடிக்கின்ற
ஜீவன்களாகவும்
நாதியற்று நாறிக் கிடந்தன
எம் உறவுகள்.

ஓரிடத்தில் அமர்ந்து
பெருமூச்சு விடவில்லை
அதற்குள் முகமூடி
அடையாள விசாரணையில்
அடி உதையின் வலிகள்.

பஞ்சடைந்த கண்களில்
கண்ணீர் வரக்கூட
உடலில் தண்ணீர்
இல்லாத நிலமை!

"மானிடமே விழித்தெழு!
இது வரலாறு தந்த பாடம்!
உன் வாழ்வைக்
கட்டியெழுப்ப புறப்படு,
முயன்றிடு!"
எனும் ஏதோ எண்ண
ஓட்டங்களுடன் ஆரம்பித்த
பேருந்துப் பயணம்
எமக்கான திறந்தவெளிச்
சிறைச்சாலையில்
தன் வேகத்தைக்
குறைத்துக்கொண்டது!

## விடிவு கிடைக்குமா

(அருட்சகோதரி. ம. அஜந்தா, அ. கா)

### நலன்புரி நிலையத்தில் வாழ்க்கை

"அம்மா, அம்மா, கொஞ்சம் தண்ணி தாங்கோ குடிக்க. எனக்குச் சரியான தாகமா இருக்கு"

"என்னம்மா நான் செய்கிறது? கொஞ்சம் பொறுமையா இரம்மா. தண்ணீர் பவுஸ்சர் வரட்டும்."

"ஏனம்மா இப்படி ஒரு வாழ்க்கை? நாம் என்ன பாவம் செய்தோம்? என்னால் இந்தக் கொடுமைகளையெல்லாம் பொறுக்க முடியாதம்மா. கடவுளே எத்தனை நாளைக்குத்தான் இவ்வாறு கொடுமைகளை அனுபவிப்பது?"

"அக்கா, எனக்குக் கால் எல்லாம் வலிக்குது. என்ன செய்யிறது என்றே தெரியவில்லை." "என்ன சுமதி? என்ன நடந்தது?" "இல்லை அக்கா, இரவு ஒரு பார்சல் சாப்பாடு வேண்டுவதற்காக மூன்று மணி நேரம் காத்திருந்தேன். ஆனால் கிடைக்கவில்லை. பிள்ளைகள் பசியில் துடிக்குதுகள். என்ன செய்வது என்று விளங்கவில்லை" "கவலைப்படாத அம்மா என்னதான் நடக்கும் என்று பாப்போம்"

### உறவினர்களைப் பார்வையிட வந்திருப்போர்

"ரஞ்சி, ரஞ்சி, கெதியன்று வாங்கோ இடம்பிடிக்கவேணும்."

"என்ன கலா எங்க இடம் பிடிக்கப் போறிங்க?"

"என்ன றஞ்சி, நாட்டு நடப்புத் தெரியாத மாதிரிக் கதைக்கிறாய்.

"கலா அக்கா, நான் எப்படியாவது அக்காவைப் பார்க்க வேணும். அவளோட கதைக்க வேணும். நாலு வருஷம் நான் அக்காவை பார்க்கவில்லை. உடுத்த உடுப்போட வந்திருக்கினமாம் என்று கேள்விபட்டுத்தான் உடுப்புக் கொடுக்க வந்தனான்."

### படையினர்முன் எம் மக்கள்

"அடையாள அட்டையைத் தாங்கோ. யாரைப் பார்க்க போறீங்க?" "எங்கட உறவினர்களை."

"நீங்கள் போகலாம். ஆனால் ஒரு பொருட்களும் கொடுக்க முடியாது. 10 நிமிடம்தான் கதைக்கலாம்."

"ஐயா, இந்தச் சாப்பாட்டை மட்டும் கொடுக்க விடுங்கோ."


"ஒன்றும் கொடுக்க ஏலாது."

"றஞ்சி, எங்கட நிலைமையை பார். எவ்வளவு கஸ்டப்பட்டு சமைச்சு, எத்தனை பஸ் ஏறி இறங்கி, இந்த நெரிசலுக்க வந்தும் பிரயோசனம் இல்லை. (அடைக்கப்பட்ட கம்பியின் நடுவில் சிறைக்கைதிகளைப்போல் நிற்கும் தம் உடன் பிறப்புக்களைப் பார்த்தவுடன் கட்டியணைத்து முத்தம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு. ஆனால் கம்பி வேலி அதற்கு இடம்கொடுக்கவில்லை. அவர்களும் அழுகின்றார்கள். இவர்களும் அழுகின்றார்கள். படையினர் வருகின்றனர். "பத்து நிமிடங்கள் தாண்டிவிட்டது. போங்க போங்க" என்று அதட்டுகின்றனர். இரு கரங்களும் பிரிய மனமின்றி மீண்டும் அடுத்த கிழமை வருவதாகச் சொல்லி, பிரியாவிடை கூறிச் செல்கின்றனர்.)

"எவ்வளவு வசதியாக இருந்தோம்? இப்போது ஒரு பார்சல் சோற்றுக்கே வழியற்றவராக இருக்கின்றோம். எங்களுக்கு விடிவு வேண்டும். சிட்டுக்குருவிகளைப்போல் சிறகடித்துப் பறந்த எங்கட வாழ்க்கை கூட்டில் அடைக்கப்பட்ட குருவிகளைப் போலாயிற்று. மீண்டும் பறக்கமுடியுமா? அப்படித்தான் இன்னமும் நம்புகிறோம். நம்பிக்கைதானே வாழ்க்கை!"

## நீங்காத நினைவுகள்

### 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 | | 18 |
| 01 |  | 07 |
| 1947 | | 2004 |

**அமரர் பறுனாந்து அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)**

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

முருங்கன் கமம், முருங்கன்

*"சீவியத்தில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"*

ஐந்தாண்டுகள் என்ன? எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறுமா எங்கள் நெஞ்சம்? அணையாத தீபமாய் எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் எம் அன்புத் தந்தையே! பாசத்தோடு அனைவருக்கும் ஆசை முகம் அல்லவா காட்டினீர்கள்! உறவுகள் எம்மைச் சூழ வந்தாலும் தந்தையே, உங்களைத் தேடித்தாவுதே எங்கள் மனம். ஆற்றொணாத்துயர் வந்தபோதும் சிறிதேனும் கலங்காமல் புன்முறுவல் பூத்த முகத்தோடு எம்மை வழிநடத்திய எம் உள்ளத்தின் அகல்விளக்கே! உங்களை எண்ணி உள்ளம் உடைந்து உறங்காத விழிகளோடு தவிக்கின்றோம். உங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனிடம் இரந்து மன்றாடும்,

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்**

### 6ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 07 | | 14 |
| 11 |  | 07 |
| 1947 | | 2003 |

**அமரர் திருச்செல்வம் கிருபாநிதி**

(முதலைகுத்தி உயிலங்குளம்)

*"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு"*

அன்பே உருவான எங்கள் அன்புத் தந்தையே, வருடங்கள் ஆறு கடந்தாலும் நீங்கள் எம்மைவிட்டுப் பிரியவில்லை. எம்மோடு எம்மில் வாழ்கின்றீர்கள். உம் அன்பும், பாசமும் எம்மில் என்றும் வாழ்கின்றது. நீங்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது இறைவனின் கருவியாக எம்மோடு வாழ்ந்தீர் ஐயா! உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும், அன்புமனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.87 எரேமியா8-14

உங்கள் விடைகளை 15.08.2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | | | | | 03 |
| | | | 04 | | | 05 | | | ✱ | |
| 06 | | | | | | | | | 07 | |
| | | 08 | | 09 | | | | 10 | ✱ | |
| | ✱ | | | | | | | 11 | | |
| | | | | | | | | 12 | | ✱ |
| 13 | | | | | 14 | | | | | |
| | | | 15 | | | ✱ | | | 16 | |
| | | | | 17 | | | | | ✱ | |
| | | 18 | | | | | 19 | 20 | | |
| ✱ | 21 | | | | ✱ | | | | | 22 |

### இடமிருந்து வலம்

1. ஆண்டவரே உமக்கு நிகர் ................................ நீர் பெரியவர்.
5. அவர்கள் ......................... களையும் தானியப் படையல்களையும் அளிப்பினும் அவற்றை நான் ஏற்க மாட்டேன். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
6. அப்படி முடியுமானால் தீமையே செய்து பழகிவிட்ட நீங்களும் ............................. செய்ய முடியும்.
8. ஏனெனில் அவர்கள் ஆண்டவரின்.............ப் புறக்கணித்தார்கள். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
13. வானத்துக் கொக்கு தன் ........................... அறிந்துள்ளது.
14. தங்கள் வஞ்சனையின் காரணமாக என்னை அவர்கள் ..................... கொள்ள மறுக்கின்றார்கள்.
17. என்.................... கண்ணீரின் ஊற்றுமாயும் இருக்கக்கூடாதா?
19. நாங்கள் உம்மையே ........................ நோக்கியுள்ளோம்.
21. என் குரலுக்குச் செவிகொடுத்து நான் .................... யிடுவது அனைத்தையும் செய்யுங்கள்.

### மேலிருந்து கீழ்

2. ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார் நானும்................ கொண்டேன்.
3. இதுவே உன் கதி நான் அளந்து ................... உன் பங்கு.
4. அவர்களைப் பிடுங்கிவிட்டபின் நான் மீண்டும் அவர்கள் மேல்................... காட்டுவேன்.
8. பெண்டிரே ஆண்டவரின் ..........................க் கேளுங்கள்.
9. உன்.............. உயர்த்தி வடக்கிலிருந்து வருபவர்களைப் பார்.
13. ....................... களின் ஒலியும் கேட்கவில்லை.
14. ....................... சூழ் நகர்களுக்குப் போவோம்.
15. ஏனெனில் உங்கள் ..................யின் மணிமுடி உங்கள் தலைகளிலிருந்து வீழ்ந்துவிட்டது.

### வலமிருந்து இடம்

3. வடக்கு நாட்டிலிருந்து பெரும் ...................... எழுகின்றது
4. என்............... உம்மோடு உள்ளது என்பதைச் சோதித்து அறிகிறீர்
7. வேற்றினத்தாரின் தெய்வச்சிலைகளுள் மழை தர ...................... எதுவும் உண்டா?
10. ஏனெனில் நீ என்னை .......................... பொய்யை நம்பினாய்.
11.நம் அரண்களுக்குள்ளும் ...................... விட்டது. (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
12. நமக்கோ இன்றும் ............................ கிடைக்கவில்லை.
16. ஆண்டவரே உம் சினத்திற்கு ................. அன்று உம் நீதிக்கு ஏற்ப என்னைத் திருத்தியருளும்.
19. எங்கள் குற்றங்களே எங்களுக்கு .............ச் சான்றுபகர்கின்றன.
22) நீங்கள் ஒளியை எதிர்பார்த்து நிற்கும் போதே இருளின் ...................... சூழச் செய்வார்.

### கீழிருந்து மேல்

9. அழுகை மிகுதியால் கண்களிலிருந்து .................... வழிந்தோடும்
13. நலம் பெறும் ............ எதிர்பார்த்திருந்தோம் பேரச்சமே மிஞ்சியது.
14. இவற்றின் பின்தானே ....................... திரிந்தார்கள்.
16. எல்லோரும் அடுத்திருப்பவரை ..................... கின்றனர்.
17. நான் .................. ஒன்றுசேர்க்க விரும்பினேன் (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. அவர்கள் உன்னிடம் ..................... யாகப் பேசினாலும் நீ அவர்களை நம்பாதே.
20. ................ என்னைப் பற்றிக்கொண்டது (3வது எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
21. வானத்தில் தோன்றும் அடையாளங்களைக்கண்டு ........................ (2வது எழுத்து 5வதாக உள்ளது)
22. உண்மைக்காக நாட்டில் யாரும்............... நிற்பதில்லை.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 85ல்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:

***அ. கிறேசியன்***
கல்வியற்கல்லூரி,
பூத்தோட்டம்முகாம், வவுனியா.

இரண்டாம் பரிசு:

***பு. சனோஜன்***
முருங்கன் கமம்,
முருங்கன்

மூன்றாம் பரிசு:

***செ. நிலோமி***
28/3, 2ம் குறுக்குத்தெரு
பெற்றா, மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 194 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 181 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.85ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. பி. ஜெனிற்றா மேரி, சாந்திபுரம், மன்னார்.
2. த. ஐங்கரன் இல. 86A, மடுக்கரை, நானாட்டான்.
3. பி. ஜெயதர்சன் 38/10, கொத்தி ஒழுங்கை, திருகோணமலை.
4. ஜெ. எம். ஜெல்சின், நறுவிலிக்குளம், வங்காலை.
5. யே. ஜெஸ்மின் தி. கு. மா. இல்லம் 121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
6. அ. ஜசிந்தா, கொன்னயன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.
7. இ. ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.
8. ஜெலின்ரன் றோய், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
9. வி. வேஜின் டிலக்சனா, ம. ம. வித்தி. முகாம், கோவில்குளம், வவுனியா
10. ஆர். ஜீவிதா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
11. ச. செலஸ்ரீனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
12. எஸ். என். கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதி மன்றம், மன்னார்
13. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
14. றொ. சயந்தன் றொஜர், கோவில் வீதி, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
15. செ. றொபின்சன், ம. க. அடம்பன் மடுறோட்
16. பெனடிக்ற், புனித மரியாள் த.ம.வி. பம்பலப்பிட்டி கொழும்பு 04.
17. எரிக்ஷன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
18. பி. ஜெனபந்தூர் பறுனாந்து, தரம் O/L, முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி
19. அ. ஜெ. சிறோமி மலர்வாசம் முதலைகுத்தி உயிலங்குளம்
20. ச. கிஷோ ஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன், மன்னார்.
21. ஏ. துவாரகன் டயஸ், பாடசாலை வீதி, தாழ்வுபாடு.
22. எஸ். சராக் லெனோ, டிலாசால் இல்லம், மன்னார்.
23. ஏ. அபி, புதுக்கமம், உயிலங்குளம்.
24. செ. மேரி ஜெசில்டா, செட்டிகுளம் , D21 முகாம், அன்பகம், வவுனியா.
25. ஏ. யாழினி மிராண்டா, எமில் வீதி, தாழ்வுபாடு.
26. றொ. டயானா கூஞ்ஞ, தரம் 08, தலைமன்னார் J. R. S. வீட்டுத்திட்டம்
27. அ. டெஸ்மன் வெற்றிராஜ், ஆவணம், நானாட்டான்.
28. மா. சகாயராணி டயஸ், தரவன்கோட்டை, எழுத்தூர்
29. அருட்சகோதரி, மல்லிகா திருக்குடும்ப கன்னியர் மடம், நெடுந்தீவு
30. P. அன்ரனி டெனிஸ்ரன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை
31. அ. ஜெறின் வெண்ணிலா, ஆவணம், நானாட்டான்.
32. திருமதி. எம். எம். ஜே. பசில் 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
33. து, ஜெ. டினுசாந், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
34. அன்ரனிற் பிறின்ஷா, உயர்தரம், வ/ விபுலாநந்தாக் கல்லூரி, வவுனியா
35. ர. சுரேண்யா, வேப்பங்குளம், வவுனியா.
36. கொ. அன்ரனி, பொன்தீவு கண்டல், முருங்கன்.
37. செல்ரன் மனோகரி, பட்டித்தோட்டம், மன்னார்.
38. இ. குயின்ஸி ஸ்ரெலா, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.
39. இ. பிலோமினா, செட்டிகுளம் ம. வி. செட்டிக்குளம். வவுனியா.
40. பி. ஆன் செலோ வெகின், வாழ்க்கைப்பெற்றான்கண்டல்.
41. ந. ஜெகப்பிரியன், 180 ஒல்லிமோட்டை, மன்னார்.
42. க. கிறிஸ்ரீலன் மன்/ மடுக்கரை அ. த. க. பாடசாலை, மடுக்கரை
43. யோ. கொணி லெம்பேட், வட்டாரம் 6, வங்காலை.
44. அ. மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.
45. S. நிஷாந்தினி கூஞ்ஞ, வட்டாரம் 8, பேசாலை.
46. பி. டென்சி டலிமா தியோகு வீதி, தாழ்பாடு
47. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
48. கே. சபேக்கா டலிமா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
49. என். ஜெகஜீவன் றோச், புனித லூசியா ம.வி. பள்ளிமுனை.
50. பீ. பெல்சியா லியோன், 7ம் வட்டாரம், அரிப்பு, சிலாவத்துறை.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 85 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி[1] | ரு | ம | லை | க் | கு | தை | த் | ய | தா | ஆ[2] |
| ர | த | ந் | லி | ந்[3] | க் | தா[4] | ழ் | த் | தி | ற் |
| ட் | ✱ | னு | போ | ம் | ஊ | மு[5] | றை | த் | து | ற |
| டி | ர் | றா | கி | ன் | எ[6] | று | பா[7] | தை | யி | ல் |
| ய | மா[8] | ட் | சி | கு | க் | மொ | ர் | த் | ✱ | யி |
| ✱ | ட் | டு | ரு | பொ[9] | கா | ழி | வை | ல | ர் | லை |
| ச் | சி | ழ் | கி | ம[10] | ஏ | ✱ | யி | ல் | ப | தொ[11] |
| உ[12] | ழை | ப் | பா | ல் | ம | ரி | ல் | இ[13] | ட் | ழ |
| யை | ஆ[14] | சி | யை | மை | ர் | நே[15] | ர | டி | ம[16] | வ |
| டை | ✱ | ர் | வ | ப | ல் | ய | மு[17] | ற் | ட் | மா |
| த[18] | ல் | தி | த் | ல | ல் | இ[19] | ✱ | து | க | க |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.86ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு ஓகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## யசோதா .... 8ம் பக்கத் தொடர்ச்சி

"ஒ ... இந்தப் பெண்ணுக்கு எப்படி புரியவைப்பது? உன் கேள்விகளுக்கு விடைகிடைக்கும் வரை காத்திரு" கௌதமர் அதற்குமேல் அங்கு இருக்கவில்லை. எழுந்து குடிலுக்குள் சென்றுவிட்டார்.

நிலவொளியில் சரயூ நதியும் வெண் மணற்பரப்பும் வெளுத்துக் கிடந்தன. பௌர்ணமிக்கு இன்னும் இரண்டே நாட்கள்தான் என்றபடியால் புத்த பிட்சுக்கள் அங்கு வரத் தொடங்கியிருந்தனர். சரயூ நதியின் சலசலப்பு மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. யசோதாவுக்கு அந்த வெண்மணலில் தனியாக அமர்ந்திருப்பது இதமாக இருந்தது. தூரத்தில் கோசல ராஜ்ஜியத்தின் சிராவஸ்தி நகரத்தின் அரச மாளிகை வெளிச்சம் நதியில் விழுந்து மினுக்கிக்கொண்டிருந்தது. யசோதா புத்தரைப் புண்படுத்திய வார்த்தைகளை நினைத்து விசனமடைந்து கொண்டிருந்தாள்.

கிரேக்கத்தில் தோன்றியிருந்த பிதாகோர், கெராக்லிட்டோ போன்ற தத்துவ ஞானிகளின் கருத்துக்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு கௌதமரின் பஞ்சசீலக் கோட்பாடு முன்னுக்கு வந்துகொண்டிருந்த காலப்பகுதியில் யசோதாவால் மட்டும் ஒத்துப்போக முடியவில்லை என்றால் ..... உலகமே போற்றித் துதிக்கும் கௌதம புத்தரைப்பற்றி தனக்கிருக்கும் நினைப்பு மாற்றப்படவேண்டும் என்று நினைத்தாள். அவள் மனம் இளகியது.

மீண்டும் மடத்திற்கே சென்று விடுவோம் என்று எழுந்தவளுக்கு சற்றுத்தூரத்தில் காவியுடையோடு அவளை நோக்கி பிட்சுக்கள் நடந்து வருவது தெரிந்தது. எல்லோரும் மதிக்கும் புத்தரின் பிரதம சீடர் மகாஸ்தவீர் தர்மசேனர்தான் வந்துகொண்டிருந்தார்.

"குழந்தாய்... வா... உணவருந்தலாம் .." யசோதா மனதுக்குள் குமைந்தாள். தன் தவறுக்காக வருந்தினாள். "புரிகிறது யசோதா... உபநிஷதம், பிரம்மவாதமும் கற்பித்த - வைகளைத் தாண்டி, பிரத்தியட்சப் பொருட்களைத் தாண்டி ஆத்மா, கடவுள் பக்தி, நித்தியத்துவம், சொர்க்கம், நரகம், புனர்ஜென்மம் என்பவைகளையெல்லாம் தாண்டி கௌதமப் புத்தரின் அநித்யவாதத்தை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது அல்லவா?" அந்தப் பெரியவரின் தொனியில் இருந்த கனிவும் ஆழமும் யசோதாவை அசைய விடவில்லை. அவளுக்கு அவரின் வார்த்தைகளைக் கேட்கவேண்டும் போலிருக்கக் கேட்டாள்.

"அப்படியானால் கௌதம சித்தார்த்தர் பெண்ணாகிய என்னை அபலையாக்கியது பாவமில்லையா?"

பெரியவர் சிரித்துவிட்டுச் சொன்னார், "இந்த உலகத்தின் நியமங்களும் அதனால் விளைந்த தத்துவங்களும் நதியைக் கடக்கப் பயன்படுத்தும் தெப்பக்கட்டைகளைப்போல. நதியைக் கடக்க உதவியதே என்பதற்காக அந்தத் தெப்பக் கட்டைகளை தலையில் வைத்து சுமந்துகொண்டு திரிவது புத்திசாலித்தனமல்ல.. யாசோதா பெரியவரின் அசையும் உதடுகளையே பார்த்துக் - கொண்டிருந்தாள். வெகு நேரம் அவளுக்குக் கேள்வி கேட்கத் தோன்றவில்லை. அவளுக்கு மனம் புரளுவதுபோலிருந்தது.

"உண்மையாகவா, மக்கள் இவற்றையெல்லாம் ஏற்றுக் - கொள்கிறார்களா?" "இல்லாமலா, அதோ தெரிகிறதே ஸிராவஸ்தி நகரம் ... அங்குதான் இளவரசி வஸாகா புத்தருக்காகக் கட்டும் ஆயிரம் அறைகளும், ஏழு மாடியுமான பூர்வராம மிருதார் மாதா மடம் இருக்கிறது. பிரசேனஜித்தனின் பட்டத்து அரசி மல்லிகாதேவி புத்தருக்காகக் கொடுத்த கொடைகளின் எண்ணிக்கை சொல்லி மாளாது. இளவரசன் சுத்ததன் அருளிய ஜேதவனம் பற்றி கேள்விப்பட்டிருப்பாய்"

"அப்படியானால் சொத்து சேர்க்கிறீர்களா? "சொத்தா யாருக்கு? பெண்ணே உடுத்துவதற்கு மூன்று துணிகள், மண்ணால் வனைந்த பிச்சைப்பாத்திரம், தண்ணீர்பை, ஊசி சவரக்கத்தி, இடுப்புக்கச்சை, இவைகளைத்தவிர வேறொன்றும் பிட்சுவுக்குச் சொந்தமில்லை. ஒரு கவளம் அன்னம் கிடைத்தாலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துதான் உண்ணவேண்டும்."

"மடமும் உத்தியாவனமும் யாருக்குச் சொந்தம்?" "அது பகவான் அமைத்த சங்கத்திற்குச் சொந்தம்." அவர் சொல்லி முடிக்க மற்றவர்கள் ஒரே தொனியில், "புத்தம் சங்கம் தர்மம்" என்று சொல்ல யசோதாவின் வாயும் அவளையறியாமல் அந்த மந்திரத்தை உச்சரித்தது. அவளின் வார்த்தைகளை மேவிக்கொண்டு புத்தி பேசியது.. "எது என்னவாய் இருந்தாலும் அவளுக்கு கௌதமர் செய்தது தவறு.. தவறு..தவறு.." விடிந்தது!

"யசோதா, பிக்குனிகளை வரச்சொல்லியிருக்கிறேன். பஞ்சாங்க நமஸ்காரம் செய்து பஞ்ச சீலத்தை ஏற்றுக்கொள். பிக்குனியாகிவிடு" யசோதாவுக்கு கட்டுப்பட முடியவில்லை.

"இரவோடிரவாக விட்டுப்பிரிந்த உங்களிடம் பகல் பொழுதில் சொல்லிவிட்டுப் பிரிவதற்காகவே நான் வந்தேன்." புறப்பட்டாள் யசோதா. அவளுக்குப்பின்னால் அந்தப் போதனை கேட்டுக்கொண்டே இருந்தது.

"ஜீவகாருண்யமே... மந்திரம்.. ஜாதி சமய வேற்றுமை இல்லாத உலகம் வேண்டும். உயர்வு தாழ்வு இல்லாத உலகம் வேண்டும்."

## மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 700.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 3000.00 (இலங்கை ரூபா)

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

**காசோலை மூலம் செலுத்துவதாயின்;**
**வங்கியின் பெயர் :**
Hatton National Bank Ltd. (Mannar Branch)
**பணம் பெறுபவரின் பெயர்:** The Editor - 'MANNA'
**வங்கிக் கணக்கு இலக்கம்:** S/A No. 02 -1678001-5

## நீத்தார் நினைவு, பிறந்த நாள்,

திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான

## கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4000.00
பல நிறத்தில்: - ரூபா 7500.00

முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.

\- பதிப்பாசிரியர்

# மன்னா

## அருட்பணி. சறத்ஜீவனின் உடல் கொழும்பில் தகனம்

- சீரற்ற விமான போக்குவரத்துக்காரணமாக உடலை யாழ்ப்பாணம் கொண்டு செல்லமுடியவில்லை.
- அடிகளாரின் அஸ்தி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.



வன்னிப் பிரதேசத்தின் முள்ளிவாய்க்காலிலிருந்து வரும் போது மாரடைப்பினால் இறைபதமடைந்த அருட்பணி. ம. சறத் ஜீவன் அடிகளின் இறுதி நிகழ்வுத் திருப்பலி கடந்த மே மாதம் 26ம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. சீரற்ற விமானப் போக்குவரத்து காரணமாக அவருடைய உடலை யாழ்ப்பாணம் எடுத்துச்செல்ல முடியாத நிலையில் கொழும்பில் அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உடல் தகனம் செய்யப்பட்டது.

பின்னர் அவருடைய அஸ்தி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆயர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொழும்பில் அருட்தந்தையினுடைய இறுதி நிகழ்வுகள் நடைபெற்ற தினத்தன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் அருட்தந்தையின் குடும்ப அங்கத்தவர்களோடு யாழ் குடாநாட்டில் பணியாற்றும் குருக்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டு அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடினார்கள்.

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் ஸ்ரனி அடிகள்



மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அமதி) அடிகளார் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழா காண்கின்றார். அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டத்தின் சார்பில் யூபிலி விழா வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. (அடிகளார் பற்றிய விரிவான தகவல்கள் 7ம் பக்கத்தில் உள்ளது.)

## இஸ்லாமிய நாட்டில் ஆலயம் கட்ட காணி அன்பளிப்பு

இஸ்லாமிய நாடான பகரீனில் கத்தோலிக்க ஆலயம் கட்டுவதற்கான காணியை அந்நாட்டு மன்னர் கமாட் பின் இசா அல் - கலிவா வழங்க முன்வந்துள்ளார். 800,000 மக்களைக் கொண்ட இந்நாட்டில் 80% வீதமானவர்கள் முஸ்லிம்கள். 10% வீதமானவர்களே கத்தோலிக்கர்கள். இக்கத்தோலிக்கர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஆகும்.

வளைகுடா நாடுகளிலேயே 70 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க ஆலயத்தைக் கட்டிய முதல் நாடு பகரீன் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த டிசம்பர் மாதம் திருத்தந்தை அவர்கள் இவ்வாலயம் கட்டுவதற்கான வேண்டுகோளை மன்னரிடம் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## யூலை மாதம் 26ம் திகதி புனித ஆனாள் திருவிழா




## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 12 - 1933

உதிர்வு 26 - 06 - 2008

**அமரர் திருமதி. ச. ஜேட்றூட் அழகேஸ்வரி**

(முருங்கன் பிட்டி, முருங்கன்.)

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை வைப்பவன் இறப்பினும் வாழ்வான் " (யோவா 11:25)*

எம் குடும்பத்தின் குலவிளக்கே, எம் இதயத்தின் ஒளி விளக்கே, அன்பின் அன்னை நீங்கள். பண்பின் பாதை நீங்கள். பக்தியாய் நீங்கள் சொல்லும் செபம். பாசமாய் உதவிடும் நல்ல மனம். எப்போதும் சிரித்த உங்கள் முகம். என்றைக்கும் உமை மறவோம் அம்மா! பிரார்த்திக்கின்றோம் நேசத்தாயே, உங்கள் ஆத்ம சாந்திக்காய்!

நீங்கா நினைவுகளுடன்,
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்

### 5ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
| --- | --- | --- |
| 09 | | 21 |
| 04 | | 07 |
| 1928 | | 2004 |



**திருமதி. பா. சந்தாக்குட்டி**

[முருங்கன் கமம், முருங்கன்]

தாராள மனத்தோடு இறுதிவரை
தயங்காமல் பணிகளைச் செய்தீரே!
பின்தூங்கி முன்னெழுந்து எங்களை
பேணியே வளர்த்திட்ட பெருந்தகையே!
சான்றோர் வரிசையில் நாம் இருக்க
சத்திய வழிகளைச் சொல்லித் தந்தீர்
அன்பிற்கு இலக்கணமானவரே
ஆண்டவர் அருகில் அமைதி
கொள்ளுங்கள்!



இவரின் பிரிவால் துயருறும்: மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

## யூலை மாதம் 25ம் திகதி புனித யாகப்பர் திருவிழா




இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷ1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது